ஞானம் சென்ரர்
இலங்கை
45 நிமிடம்
(விபரங்கள் 21-ம் பக்கம்)



Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 4 24 – 30 செப்டெம்பர் 1998 முழக்கம்: 193



Gnanam Center




ஐரோப்பா எங்கும் எமது கிளை ஸ்தாபனங்கள் ஆரம்பமாகியுள்ளன. விபரங்கள் மறுபக்கங்களில்.....


## ஐ.நாவில் சந்திரிகா புலிகள் பற்றி ஒப்பாரி

(21.09.98)

தனது நாட்டில் 12 வருடங்களுக்கு மேலாக பிரச்சினைகளை ஏற்படுத்தி வரும் புலிகளை ஆதரிக்க வேண்டாம் என இன்று ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புலிகள் சிறுவர்களை தற்கொலைத் தாக்குதலுக்குப் பாவிப்பதாகக் கூறி தமிழ்ச் சிறுவர்கள் மேல் கரிசனை தெரிவித்த சந்திரிகா ஆனாலும் பல நாடுகள் புலிகளை இயங்க அனுமதிக்கின்றனர் என கவலை தெரிவித்தார்.

(☞ 2ம் பக்கம்)

## கொழும்பில் மற்றுமொரு சீன ஆயுதக் கப்பல்

(21.09.98)

கடந்த வெள்ளிக்கிழமை சீனாவிலிருந்து ஆயுதங்களை ஏற்றி வந்த 'கோடயங்' எனும் சரக்குக் கப்பல் சிறீலங்கா கடற்படையின் பலத்த பாதுகாப்புடன் கொழும்பில் நங்கூரமிட்டுள்ளது. சீனா - சிறீலங்கா அரசுகளுக்கிடையே சிறிய இராஜதந்திர முறுகல்களை ஏற்படுத்திய ஆயுதக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இவ் ஆயுதங்களை சிறீலங்கா, ஈற்றில் கொழும்பிற்கு கொண்டு வரந்துள்ளது.

இவ் ஆயுதங்கள் தொடர்பான விடயங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதால் உளவுத்துறை

(☞ 2ம் பக்கம்)

# யாழ்.குடா புலிகளின் மறைமுக கட்டுப்பாட்டில்!

## இராணுவத் தளபதி ஒப்புதல்

(21.09.98)

யாழ். குடா விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக பெயர் குறிப்பிட விரும்பாத சிறீலங்கா இராணுவத் தளபதி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இன்றைய நிலையில் படையினர் குடாநாட்டைச் சுற்றி தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும், அங்கு எவ்விதமான செயற்பாடுகள் எப்போது இடம்பெற வேண்டும் என்பதை தீர்மானிப்பவர்கள் விடுதலைப் புலிகளே. படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள குடாநாட்டில் படையினர் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் உள்ளேகூட புலிகள் சாதாரணமாக நடமாடுகின்றனர். தமது திட்டங்களை இலகுவாக செயற்படுத்துகின்றனர். எனவே இன்று பேரளவில் மட்டுமே யாழ். குடா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

(☞ 2ம் பக்கம்)

## த.வி.கூட்டணி யாழிலிருந்து விலகுகிறது

யாழ். மாநகரசபையின் நிர்வாக நடவடிக்கைகளில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி விலகிக் கொள்வதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். மேயர் சிவபாலனின் இழப்பு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பேரிழப்பு. யாழ்ப்பாணத்தில் சகஜநிலை இல்லை. அதுவரை கட்சி சகல செயற்பாடுகளையும் இடைநிறுத்தி வைக்குமென விடுதலைக் கூட்டணியின் தேசியப் பட்டியலில் இருப்பவரும், பாராளுமன்ற உறுப்பினருமான நீலன் திருச்செல்வம் கொழும்புப் பத்திரிகையான 'சண்டே லீடருக்கு' வழங்கிய தனது செவ்வியில் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபை செயற்பாடுகள் பற்றி தொடர்ந்து விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. தற்போதைய யாழ். உதவி மேயர் யாழ்.குடாவின் நிர்வாகச் செயற்பாடுகளை கொழும்

(☞ 2ம் பக்கம்)

## புலிகளைத் தோற்கடிக்க வருமானத்தில் 50 வீதத்தினை செலவழிப்போம்

### அமைச்சர் தர்மசிறீ சேனநாயக்கா

(21.09.98)

இன்று நாம் யுத்தத்திற்காக நாட்டு வருமானத்தின் 30 வீதத்தினை செலவு செய்கிறோம். இதன் மூலம் புலிகளைத் தோற்கடிக்க முடியாவிட்டால் வருமானத்தில் 50 வீதத்தினை செலவு செய்தென்றாலும் இவ் யுத்தத்தை வெற்றிகொள்வோம் என குருநாகலில் நடைபெற்ற கட்சியின் கூட்டமொன்றில் பேசிய அமைச்சர் தர்மசிறீ சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

தற்போது யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் தேர்தலை நடத்தமுடியாது உள்ளது. அப்படியே நடத்தினாலும் அதில் நாம் தோல்வியடையமாட்டோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என மேலும் தெரிவித்துள்ளார்.

அங்கு உரையாற்றிய சிறீலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை, ஐ. தே. கட்சி எம்மிடம் நாட்டை ஒப்படைத்தபோது பிரிந்திருந்த இரு நாட்டையே ஒப்படைத்தது. ஆனால், நாம் முப்படைகளையும் பயன்படுத்தி சூரியக்கதிரை ஆரம்பித்து யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தோம். இன்று வன்

(☞ 2ம் பக்கம்)




26.09.98 அன்று தியாகி திலீபனின் நினைவுநாள் தமிழர்களால் உலகம் முழுவதும் அனுஸ்டிக்கப்படுகின்றது.

## பாரிஸில் காணாமல்போன இளைஞன் சடலமாக ஆற்றிலிருந்து மீட்பு

(21.09.98)

கடந்த 8 ஆண்டுகளாக பாரிஸில் வசித்துவந்த, யாழ்ப்பாணம் கோப்பாய் மத்தியில் கற்பகப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த 31 வயதுடைய ராஜதுரை ஜெயப்பிரகாஷ் என்பவரை கடந்த 11.09.98 வெள்ளிக்கிழமையில் இருந்து காணவில்லை.

பிரான்சில் தனது தூரத்து உறவினர்களுடன் Issy Les Moulinea (92) எனும் பிரதேசத்தில் வசித்துவந்த இவர், 'வெள்ளிக்கிழமை இரவு 9.15 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். இதன் பின் அவர் வீடு திரும்பாததையிட்டு இவரது உறவினர்கள் கலக்கமுற்றனர்.

(☞ 2ம் பக்கம்)

## வவுனியாவில் பிரித்தானிய 'பொப்' கலைஞர்கள்

(21.09.98)

ஐ.நா. சிறுவர் நிதியத்தின் போலியோ எதிர்ப்பு நாட்களை முன்னிட்டு பிரித்தானியாவைச் சேர்ந்த பிரபல பொப் பாடகர்கள் இருவர் வவுனியா நகருக்கு சென்றுள்ளனர்.

அங்கு இடம்பெற்ற போலியோ தடுப்பு நடவடிக்கைகளை பார்வையிட்ட அவர்கள், பொதுமக்கள் பலரையும் சந்தித்து உரையாடினர். இவர்களின் இந் நிகழ்ச்சிகளை படமாக்க உள்ளூர் நிறுவனங்களுக்கு ஐ.நா. சிறுவர் நிதியம் மறுப்புத் தெரிவித்திருந்தது. சர்வதேச வர்த்தக உடன்படிக்கையொன்றின் கீழ் பாட்டில் இந் நிகழ்ச்சிகள் இடம்பெற்றதால் இது தொடர்பான விளம்பரப் படங்களை மட்டுமே சிறுவர்நிதியம் அனுமதித்திருந்தது.

இதேவேளை யாழ். மாவட்டத்திற்கான தமது விஜயத்தை

(☞ 2ம் பக்கம்)


உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது

Kumars Shop
S. A. R. L.

80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.

90, Bld. Rochechouart,
75018 Paris. Mo: Anvers ou Pigalle
Tel: - Fax: 01 42 23 03 10
ou 01 42 59 53 91

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
R. ராஜசேகரன்
Grundtvigs Vej - 38, 1.th
7400 Herning, Denmark.
Tel: 97 12 03 76 - 97 21 76 49

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கொழும்பில்...

யின் எச்சரிக்கையின் பிரகாரம் கொழும்புத் துறைமுகத்திற்கு பலத்த பாதுகாப்புக்களுடனேயே கொண்டுவரப் பட்டுள்ளது.

சுமார் 80 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இராணுவ தளவாடங்களை புதிதாக சிறீலங்கா சீனாவிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது.

---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## யாழ். குடா...

அண்மையில யாழ். குடா மேயருக்கு வைக்கப்பட்ட குண்டானது விடுதலைப் புலிகள் எவ்விதமான தீவிர கண்காணிப்புப் பகுதிக்குள்ளும் ஊடுருவி தமது தாக்குதல்களை நடாத்திவிட்டு பாதுகாப்பாக அங்கிருந்து தப்பியும் செல்லமுடியும் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர். இத் தாக்குதல் யாழ். குடாவினுள் அவர்கள் தமது செயற்பாடுகளை மேலும் விஸ்தரிப்பதற்கு ஒரு வெற்றியுடன் கூடிய ஊக்குவிப்பை வழங்கியுள்ளது என்றே கருதவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ஐ.நாவில்...

புலிகளை வசைபாடும் பல பொய்யான விபரங்களை தனது உரையில் தெரிவித்த சந்திரிகா, புலிகள் ஆயுதம் வாங்க சர்வதேச் வலைப்பின்னலை வைத்துள்ளது என் குற்றமும்சாட்டியுள்ளனர்.

மோசமான குற்றங்களைப் புரிபவர்கள் அகதி அந்தஸ்து கோருவதை தவிர்க்கவேண்டும் எனக் கோரிய அவர் தனது உரையின் பிரதான விடயமாக புலிகளையே தேர்வு செய்திருந்தார்.

இன்று ஜனாதிபதி கிளின்டன் உட்படபலர் கூடியிருந்த சபையின் முன் சந்திரிகா ஆற்றிய உரை தமிழர்களின் போராட்டம் சர்வதேச மயப்படுவதை சுட்டிக்காட்டுகின்றது என அவதானிகள் கருதுகின்றனர்.

அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசேட ஆய்வுக் குழுக்களாலும், ஐ. நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியாலும் சிறீலங்கா அரசு மீது குற்றம்சாட்டியுள்ளது தெரிந்ததே.

---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## த.வி.கூட்டணி...

பில் இருந்தே மேற்கொள்வார். யாழ்.குடாவில் சாதாரண நிலை தோன்றும்வரை, யாழ். மாநகர சபையின் ஆணையாளரே மாநகர சபையின் செயற்பாடுகளை கவனிப்பார் என மேலும் தனது செவ்வியில் தெரிவித்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பாரிசில்...

சனிக்கிழமை காலை இவர் இருந்த வீட்டில் இவரது **சிறிய** கைப்பபையில் இருந்து தாளொன்றைக் கண்டெடுத்த போது, வசித்த வீட்டு உரிமையாளரின் பெயருக்கு, 'இனி என்னைத் தேடவேண்டாம், என்னை மன்னிக்கவும்.' என்ற குறிப்புடன் இவரது வதிவிட அனுமதி அட்டை (விசா) தவிர்ந்த அனைத்து ஆவணங்களும், கார் மற்றும் வேலையிடத்து சாவிக்கொத்துக்களும் இருக்கக்கண்டு வீட்டார் பொலிசில் முறையிட்டுள்ளனர்.

வியாழக்கிழமை 17.09.98 அன்று Pont de Sevres ற்கு அருகாமையில் செயின்நதிநீரில், முகம் சரியாக அடையாளம் காணப்படமுடியாத நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட சடலம், சட்டைப் பையிலிருந்த வதிவிட அனுமதியட்டையின் உதவியினால், காணாமல்போன இந்நபரினது என பொலிசாரினால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவரது மரணத்திற்கான காரணம் சரியாக அறியப்படாத போதிலும், ஈழமுரசிற்குக் கிடைத்த தகவல்களின்படி, வெள்ளிக்கிழமை காலையில் இவருடன் வேலைசெய்யும் வெளிநாட்டவர்களிடம் 'இன்றுடன் முடிந்தது, இன்றே கடைசி' என இவர் கூறிச் சென்றுள்ளதாகத் தெரிகின்றது.

தனது தோற்றத்தைப் பற்றிய, தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையும் இதனால் திருமணம் செய்ய விரும்பாததும், குடும்பத்தினரால் திருமணத்திற்கு வற்புறுத்தப்பட்டதும் இவரது தற்கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

அதேவேளை பணப் பிரச்சினை காரணமாகவோ, வேறு காரணங்களுக்காகவோ இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாமென உறவினர்கள் சந்தேகம் கொண்டாலும், பொலிசாரின் அறிக்கைகளின்படி, 95 விகிதம் இவர் தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நான்கு சகோதரிகளையும், இரண்டு சகோதரர்களையும் கொண்ட இவருக்கு, இவரின் மூத்த சகோதரர் 83-ம் ஆண்டில் தற்கொலைசெய்துகொண்டார் என்பதும், மற்றைய சகோதரர் 97-ம் ஆண்டில் இனம் தெரியாதோரால் கொலை செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சு அரசாங்கத்தினால் அகதி அந்தஸ்த்து அங்கீகரிக்கப்பட்டு, மாதாந்தம் 8000 பிராங்குகள் சம்பளம் எடுத்ததுடன் கார், கைத்தொலைபேசி என வசதியாகவே வாழ்ந்த இவரின் துயர முடிவிற்கு சரியான காரணத்தை பொலிசார் தொடர்ந்தும் ஆராய்ந்து வருகின்றனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வவுனியாவில்...

இவ் இரு பொப் கலைஞர்களும் கைவிட்டுவிட்டதாக அறிவித்துள்ளனர். இதற்கு நல்லூர் குண்டு வெடிப்பைக் காரணம் காட்டியுள்ள ஐ.நா.சிறுவர் நிதியம் நான்கு நாட்கள் யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகளை இவர்கள் பார்வையிட இருந்ததாகவும் அறிவித்துள்ளது.

போலியோ தடுப்பூசிகளை ஐ.நா. சிறுவர் நிதியம் வன்னிப் பகுதிகளில் மேற்கொள்வதற்காக. கடந்த 18.09.98-ம், 19.09.98-ம் திகதிகளில் போர் நிறுத்தம் ஒன்றை விடுதலைப் புலிகள் அமுல்ப்படுத்தி இருந்தனர்.

ஆண்டுதோறும் இவ்வாறான போர் நிறுத்தங்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளை...

னியில் பாதை அமைத்து வருகின்றோம். இதிலும் அடுத்த வருடம் நாங்கள் வெற்றிபெற்று விடுவோம். ஐ.தே.கட்சி செய்ய முடியாமல் இருந்த சாதனைகளை எல்லாம் இன்று எமது ஆட்சிலேயே ஏற்படுத்தியுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

**வேலைக்கு ஆட்கள் தேவை**

**Comptablité, Marketing Commercial, Standarist**
**இந்த வேலையில் அனுபவம் உள்ளவர்கள் ஆங்கிலம், பிரெஞ்சு மொழி நன்றாகத் தெரிந்தவர்கள் உடன் தேவை.**

**தொடர்புகளுக்கு: Gnanam Telecom Centre**
**195 Rue du Fbg. St.Denis, 75010 Paris.**
**Tel: 01 46 07 15 23 - 01 46 07 09 96**

# மரண அறிவித்தல்



## கதிர்வேற்பிள்ளை கருணைராஜ்

கதிர்வேற்பிள்ளை கருணைராஜ் 12.09.98 ல் (சனிக்கிழமை) சிவபதம் அடைந்துள்ளார். இவர் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக்கொண்ட அமரர் உதவிப் பொறியியலாளர் நாகலிங்கம் கதிரவேற்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், இந்துமதியின் அன்புக் கணவரும், காலம் சென்ற வியாபாரி மூலை சின்னையா சிவச்செல்வம் தம்பதியினரின் மருமகனும், நிலானா, நிஷானாவினதும் அன்புத் தந்தையும், முன்னாள் மகாராஜா ஸ்தாபன பௌதீகவியலாளரும், நெதர்லாந்து 'லிம்போர்க்' முருகனாலய பரிபாலன சபைத் தலைவரும், நெதர்லாந்து 'சிற்றாட்டை' வதிவிடமாகக் கொண்டவருமாவார்.

அன்னார் தயாளராஜ், சத்தியகுமாரன், இந்திரகுமார், வதனவள்ளி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சச்சிதானந்தம் விஜயலஷ்மி, சைலாஜினி, சிவகுமாரன், செல்வகுமாரன், சூரியகுமாரன், நந்தகுமாரன் ஆகியோரின் அருமை மைத்துணரும், வசந்தி, குகனேஸ்வரி, வசந்தி மனோகரியின் அன்பு சகலனும்; அபிலாஷின் பெரியப்பாவும், நிரோஷன், சிந்துபைரவி, பிரவீனா, நிரோஷா, பிரஷாந், அபிராமி, பகீரதி, அஞ்சனா, கீர்த்தனா, ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை (18.09.98)வரை மாலை 16.00 மணிமுதல் 20.00 மணிவரை பொதுமக்கள் அஞ்சலிக்காக 'Massland Mortuarium' Heinsweg என்னும் இடத்தில் வைக்கப்பட்டு சனிக்கிழமை (19.09.98) காலை ஊர்வலமாகப் புறப்பட்டு அன்னாரின் இல்லம் வந்தடைந்து மீண்டும் ஈமைக் கிரியைகளுக்காக `Crematorium Nedemaaf Vouner Hof' Geleen என்னும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இவ் ஈமைக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களிற்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*தகவல்: மனைவி, பிள்ளைகள்,*
*தாய், சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர்*
*தொலைபேசி இல: 0031464525063*

Pub

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

**ERRANCES TRAVELS**
**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,670 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# பிலிப்பைன்சில் கப்பல் விபத்து 300 பேர் மீட்கப்பட்டனர்

பிலிப்பைன்சின் தலைநகர் மணிலாவிலிருந்து மத்திய பகுதிதீவான செபுவிற்கு 450 பயணிகளுடன் சென்ற கப்பல் தென் சீனக்கடலில் பட்டன்காஸ் பிராந்தியத்தில் புயல், கடல் கொந்தளிப்பு காரணமாக கவிழ்ந்ததில் நூறுபேர்வரை கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.



கப்பல் புறப்பட்டு 60 மைல்கள் சென்ற நிலையில் கடும் அலைகளால் தாக்கப்பட்டுள்ளது. இதற்கு தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் 13734 தொன் பாரம் கொண்ட பிரின்ச் ஸ் ஒப் ஓரியென்ட் என்னும் கப்பல் கடலில் மூழ்கத் தொடங்கியது. மோசமான காலநிலை பற்றியும் கடுமையான கடல் கொந்தளிப்பு பற்றியும் ஏற்கெனவே கப்பல் நிறுவனத்தினர் அறிந்திருந்தனர். இவ் வகையான மோசமான காலநிலையில் 500 தொன்களுக்கு குறைவான எடை கொண்ட எந்தக் கப்பலும் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கப்பலில் பயணம் செய்தவர்களை பாதுகாப்பு உடைகளை அணியும்படி ஏற்கனவே கப்பல் சிப்பந்திகள் அறிவித்திருந்தனர். ஆனால், கப்பல் அலைகளால் தாக்கப்பட்டபோது அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட போது அநேகமான பயணிகள் நித்திரையில் ஆழ்திருந்தனர் எனக் கூறப்படுகின்றது. அலைகளால் தாக்கப்பட்டு கப்பல் மூழ்கிக் கொண்டிருந்ததால் அதைக் கைவிடுவதைத் தவிர வேறுவழியற்ற நிலையில் பயணிகளை கடலில் குதித்து தப்புமாறு கூறப்பட்டது.

பிலிப்பைன்ஸ் கடற்படையின் கப்பல்களும், மீன்பிடிப் படகுகளும் தேடுதல்களில் ஈடுபட்டு 300-ற்கு மேற்பட்ட பயணிகளை காப்பாற்றியுள்ளன. மேலும் நூறுக்கு மேற்பட்ட பயணிகளும், சிப்பந்திகளும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. பிலிப்பைனின் 7000 தீவுகளை கப்பல் பயணங்களே தொடர்புபடுத்துகின்றன என்பதும் கடந்த காலங்களில் பல படகு விபத்துக்கள் நடந்துள்ளதும் 1987ம் ஆண்டு உலகின் மிகப் பெரும் படகு விபத்தான டோனாபாஸ் என்னும் கப்பல் மூழ்கியதில் 4000 பயணிகள் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# புதிய மேயரை எதிர்பார்த்திருக்கும் தந்தை செல்வா

யாழ். குடாவில் அமைக்கப்பட்டுள்ள தந்தை செல்வாவின் உருவச் சிலையை திரை நீக்கம் செய்து திறந்துவைக்க முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்பிரல்மாதம் முன்னாள் யாழ்.மேயர் சரோஜினி யோகேஸ்வரனால் திறந்து வைக்கப்பட இருந்த இவ் உருவச்சிலை அவர் கொல்லப்பட்டதனால் திறக்க முடியவில்லை.

பின்னர் பதவியேற்ற சிவபாலன் இச் சிலையை அடுத்த மாதம் 2-ம் திகதி திறந்துவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அதற்கு முன் அவரும் கொல்லப்பட்டுவிட்டார். இதனால் அடுத்துவரும் மேயராவது அதனைத் திறந்துவைப்பாரா என கூட்டணியினர் அங்கலாய்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஐ.நா. செயலரின் யோசனைகளை ஈராக் ஏற்றது

ஈராக்கிற்கும், ஐநா. ஆயுத பரிசோதனைக் குழுவிற்கும் இடையே தோன்றியுள்ள இழுபறிநிலையை தீர்ப்பதில் ஈடுபட்டுள்ள ஐ.நா பொதுச் செயலர் கடந்த சனியன்று வெளியிட்ட திட்டத்தை ஈராக் ஏற்றுக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது. 'திரு கோபிஅனான் அவர்கள் சில யோசனைகளை முன்வைத்துள்ளதாக அறிகிறோம். அவற்றில் எமக்கு பூரண திருப்தி' என ஈராக்கிய ஜனாதிபதி ஆலோசகர் அமர் அல் ஷாதி பத்திரிகையாளிரிடம் தெரிவித்தார். ஐ.நா செயலாளர் நாயகத்திற்கும், ஈராக்கிற்கும் இடையே தொடர்புகள் பாக்தாத்தில் நிற்கும் அவரது விசேட தூதுவர் பிரகாஷ்ஷா மூலம் தொடர்கின்றன. வெகு விரைவில் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று அவரைச் சந்திப்பதற்காக நியூயோர்கிற்கு அனுப்பப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி ஈராக் ஐ.நா.வின் ஆயுதப் பரிசோதனைக் குழுவினருக்கான உதவிகளை நிறுத்திக் கொண்டது. பாக்தாத்தின் இம் முடிவினை மீள் பரிசோதனை செய்யும் நிகழ்விற்காகவே கோபி அனான் சில யோசனைகளை முன்வைத்துள்ளார். அவரது திட்டங்களை பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் சீனா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகள் வரவேற்றுள்ளன. ஈராக் உடன் தொடர்ந்தும் உறவுகளைப் பேணும் நாடுகள் இவை என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை பிரித்தானியாவும், அமெரிக்காவும் இவ் யோசனைகளை எதிர்த்து வருகின்றன. கடந்த 9ம் திகதி ஈராக் மீண்டும் ஆயுத பரிசோதர்களுக்கான ஒத்துழைப்பை வழங்கும் வரை இதுவரையுள்ள தடைகளை மேலும் நீடிக்க வேண்டும் என ஐ.நா பாதுகாப்புச் சபை வாக்களித்திருந்தது. இது பற்றி அமெரிக்க அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில் நடந்த வாக்களிப்பானது ஒரு முக்கியமான கட்டம். இதேவேளை அமெரிக்கா ஈராக் தொடர்ந்தும் ஒத்துழைக்க மறுக்குமானால் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள அமெரிக்கா தயங்காது எனத் தெரிவித்துள்ளனர்.

# தொல்லை தவிப்புக் குழு பெயர் மாற்றம்

சிறீலங்கா அரசினால் உருவாக்கப்பட்டிருந்த 'தொல்லை தவிப்புக் குழு' தனது பெயரை 'இம்சைகள் தொடர்பான விசாரணைக்குழு' எனப் பெயர்மாற்றம் செய்துள்ளது.

அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடியின் தலைமையில் இயங்கிவந்த இக்குழுவே தனது பெயரை மாற்றம் செய்துள்ளது. இதுவரை இவர்களிடம் 100ற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# காமன்வெல்த் கிரிக்கெட் முடிவுகள்

அண்மையில் கோலாலம்பூரில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டிகளின்போது முதல்தடவையாக கிரிக்கெட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. நான்கு நாடுகள் வீதம் நான்கு குழுக்களாக 16 அணிகள் பங்குபற்றியுள்ளன. அவிஸ்திரேலியா, நியுசிலாந்து, சிம்பாவே தவிர மற்றைய டெஸ்ட் அந்தஸ்து கொண்ட நாடுகள் 5-ம் தமது முழு அணியை அனுப்பவில்லை. இதே காலப்பகுதியில் கனடாவில் நடைபெற்ற சகாரா கிண்ண போட்டியில் இந்தியாவும் பாகிஸ்தானும் கலந்து கொண்டதால் அவ்வணிகளால் முழு அணியை அனுப்பமுடியவில்லை.

இந்நிலையில் இந்திய அணியில் ஜடஜா, இளம்புயல் டெண்டுல்கர், சுழல்பந்து சூரர் கும்பிளே, அதிரடி ரொபின்சிங் ஆகியோர் இடம்பெற்றிருந்த போதும் போட்டிகளில் வெற்றி கொள்ள முடியவில்லை. தென்னாபிரிக்கா அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, சிறீலங்கா ஆகிய 4 அணிகளும் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றபோதும் தென்னாபிரிக்காவும், அவுஸ்திரேலியாவுமே இறுதிப்போட்டியில் ஆடும் வாய்ப்பைப் பெற்றன.

தங்கம் விளையும் நாடான தென்னாபிரிக்காவே இறுதியாட்டத்தில் தங்கப் பதக்கத்தை பெற்றுக்கொண்டது. அவுஸ்திரேலியா வெண்கலத்தையும் நியுசிலாந்து வெள்ளியையும் பெற்றுக்கொண்டன.

# சகாரா தொடரை வெற்றிகொண்ட பாகிஸ்தான்

கனடா ரொரன்றோ நகரில் 5 போட்டிகளைக்கொண்ட மூன்றாவது சகாரா தொடர் 12.09.98 ஆரம்பமானது.

முதல் ஆட்டத்தை இந்திய அணி வெற்றிகொண்டபோது இவ்வாண்டில் பல சாதனை வெற்றிகளை ஏற்படுத்திய அசாருதீன் தலைமையிலான இந்திய அணியே வெல்லும் என கிரிக்கட் ஆய்வாளர்கள், ரசிகர்கள் எதிர்பார்த்திருந்தவேளை நடைபெற்ற மற்றைய ஆட்டங்களில் பாக்கிஸ்தானே அபாரமாக ஆடி தொடர்ச்சியான வெற்றிகளை பெற்றுக்கொண்டது. அணுகுண்டு சோதனையால் பாதிக்கப்பட்டுள்ள இருநாட்டு உறவுநிலைக்கு மத்தியில் இப்போட்டி பெரிதும் எதிர்பார்ப்புடன் நோக்கப்பட்டது. காமன்வெல்த் போட்டிகளால் இந்திய அணி பிரிந்திருந்தது. ஒரு வெற்றியென்பது ஒற்றுமையுடன் செயல்பட்டாலே பெறமுடியும் என்பதை உலகிற்கு பறைசாற்றுவதாகவே சகாராகிண்ண முடிவும், காமன் வெல்த் முடிவும் இந்திய அணிமூலம் புரிய வைக்கிறது. 4-1 என்று இம்முறை வெற்றிகொண்ட சகாராபோட்டிகளுடன், பாக்கிஸ்தான் அணி தென்பட்டைந்தாலும், வீரர்கள் லஞ்சம் பெற்று விளையாடுவதாக சில வீரர் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளமை அணியின் வெற்றியை பலயிழக்கவே செய்கிறது. உண்மைகள் நிரூபிக்கப்படும்போதுதான் வெற்றிகள் வெற்றிகளாக அமையும்.

# யாழ். குடாவிற்கு புதிய அதிகாரிகள் நியமனம்

யாழ். நகரில் புதிய பொலிஸ் அதிகாரியாக புலனாய்வுத் துறை அதிகாரியும், பொலிஸ் அத்தியட்சகருமான ஜி.என் பற்றிகிரிகொரள நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர சபையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட சந்திரா பெரேராவின் இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். கொல்லப்பட்ட பொலிஸ் தலமையக இன்ஸ்பெக்டர் மோகனதாசின் இடத்திற்கு ஏ.கே.மார்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை யாழ். மாவட்டத்தின் இராணுவத் தளபதியான கொல்லப்பட்ட பிரிகேடியர் சுசுந்தமென்டிஸ்சின் இடத்திற்கு புதிய தளபதியாக உதயனி முனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

# இது குசும்புங்கோ...

★ மக்கள் எமக்குக் கொடுத்த ஆணையை உதாசீனம் செய்து மக்களை ஒருபோதும் விட்டுச் செல்லமாட்டோம்.

— மாவை சேனாதிராசா வீரகேசரியில்

★ மேயர் சிவபாலன் ஒரு கலைப் பொக்கிஷம். தலைவர் அமிர்தலிங்கமும் ஒரு கலைப் பொக்கிஷம். நாம் இப்போது இரு கலைப் பொக்கிஷங்களை இழந்துவிட்டோம்.

— ஆனந்தசங்கரி வீரகேசரியில்

★ யாழ். நகரில் மக்களும் படை வீரர்களும் மிக ஐக்கியத்துடனும் சகோதர உணர்வுடனும் இணைந்து வாழ்வதனை நேரில் கண்டேன். துக்கத்தில் ஆழ்த்தப்பட்ட மக்களுக்கு எமது காவல் படையினர் மிக ஆறுதல் கூறி கண்ணியமாக தங்களது கடமைகளை செய்வதையும் பார்த்தேன்.

— அஸ்வி மௌலானா பத்திரிகையாளர்களிடம்

★ யாழ்ப்பாண மக்களின் துயர் துடைக்க தெற்கில் உதித்த மாமனிதர். இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகியிருந்த மக்களை விடிவுப் பாதைக்கு இட்டுச் சென்றார். இவர் யாழ்ப்பாண மக்களின் விடிவெள்ளியாகவும் கலங்கரை விளக்கமாகவும் செயற்பட்டார்.

— சுசந்த மென்டிஸ் கொல்லப்பட்டதன் பின் திசநாயக்க தினகரனில்


கம்சியா வாகன சேவை

புத்தம் புதிய வாகனம்



உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

Tel: 01 30 63 08 62
06 13 12 95 62

# ஆறு நாட்கள் - நாற்பது நகரங்களினூடாக நடைபெற்ற பேரணி

அகதிகளை நாட்டைவிட்டு வெளியேற்றக்கூடாது எனக் கோரும் மாபெரும் பேரணி ஒன்று கேல்ன் நகரில் 19.09.98 சனியன்று நடைபெற்றது. இதில் சுமார் 2000-ற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். இதில் தமிழர்களும் பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கேல்ன் நகரின் மத்திய தெருக்களினூடாகச் சென்ற இப் பேரணி சுமார் 2 மணி நேரமாக நடைபெற்றது. பேரணியின் இறுதியில் அமைப்புகளின் பிரதிநிதிகளின் பேச்சுக்கள் இடம்பெற்றன. கடந்த மாதம் 14—ம் திகதி ஆரம்பித்த இப் பேரணி 40 நகரங்களுக்கூடாக கடந்த சனியன்று கேல்ன் நகரை வந்தடைந்தது. 20.09.98 ஞாயிறன்று கேல்ன் நகரில் நடைபெற்ற பேரணியின் மாநாட்டுடன் அனைத்தும் நிறைவுபெற்றன.

அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டாலும் அவர்களின் சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பக்கூடாது என்பதே இப் பேரணியின் முக்கிய நோக்கமாகும்.

இப் பேரணியை பிறேமன் மனித உரிமைச் சங்கம், ஜேர்மனி உலக தமிழர் இயக்கம் ஆகியவை உட்பட அகதிகள் தொடர்பான ஐம்பதிற்கும் மேற்பட்ட அமைப்புகள் ஒழுங்கு செய்திருந்தன.

*வீ.ஆர். வரதராஜா*

# யுத்தம் வேண்டாம் - சிங்கள மக்கள் -

யுத்தத்தின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது, அரசியல் தீர்வு ஒன்றே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரேவழியென சிங்கள மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞான பீட தலைமைப் பேராசிரியரின் தலைமையில் கடந்த ஒரு மாத காலமாக சுமார் 2000 சிங்கள மக்களிடம் நடைபெறும் இந்த யுத்தம் பற்றிய கருத்துக்கள் அறியப்பட்டன. கேட்கப்பட்ட அனைவருமே யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமென்றே கோரியுள்ளனர்.

அரசின் இந்த யுத்தத்தினால் தமது இனம் அழிக்கப்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளனர். பொருளாதாரங்கள் வீணடிக்கப்பட்டு அழிக்கப்படுவதாகக் கூறியுள்ளனர்.

# பொலிசாரினால் இளைஞர்கள் சித்திரவதை, கொலை

கோப்பாய்ப் பகுதிகளில் பல கொள்ளைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு சிறீலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட 7 பேரில் ஒருவர் கொலை செய்யப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த உதயகுமார்(28) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே கொல்லப்பட்டவர் ஆவார். கொள்ளை அடிப்பவர்கள் எனக்கூறி கைது செய்த பொலிசார் இவர்கள் மீது மேற்கொண்ட கொடுமையான சித்திரவதையிலேயே இவர் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

இதேவேளை ஏனைய ஆறு பேரும் பலத்த அடிகாயங்களுடன் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தப்பி ஓடாதவண்ணம் பொலிஸ் பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# செங்கலடித் தாக்குதல் 100–ற்கு மேற்பட்ட புலிகள் பங்குகொண்டனர்

கடந்தவாரம் செங்கலடியில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலில் நூற்றுக்குமேற்பட்ட புலிகள் பங்குபற்றியதாக செங்கலடி இராணுவ முகாமின் சர்ஜன்ட் தெரிவித்துள்ளார்.

செங்கலடி இராணுவமுகாமில் இருந்து ரோந்து நடவடிக்கையில் சென்றுகொண்டிருந்த படையினரை முகாமிற்கு அருகிலேயே வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். எதிர்பாராத இத்திடீர் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கையை செய்தித் தணிக்கை காரணமாக வெளியிட மறுத்த இராணுவத் தளபதி இத் தாக்குதலில் ஒரு விடுதலைப்புலி உறுப்பினர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இத் தாக்குதலில் 3 படையினர் கொல்லப்பட்டது உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், இதன் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புதிய மேயருக்கு என்ன அவசரம்? - ஆனந்தசங்கரி

யாழ். மேயர் கொல்லப்பட்டதை அடுத்து புதிய மேயரை நியமிக்கும் பொறுப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் ஆனந்த சங்கரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். நகர மேயர் பதவிக்கு யாரும் முன்வராவிட்டால் தானே அப்பதவியை பொறுப்பேற்பதாக கூறியுள்ள அவர், புதிய மேயருக்கு இப்போ என்ன அவசரம் எனவும் கேட்டுள்ளார். சிவபாலனின் சாம்பல் காயமுன்னர் இன்னொரு மேயர் இப்போது அவசரமில்லை. யாழ். மாநகர சபை நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டுதானே இருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

# வெகு விரைவில் ஈழமுரசில்... 'யாழ் கோட்டையினுள் 107 நாட்கள்'

விடுதலைப் புலிகளின் முற்றுகையினுள் யாழ். கோட்டை இருந்தவேளை, கோட்டையினுள் அகப்பட்டுக்கொண்ட சிறீலங்காப் பொலிசாரில் 17 பேர் தமிழர்கள். அவர்களில் சிலர் கோட்டைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். தப்பியபொலிசாரில் ஒருவர் 107 நாட்களும் கோட்டையினுள் நடந்த சம்பவங்களை, விமானங்கள் வீசும் உணவுப் பொதிகளுக்காக தாம் பட்ட சிரமங்களை, விடுதலைப் புலிகளின் தாக்குதல்களின் போது ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை, பசிலனினால் நித்திரையின்றி தவித்தது போன்ற பல பயங்கர அனுபவங்களை ஈழமுரசிற்கு தொடராக வழங்குகின்றார்.


35 % முதலீடு - 65 % சேமிப்பு

எமது தொலைபேசி அட்டைகளை விற்பதன் மூலம் அதிக லாபம் பெறுங்கள்!

மிகவிரைவில் எமது விஸ்தரிப்புகள் :
லண்டன்,
சுவிஸ், ஜேர்மனி

| | |
|---|---|
| இலங்கை | 45 நிமிடம் |
| இந்தியா | 45 நிமிடம் |
| கனடா | 100 நிமிடம் |
| லண்டன் | 100 நிமிடம் |
| ஐரோப்பா | 70 நிமிடம் |




92, Rue de Bellville
75020 Paris (M°: Pyrénees)
Tél.: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96

33, Place de Général de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tél.: 03 44 55 41 59 Fax: 03 44 55 42 51

KING Telecom

# ஐ.நா. தூதரகத்தின் பிரித்தானிய பணிமனை முன்பாக நடைபெற்ற விழிப்புப் போராட்டம்

*(18.09.98)*

தமிழீழப் பகுதிகள் மீதான சிங்கள அரசின் நிவாரண வெட்டை நீக்க அழுத்தம் பிரயோகிக்கக் கோரி தமிழர் மனித உரிமை மையமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து இன்று ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான தூதரகத்தின் இலண்டன் பணிமனை முன்பாக விழிப்புப் போராட்டம் ஒன்றை நடாத்தின. காலை 11.00 மணிக்கு ஆரம்பித்த விழிப்புப் போராட்டம் மாலை 5.00 மணிவரை தொடர்ந்தது. வன்னிப் பெருநிலப்பரப்பில் நிவாரண வெட்டை நீக்கக் கோரி மறியல் போராட்டங்களையும், உண்ணாவிரதப் போராட்டங்களையும் மேற்கொண்டு வரும் மக்களுக்கு ஆதரவாக மக்கள் குரல் எழுப்பினர். 'உணவை ஆயுதமாக பயன்படுத்தும் சிறீலங்கா', 'மனித உரிமைகளை படுகொலை செய்யும் சிறீலங்கா' போன்ற வாசகங்கள் பொறித்த பதாகைகளை மக்கள் தாங்கி நின்று விழிப்புப் போராட்டம் மேற்கொண்டனர்.

மாலை 4.00 மணியளவில் தமிழர் மனித உரிமை மையத்தால் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் கையொப்பம் இடப்பட்ட மனு ஒன்று ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான தூதரகத்தின் தலைமைச் செயலகத்திற்கு அதன் பிரித்தானிய தலைமைப் பிரிதிநிதி ஊடாக கையளிக்கப்பட்டது. மாலை 5.00 மணிக்கு விழிப்புப் போராட்டம் நிறைவு பெற்றது.

தாயகத்தில் அரச பயங்கரவாதத்தால் எதிலிகளாக்கப்பட்டு நிவாரண உதவிகள் ஏதுமின்றி பட்டினிச்சாவை எதிர்கொண்டு வரும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் நிறைவேற சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கும் நோக்குடன் இவ்விழிப்புப் போராட்டம் தொடர்ந்து சுழற்சி முறையில் மேற்கொள்ளப்படும் என தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதியாலும், மனித உரிமை மையத்தின் பிரதிநிதியாலும் அறிவிக்கப்பட்டது. இன்றைய விழிப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் இலண்டன் செயலகம் முன்பாகவும், அதனை அடுத்து வரும் வெள்ளிக்கிழமை பிரித்தானிய பிரதமரின் பணிமனை முன்பாகவும், பின் மீண்டும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான தூதரகத்தின் முன்பாகவும் சுழற்சி முறையில் விழிப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

## அகதிகளை திருப்பியனுப்ப வேண்டாம்! கையெழுத்து வேட்டை

டென்மார்க் சிறீலங்கா அரசுகளிடையே செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்போது டென்மார்க்கில் அரசியல் தஞ்சம் கோரிய தமிழ் மக்கள் திருப்பியனுப்பப்படுவது தொடர்ந்தும் நடந்தேறியபடியுள்ளது. இவ்விதம் அனுப்பப்படுவதை உடன் நிறுத்துமாறு கோரியும்; திருப்பியனுப்பப்படும் மக்களுக்கு அங்கு மிகப் பாதகமான சூழல் இருப்பதை அவசரமாகச் சுட்டிக்காட்டவும் டென்மார்க் தமிழர்களின் ஒருங்கமைப்புக்குழு அண்மையில் டென்மார்க்கில் உள்ள வைலை நகரில் கூடியது. இக் கூட்டத்தில் மேலும் பல தமிழர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

திருப்பியனுப்புவதைத் தடுத்து நிறுத்தும் வழிவகைகள் பற்றி பல மணி நேரம் விவாதிக்கப்பட்டது. இறுதியில் டென்மார்க்கில் வாழ்ந்துவரும் சகல தமிழ் மக்களிடமிருந்தும் கையொப்பங்களைப் பெற்று, அக்கையொப்பங்களுடன் பாராளுமன்றம் சென்று, வெளிநாட்டமைச்சரிடம் நேரடியாகவே மனுவைக் கையளிப்பதாக முடிவெடுக்கப்பட்டது.

தற்போது ஒருங்கமைப்புக் குழுவினர் கையெழுத்துக்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## இலண்டனில் தமிழ் மாணவி சாதனை!

இலண்டனில் வசித்துவரும் ஈழத்தமிழ் மாணவியான அமுதவாணி அன்பானந்தர் நடந்து முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் Biology. Chemistry. Maths. German (Language /Litratwre) ஆகிய நான்கு பாடங்களிலும் அதி விசேட சித்தி (A) பெற்று London Royal Free Medical University ல் மருத்துவ படிப்பிற்கு அனுமதி பெற்றுள்ளார்.

நடந்து முடிந்த க.பொ.த சாதாரண பரீட்சையில் 10 பாடங்களிலும் A தரத்திலான சித்திகளை பெற்ற இவர், அண்மையில் வீணை அரங்கேற்றத்தையும் மேற்கொண்டார்.



இலண்டனில் தெரிவு செய்யப்படும் அதி சிறந்த 25 மாணவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கூரைகளும் தீவிர சோதனையில்

யாழ். குடைவில் புதிதாகக் கட்டப்பட்ட அரச, தனியார் கட்டடங்கள் அனைத்தும் திவீர சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக சிறீலங்கா படை வட்டாரங்களை ஆதாரம்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

அண்மையில் புதிதாக புனரமைக்கப்பட்ட மாநகரசபை கட்டடத்தில் கூரைப் பகுதியில் வைத்த குண்டொன்று வெடித்ததை அடுத்தே இப் புதிய திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை கடந்த 15.09.98 செவ்வாயன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இராணுவ உயரதிகாரிகள் கலந்துகொள்ள இருந்த மணடபம் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

கூட்டம் நடைபெற சற்று நிமிடங்களிற்கு முன் அங்கு வந்த விசேட குண்டு செயலிழக்கும் பிரிவினரால் கட்டடம் முழுவதும் சல்லடை போட்டுத் தேடப்பட்டது. விசேட கருவிகள் மூலம் கூரைகளும் சோதனை இடப்பட்ட பின்னரே அதிகாரிகள் கட்டடத்தின் உள்ளே சென்று கூட்டத்தை ஆரம்பித்தனர்.

## சிறீலங்கா அரசிற்கு எதிராக வழக்கு

சிறீலங்கா அரச படைகளால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக இதுவரை எவ்வித பதில்களையும் சிறீலங்கா அரசு தரவில்லை. எனவே சிறீலங்கா அரசிற்கு எதிராக மனித உரிமை மீறல் வழக்கொன்றை பதிவு செய்யப்போவதாக 'காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம்' தெரிவித்துள்ளது.

காணாமல் போன தமது பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்பது பற்றிக்கூட தமக்கு எதுவும் தெரியாது. இப்பொழுது செம்மணியில் 400 உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனைத் தோண்டி, புதைக்கப்பட்டவர்களை அடையாளம் காணவும் சிறீலங்கா அரசு முயற்சி செய்யவில்லை. எனவேதான் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக குடாநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.



## செப். 22-ம் திகதி இராஜீவ் காந்தி கொலை வழக்கு

### உச்ச நீதிமன்ற விசாரணை ஆரம்பம்

இராஜீவ் காந்தி கொலைவழக்கின் தீர்ப்பினை எதிர்த்து தூக்குத்தண்டனை பெற்ற 26 தமிழர்களின் சார்பாக உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது நீங்கள் அறிந்ததே. செப்டெம்பர் 15-ம் திகதி டில்லியில் கூடிய உச்சநீதிமன்றம் இவ்வழக்கு விசாரணையை செப்டெம்பர் 22-ம் திகதி எடுத்துக்கொள்வதாக அறிவித்துள்ளது. மூன்று நீதிபதிகளைக் கொண்ட இவ்விசாரணையில் பிரதம நீதிபதியாக தோமஸ் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். 26 தமிழர்களின் சார்பாக சிரேஸ்ட வழக்கறிஞராக என். நடராஜன் அவர்களும், பத்து கனிஸ்ட வழக்கறிஞர்களும் ஆஜராகவிருக்கின்றார்கள்.

இன்றைய நிலையில் 26 தமிழர்களின் உயிர்காக்கவும், இம் மேன்முறையீட்டு வழக்கினை தொடர்ந்து நடத்தவும் 50 லட்சம் இந்திய ருபாய்கள் தேவைப்படுகின்றன. தற்போதைய நிலையில் சேர்ந்துள்ள நிதி சுமார் 25 லட்சம் மட்டுமே. மீதி 25 லட்சத்தினையும் விரைவில் திரட்டி இவ்வழக்கினை தொடர்ந்து நடாத்த புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் உதவிடவேண்டும் என தமிழ் மரணதண்டனைக் கைதிகள் விடுதலைக்கான குழு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது. இதுவரை தமிழர்நிதிக்கு பங்களிப்புச் செய்யாத தமிழ் மக்கள் தாங்கள் வாழ்கின்ற நாட்டின் தமிழ் மரணதண்டனைக் கைதிகள் விடுதலைக்கான குழுவின் பிரதிநிதிகளுடன் தொடர்புகொண்டு தமது பங்களிப்புக்களை வழங்கலாம். எங்கள் மனச்சாட்சியின் ஒவ்வொரு வாசலூடாகவும் இந்திய மண்ணில் தூக்குத்தண்டனை பெற்ற 26 தமிழர்களின் உயிர் காப்போம்.

**இந்நிதியத்திற்கு கரம்கொடுக்க விரும்புவோர் கீழ் வரும் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும்.**

**இலண்டன்:**

முகவரி: தபாற்பெட்டி இலக்கம் 518
Harrow, Ha2, 8XX, London
தொலைபேசி இலக்கம்: 0411947433
அல்லது 01818646782
வங்கிக் க/கு இலக்கம்: 703 66 757
Short Code No -20 96 89

**நோர்வே:**

முகவரி: (Thamilar Nidhi)
Postboks 2941, 5030. Landa's, Norway.
தொலைபேசி இலக்கம்: 90669859
வங்கிக் க/கு இலக்கம்: 5202 05 44805
Thamilar Nidhi - Den Norske Bank

**ஜேர்மனி:**

தொலைபேசி இலக்கம்: 0201 7220 510
வங்கிக் க/கு இலக்கம்: 3324 670
Bankleitzaal 36050105, Sparkassa, Essen, Germany.

**சுவிற்சர்லாந்து:**

தொலைபேசி இலக்கம்: 027 3466 984 அல்லது 0273232062
முகவரி - Postboks 187, 1950 Sion, Switzerland.

**டென்மார்க்:**

தொலைபேசி இலக்கம்: 97 22 42 77

**பிரான்ஸ்:**

தொலைபேசி இலக்கம்: 01 4833 1390

**நெதர்லாந்து:**

தொலைபேசி இலக்கம்: 168 464 012/165 321533

**அமெரிக்கா:**

தொலைபேசி இலக்கம்: 630 924 0540

குறிப்பு: 11.09.98 அன்று தமிழ்ஒலி வானொலியில் தமிழர் நிதிக்கு பங்களிக்க விரும்புபவர்கள் 'Volksbank எனும் வங்கியிலுள்ள வங்கிக் க/கு 40339 -Bankleitzhal 6729220 எனும் வங்கிக் க/கினூடாகவும் தங்கள் பங்களிப்பினை செய்யலாம் எனக் குறிப்பிட்டிருந்தோம். நடைமுறைச் சிக்கலின் காரணமாக தமிழர் நிதி தொடர்பாக இவ் வங்கிக் க/கு நடைமுறையில் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

— தமிழர் நிதி
தமிழ் மரணதண்டனைக் கைதிகள் விடுதலைக்கான குழு.

திருமணவிழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, பிறந்த நாள் வைபவங்களா, மேடை நிகழ்ச்சிகளா இசை மழையில் நனைந்து மகிழ

ஐரோப்பா புகழ்

பாரிஸ்

ஈழநிலா

தொடர்புகட்கு: இயக்குநர் S.S. தில்லைச்சிவம் - Tel: 0140375669

# திருமலை: திட்டமிட்ட குடியேற்றம்

# எல்லாமே பாதுகாப்புக்காகத்தான்!

ஈழத் தமிழர் வரலாற்றில் பிரதான இடத்தைப் பிடித்துக்கொண்டிருந்த திருமலை, தமிழர் உரிமைப் போராட்டத்திலும் தனித்துவமான இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. வடக்கு—கிழக்கு தமிழர் தாயகத்தின் தலைநகராக விளங்கும் திருகோணமலையைச் சிங்கள மயமாக்குவதில் ஜனாதிபதி மட்டத்தில் இருந்தே திட்டமிட்ட செயற்பாடு நடைபெற்று வருகிறது.

நாட்டின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் இருந்தே திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பித்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற திட்டங்கள் இன்றுவரை தொடர்கின்றன.

எங்கு அரச காணிகள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் சிங்கள மக்களைக் குடியமர்த்துவதில் அரச படைகளும், அரச அதிகாரிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும், சிங்கள அரசியல்வாதிகளும், பிக்குமார்களும் என்றுமில்லாதவாறு முனைப்புடன் நீண்ட காலத்திட்டமிடலுடன் செயல்பட்டு வருகின்றனர்.

1953-ல் கந்தளாயில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது இன்று கந்தளாயில் இருந்து சேருவில வரையும், கண்டிவீதி இருமருங்கும், சீனன்குடா, ஆண்டாள் குளம் வரையும், அனுராதபுரத்திலிருந்து பதவி சிறிபுர கோமரன்கடவல, மொறவேவா, கன்னியா வரையும் உள்ள தமிழர் நிலம் முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

திருகோணமலையில் எஞ்சியுள்ள தமிழர் நிலங்களில் கோயில் காணிகள், தனியார்காணிகள், சங்கங்களின் காணிகள் உதாரணமாக இரா.சம்பந்தன் எம்.பி. யின் லிங்கநகர்காணி, திருகோணேஸ்வரம், சனீஸ்வரன், கிருஷ்ணன், வீரகத்தி, சின்னத்தொடுவாய் கோயில் காணிகள் முழுவதும் பெருந்தொகையான சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சின்னத்தொடுவாய் பிள்ளையார் கோயிலுக்குள் (திருக்கடலூர்) சிங்கள மீனவர்கள் மீன்வலை உலர்த்துகின்றனர். மடத்தடி வீரகத்திப்பிள்ளையார் கோயிலுக்குள்ளும், கிருஷ்ணன் கோயிலுக்குள்ளும் வெளியிலும் வைத்து ஓலை, தடிகள், கற்கள், மண் விற்பனை செய்யப்படுகிறது. கோயில் காணிகளில் நிரந்தரக் கட்டடங்கள் அமைத்து கடைகளாக வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அவ்வாறே கோணேசர் தீர்த்தக் கரையும் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

இவ்வாறு அரச காணிகளிலும், தமிழர் நிலங்களிலும் குடியமர்த்தப்படும் சிங்கள மக்களுக்குப் படையினரால் உடனடியாக பாதுகாப்புக்காக ஆயுதங்கள் வழங்கப்பட்டு, ஊர்காவல் படை சம்பளமும் வழங்கப்படுகிறது. அத்துடன் நீர்விநியோகம் போக்குவரத்து என்பனவும் படையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்க அதிபரால் மீளக் குடியமர்வு நிவாரணம், வீடு கட்ட கட்டடப் பொருட்கள், கூரைத்தகடுகள் வழங்கப்படுகின்றன. பிக்குமாரும், அரச சார்பற்ற நிறுவனங்களும் ஏனைய பொதுத் தேவைகளைக் கவனித்துக்கொள்கின்றனர். இவ்வாறு திருகோணமலை நகரின் பெரும்பகுதியும் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

இன்று திருகோணமலையில் பிரதான வீதிகள் இருமருங்கிலும் கரையோரப் பகுதிகளிலும் பெரும்பகுதியும் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. இதற்குப் படையினர் கூறும் காரணம் தங்களின் பாதுகாப்புக்காகவே சிங்கள மக்கள் குடியேற்றப்படுகிறார்கள் என்பதேயாகும். அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே குடியேற்றுவதால் இக்குடியேற்றம் சம்பந்தமாக யாரும் எதுவும் செய்ய முடியாது என்று ஜனாதிபதியே கூறியுள்ளாராம் எனத் தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் திருகோணமலையில் அண்மைக்காலத்தில் பன்குளம், கன்னியா பகுதிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழர்கள் இன்னும் மீளக் குடியமர்த்தப்படாமல் இருக்க சிங்கள குடும்பங்களால் அப்பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறே கடந்த வருடம் 17.10.1997 இல் லிங்க நகரில் இராணுவ முகாம் ஒன்றை அமைத்து அங்கிருந்த 250 தமிழ்க் குடும்பங்களையும் வெளியேறுமாறு படையினர் உத்தரவிட்டனர். அதனை எதிர்த்துத் தமிழ் மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர். எனினும் பயனளிக்கவில்லை. உடன் 40 குடும்பங்கள் பலாத்காரமாக அப்புறப்படுத்தப்பட்டன. இராணுவவேலி அமைத்துவிட்டு மிகுதி மக்கள் மீது வீதித் தடையரண் அமைத்து வீடுகளுக்குரிய ஓலைகள், தடிகள், சீமெந்து, கல், தகரங்கள், மின்சாரம், குடிநீர் பெற முடியாதவாறு தடைவிதித்து வாகனங்கள் மோட்டார் சைக்கிள்கூட — கொண்டு செல்ல முடியாதவாறு தடை செய்யப்பட்டுள்ளது யாவரும் அறிந்த விடயம்.

அது மட்டுமல்லாமல் வெளியேற்றப்பட்ட 40 குடும்பங்களுக்கும் இதுவரை எந்த நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை. அத்துடன் அரச காணியில் அத்து மீறி குடியேறியோர் என்று இம்மக்கள் மீது அரசாங்க அதிபரினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவை இவ்வாறிருக்க, கடந்த இரண்டு வருடகாலமாக இம்மக்களின் வீடுகளுக்கு ஓலை கொண்டு போவது தடைசெய்யப்பட்டதால், வீடுகளை வேயமுடியவில்லை. இதனால் இம்மக்கள் வீடுகளில் இருக்க முடியாது வெளியேறுவதைத் தவிர வேறுவழியின்றி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதற்கு படையினர் கூறும் காரணம், தங்களின் பாதுகாப்புக்காகவே இவர்களை வெளியேற்றுகின்றோம் என்பதேயாகும். இவ்வாறே பாதுகாப்புக்காகவே உப்பாறு மக்களும் கடந்த 18.03.97 இல் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் வீடுகளிலும் உறுதிக்காணிகளிலும் கோயில் நிலங்களிலும் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எந்த பாதுகாப்புக் காரணமும், சமாதானமும் தடையாக இருந்தனவோ அதே காரணங்கள்தான் தமிழ் மக்களின் மீது அவர்களின் அடிப்படை உரிமைகள் மீதே தடைவிதிப்பதற்கும் காரணமாக உள்ளன!

திருகோணமலையில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களின் சொந்த பூமியில் இருந்து வெளியேற்றுவதும், சிங்கள மக்களை பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளிமாவட்டங்களில் இருந்து திருமலைக்கு கொண்டுவந்து குடியேற்றுவதும் தொடருமானால், இன்னும் ஒரு பத்து வருடத்தில் திருகோணமலை தமிழ் மண், தமிழர் தலைநகர், தாயகம் என்ற கதைக்கே இடமில்லாமல் போய்விடும்.

இவ்வாறே திருகோணமலை மின்சார நிலைய வீதியில் புதிய பொதுச்சந்தை ஒன்று நகரசபையால் கட்டப்பட்டது. அது முற்றிலும் தமிழர் வாழும் சூழலில் அமைந்துள்ளது. ஏற்கெனவே திருமலையில் மீன்பிடிவியாபாரம், சந்தை, போக்குவரத்து ஆகிய துறைகள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் பூரண கட்டுப்பாட்டுக்குள் போய்விட்டது. தமிழர் மீன்வியாபாரம், மரக்கறி வியாபாரம் செய்ய முடியாது. தனியார் போக்குவரத்து சேவையில் இணைய முடியாது. ஆகவே தற்போது புதிய சந்தையைத் திறந்து தமிழர் வியாபாரம் செய்யமுடியாது. புதிய சந்தை திறந்தால் பாதுகாப்புக்கும், சமாதானத்துக்கும் பங்கம் விளையும் என்பதே படையினர் விதித்த தடைக்குரிய காரணமாகும். லிங்கநகர் மாதிரி பாதுகாப்புக் காரணமும், சமாதானமும் கருதிச் சந்தையும் படைமுகாமாக மாறினாலும் ஆச்சரியமில்லை.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டு திருகோணமலையில் ஐந்து தமிழ்க்கட்சிகள் அலுவலகங்களை அமைத்துத் தமிழர் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றன என்பது வேடிக்கையான விடயம். அதுமட்டுமன்றி பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவளித்துக் கொண்டு அரசின் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கும் அந்த யுத்தத்துக்கு நிதிதிரட்டும் வெளிநாட்டுப் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் நேரடியாகவே ஆதரவளிக்கின்றனர். இவர்களை வரலாற்றில் எவ்வாறு தமிழ் மக்களால் மறக்கவும், மன்னிக்கவும் முடியும்?

தமிழ் மக்களின் அடிப்படை உரிமை விடயங்களில் கூட தமிழ் கட்சிகளிடம் ஒற்றுமை இல்லை. ஒருவருக்கு ஒருவர் அள்ளி வைப்பதும், நான்முந்தி, நீ முந்தி என அரசைஆதரிப்பதும், பத்திரிகை அறிக்கை விடுவதும் இவர்களின் கைவந்த கலை. வயிற்றுப்பிழைப்புக்கு வழியில்லையெனில், அகதிமுகாமில் தங்கியிருந்தால் தமிழ் மக்களுக்குப் பேருதவியாக இருக்குமல்லவா?

தமிழ் மக்களிடம் தமிழ்க் கட்சிகள் பற்றி அபிப்பிராயம் கேட்டபோது 90% மான மக்கள் தமிழ்க் கட்சிகள் மீது ஆத்திரமடைந்துள்ளனர். திருமலையில் ஒரு தமிழன்பரிடம் கேட்டதற்கு, தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபட்டுத் திருமலையின் இன்றைய பிரதான மண்ணோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளான லிங்கநகர் ஆக்கிரமிப்பு, கோயில் காணிகள் ஆக்கிரமிப்பு, சந்தை திறப்புத்தடை, உப்பாறு வெளியேற்றம், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், மூதூர் பொருளாதாரத்தடை ஆகியவற்றில் எதிர்ப்புக் காட்டி அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்து ஜனநாயக ரீதியிலும் போராட முடியும். ஆனால் எந்தக் கட்சியும் தயாராக இல்லை. உண்ணாவிரதத்தையும் இவர்கள் கேலிக்கூத்தாக்கிவிட்டார்கள் எனத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளை எண்ணிக் கவலைப்பட்டார் அவர்.

*நன்றி: சரிநிகர்*

**"திருகோணமலையில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களின் சொந்தப் பூமியில் இருந்து வெளியேற்றுவதும், சிங்கள மக்களை பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளி மாவட்டங்களிலிருந்து திருமலைக்குக் கொண்டுவந்து குடியேற்றுவதும் தொடருமானால், இன்னும் ஒரு பத்து வருடத்தில் திருகோணமலை தமிழ் மண், தமிழர் தலைநகர், தாயகம் என்ற கதைக்கே இடமில்லாமல் போய்விடும்"**

**அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றங்களால் பறிக்கப்பட்டுவரும் தமிழர்களுக்குச் சொந்தமான பகுதிகளில் திருமலை மாவட்டத்தில் மட்டும் எத்தனை குடியேற்றங்கள் என்று பாருங்கள். 1998 வரையான குடியேற்றங்கள் இவை. இன்னும் புதிதாக பல குடியேற்றங்கள் முளைத்து வருகின்றன.**

| | | |
|---|---|---|
| 1. சிறிமாபுர | 31. கல்லாறு | 61. நிலவுக்கடவேவ |
| 2. அடம்புர | 32. அலிஓலுவ | 62. ஒட்டிசாக்குளம் |
| 3. மிகிந்துபுர | 33. சரசுரா | 63. மன்மநவரச்சி |
| 4. 4-ம் கட்டை | 34. 1ம் 2ம் கொலனி | 64. சிங்கபுர |
| 5. ஆண்டான்குளம் | 35. சிறீபுர | 65. டொக்கியாட் |
| 6. வெல்கம்காரை | 36. மட்கோ | 66. உன்டத் |
| 7. 10-ம் கட்டை | 37. சேருவில | 67. நாச்சிக்குடா |
| 8. மொறகிவலை | 38. கந்தளாய் | 68. 5ம் கட்டை. |
| 9. மயிலவேவ | 39. 13ம் கட்டை | 69. 3ம் கட்டை. |
| 10. நாமல்வத்த | 40. பன்குளம் | 70. மொரவேவ |
| 11. வானலை | 41. செவலபிடிக் | 71. சுமித்ராவகம |
| 12. கிளப்பன்பேக் | 42. மண்டலபுர | 72. மகாவல்கம |
| 13. நாவந்த | 43. சுமதிபுரஷ | 73. அல்லை |
| 14. கமதல்புர | 44. கோமபுர | 74. கொட்டுவே |
| 15. குறிஞ்சாக்குளம் | 45. எல்1, பி1.2. | 75. கல்கட்டுவெல |
| 16. கொறவப்பொத்தான | 46. கல்மேயால | 76. கோம்புக்கட்டுவ |
| 17. 6-ம் கட்டை | 47. சாளியபுர | 77. கல்கனிவெவ |
| 18. 20-ம் கட்டை | 48. அக்போபுர | 78. மோறாவை |
| 19. கமதல்புர | 49. கித்துளுத்து | 79. பொத்தலவெவ |
| 20. புலஸ்திபுர | 50. அருத்ஓயா | 80. குமுக்காவெல |
| 21. கோவில்வத்த | 51. பொலிகண்டி | 81. மீகஸ்வெவ |
| 22. பாரியூற்று | 52. அடம்பன் | 82. தொட்டுவேவ |
| 23. கோவில்கடவல | 53. கல்லறவு | 83. ஆனைக்கட்டி |
| 24. 97 - 98ம் கட்டை | 54. கிம்புள்பிட்டியாவ | 84. கரைந்தசம |
| 25. சீனிபாவை | 55. மகாதீவுல்வேல | 85. பெக்கிலீகடவேவ |
| 26. ஜெயந்திபுர | 56. வேட்டைக்குளம் | 86. தெஹிவிய |
| 27. ஜயபுர | 57. மல்கிபிரிட் | 87. சமந்தபுர |
| 28. தெகிவத்தை | 58. 98ம் கட்டை | 88. டாக்கிரமபுர |
| 29. நிலாப்பவை | 59. லங்கிரிகடவைப்பு | 89. கிரிச்சண்டுகாமகிகல |
| 30. அரிப்பு | 60. கோமரல்கவெவ | 90. 97-92-93ம் கட்டை |


சிவாசினி வாகன சேவை
Chivashini Transport
வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 / 0614424113 / 01 42 05 44 04
டிஸ்னி றெஸ்றோறன்ட்


# வரலாறு உருவாக்கிய முன்னோடியே பிரபாகரன்

*(விடுதலைப் புலிகளின் அரசியல் பீடப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் கொழும்பு 'சண்டே லீடர்' வார ஏட்டிற்கு வழங்கிய செய்தியின் தமிழாக்கம். சென்றவாரத்தின் தொடர்ச்சியை இங்கே தருகின்றோம்)*

**கேள்வி: பத்துவருட காலத்திற்கு பிரபாகரனிடம் வடக்கு கிழக்கு பிரதேசங்களை கொடுக்கும் யோசனை ஒன்றை தான் முன் வைத்ததாக ஒருமுறை ரைம்ஸ் மகஸினுக்கு ஜனாதிபதி கூறியிருந்தார். இதுகுறித்து நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில்: நாங்கள் இவ்வாறான பேச்சுக்களை கவனத்தில்கூடக் கொள்வதில்லை. சிந்திப்பது கூட இல்லை. அக் கேள்விக்கு நாங்கள் பதில் கூறத்தேவையில்லை. எனினும் நீங்கள் இக் கேள்வியை கேட்டதனால் நாங்கள் பதிலளிக்கின்றோம். எமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பதவிக்கும், அதிகாரத்துக்குமாக போராடுபவர் அல்ல. அவர் கொள்கைக்காகப் போராடும் தலைவர். ஈழம் வெற்றிபெற்றபிற்பாடுகூட, அவர் அதிகாரத்தை எதிர்பார்க்கவில்லை. அதுதான் உங்களுடைய சிங்களத் தலைவர்களுக்கும், எமது தலைவருக்குமான வேறுபாடு. அவரை கொள்கைகளால் வெற்றி கொள்ள முடியுமே தவிர பதவிகளாலும், அதிகாரங்களாலும் வெற்றி கொள்ள முடியாது.

**கேள்வி: அண்மையில் அரசு செய்தித் தணிக்கையை கொண்டு வந்த போது அதற்கு புலிகள் தான் காரணம் என கூறியிருந்தனர். கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளிலிருந்து பாதுகாப்புத் தொடர்பான தகவல்களை சேகரித்து அதற்கு ஏற்ப உங்கள் போர்த் தந்திரோபாயங்களை வகுப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. பத்திரிகைகளில் வெளியாகும் பாதுகாப்பு ஆய்வுகள் தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன?**

பதில்: கொழும்பில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளின் பாதுகாப்புத் தகவல்களைக் கொண்டு நாங்கள் எமது போர் தந்திரோபாயங்களை வகுப்பதாக அரசாங்கம் எண்ணினால் கூட நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் எனெனில் எதிரி எம்மைப் பற்றி தரம் குறைவாக எடைபோட்டால் அது எங்களுக்குச் சாதகமானதே தவிர இழப்பல்ல. எங்களுடைய கருத்தின் படி வடக்கு கிழக்குப் பகுதிகளின் போர் நிலவரங்களை மறைப்பதற்காக அரசு செய்தித் தணிக்கையை அமுல்படுத்தியுள்ளது. வடக்கின் இன்றைய உண்மையான நிலை வெளிப்படுத்தப்பட்டால் அது அரசாங்கத்திற்கு பாரிய இழப்பை ஏற்படுத்தும். அரசாங்கத்தின் உயிர் வாழ்தலே போரிலேயே தங்கியுள்ளது. போரில் தோல்வி ஏற்படும் தோல்விகளை மக்கள் அறிந்து கொள்வதை அரசு சகிக்க மாட்டாது. இதுதான் உண்மையான நிலவரம்.

நான் இப்போது உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறேன். தணிக்கை விதிக்கப்பட்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. ஜெயசிக்குறுய் நடவடிக்கைக்கு வயது ஒன்று இந்த ஒருவருட காலத்தில் அவர்கள் முன்னேறிய தூரத்திலிருந்து கடந்த மூன்று மாத காலத்தில் எத்தகைய முன்னேற்றங்களையும் மேற்கொள்ள முடியவில்லை. செய்தித் தணிக்கையூடாக அரசாங்கம் போர் ரகசியங்களை நாங்கள் பெறுவதைத் தடுத்திருந்தால் இந்த மூன்றுமாத காலத்தில் எவ்வளவு பிரதேசங்களை அவர்களால் கைப்பற்ற முடிந்திருக்கும்? ஆனால் அரசாங்கம் அதனது மோசமான தோல்விகளை இந்த மூன்று மாத காலத்தில் சந்தித்தது. மாங்குளத்திற்குக்கூட இன்று அவர்களால் செல்ல முடியவில்லை. கொல்லப்படும் படையினரின் எண்ணிக்கையை இந்த மூன்று மாத காலத்தில் அவர்களால் குறைக்க முடிந்ததா? நாங்கள் தகவல்களைப் பெறுவதற்காக பத்திரிகைகளை வாசிக்கத் தேவையில்லை. எங்களுடை உளவு வலை அமைப்பு மிகவும் பலமானது. அரசு ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை பூமரம் போன்று மாறியதையிட்டு நாம் மனம் வருந்துகிறோம் இந்த உண்மையை மறைக்க அவர்கள் தணிக்கையை அமுல்படுத்தினர். இந்தப் போருக்கு நிதியை வாரி இறைக்கும் சிங்கள மக்கள் போர் பற்றிய சரியான உண்மையை தெரிந்திருக்க வேண்டும். போருக்கு மனித வலுவை வழங்கும் கிராமப்புற மக்கள் சரியான தகவல்களை அறிந்திருக்க வேண்டும்.

*நாங்கள் தகவல்களைப் பெறுவதற்காக பத்திரிகைகளை வாசிக்கத் தேவையில்லை. எங்களுடை உளவு வலை அமைப்பு மிகவும் பலமானது. அரசு ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை பூமரம் போன்று மாறியதையிட்டு நாம் மனம் வருந்துகிறோம் இந்த உண்மையை மறைக்க அவர்கள் தணிக்கையை அமுல்படுத்தினர்.*

தாக்குதல் ஒன்று இடம்பெற்றிருந்தால் அவர்கள் எண்ணிக்கையுடன் விளையாடுவார்கள். அவர்களின் தகவல்களின் படி இறப்பு ஒன்று அல்லது இரண்டு. புலிகளின் இழப்புகள் 50 — 100 எவர்களுடைய வாழ்க்கையுடன் விளையாடுகிறார்கள். அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றின் பின் நாங்கள் இறந்த இராணுவத்தினரின் உடல்களைக் கொடுத்தோம். மக்கள் உண்மையை அறிந்துவிடுவார்கள் எனப் பயந்து அவற்றை ஏற்றுக் கொள்ள அவர்கள் மறுத்துவிட்டார்கள். போர்ச் சட்டங்களின் படி எதிரி இறந்த பின்னர் அவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும். நாங்கள் இவ் உடல்களுக்கு மரியாதை செலுத்தி தகனம் செய்தோம்.

**கேள்வி: இன்று சிங்கள மக்கள் போரினால் விரக்தியடைந்துள்ளார்கள். போர் பற்றி அவர்கள் பெருமிதம் கொள்ளவில்லை. அதேவேளை புலிகள் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்றும் அவர்கள் நம்பவில்லை. இதனால் சமாதானத்தின் மீதும் அவர்கள் வெறுப்படைந்துள்ளார்கள். அதிகாரப் பரவலாக்கலைச் செய்து அரசியல் தீர்வொன்றை நிரந்தரமாக காண அவர்கள் விரும்பினாலும் அவர்கள் சில பயங்களைக் கொண்டுள்ளார்கள். நீங்கள் முழு நாட்டையும் கைப்பற்றி விடுவீர்கள் என்ற பயம் அவர்களுக்கு உள்ளது. முழு நாட்டையும் ஆக்கிரமிப்பதே உங்களுடைய நோக்கம் என்ற கருத்துப்பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில்: இது நியாயமான நல்ல கேள்வி. சிங்கள கமிசனாலும், இன வெறியர்களாலும் உருவாக்கப்பட்டு பரப்பப்படும் கருத்து இது. பிரபாகரன் முழு நாட்டையும் கைப்பற்றி சோழ இராச்சியத்தை நிறுவிவிடுவார் என்ற பயத்தை அவர்கள் விதைக்கிறார்கள். எங்களுக்கு உரிமையுடைய பிரதேசங்களின் அதிகாரங்களுக்காக மட்டுமே நாங்கள் போர்புரிகின்றோம் என்பதை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். பிற மக்களின் நிலத்தை நாங்கள் திருட விரும்பவில்லை. சிங்களப் பிரஜைகள் இந்த நாட்டில் அனுபவிக்கும் சுதந்திரத்தைப்போன்று நாங்கள் எங்கள் நிலத்தில் சுதந்திரப் பிரஜைகளாக இருக்க விரும்புகிறோம். பெரும்பான்மை சமூகத்தின் பிடியில் நாங்கள் துன்புற்றுவிட்டோம். இத்தகைய துயரங்களூடு இன்னுமொரு தலைமுறை மக்கள் செல்வதை நாங்கள் அனுமதிக்கத்தயாராக இல்லை. அந்தக் கசப்பான கொடிய அனுபவத்தை இன்னுமொரு தலைமுறையும் பெற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை. தமிழ் மக்களின் கீழ் சிங்கள இனம் ஒருபோதும் சிறுபான்மையாக்கப்பட்டு நசுக்கப்பட மாட்டாது. சிங்கள மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்களுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டிவிட்டு வெறுப்பைப் பரப்பும் சிங்கள இனவெறியர்களுக்கு பாடம் படிப்பிக்கப்பட வேண்டும். தயவு செய்து இதனை சிங்கள மக்களிடம் போய்ச் சொல்லுங்கள்.

*பிரபாகரன் முழு நாட்டையும் கைப்பற்றி சோழ இராச்சியத்தை நிறுவிவிடுவார் என்ற பயத்தை அவர்கள் விதைக்கிறார்கள். எங்களுக்கு உரிமையுடைய பிரதேசங்களின் அதிகாரங்களுக்காக மட்டுமே நாங்கள் போர்புரிகின்றோம் என்பதை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.*

**கேள்வி: சிங்களத் தலைவர்கள் புலிகளால் கொல்லப்படுகின்றார்கள் என்பது உண்மை. அந்தக் குற்றச்சாட்டு உங்களுக்கு எதிராக வைக்கப்படுகின்றது. ஜனாதிபதி அல்லது எதிர்கட்சி தலைவருக்கு நாளை என்ன நடக்கும் என மக்கள் பேசிக் கொள்கிறார்கள். உங்களால் அவர்கள் கொல்லப்படுவார்கள் என்ற அச்சம் அவர்களிடம் நிலவுகின்றது. இந்த நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பது. அரசியல் தலைவர்களோ அல்லது வாக்காளர்களோ அல்ல பிரபாகரனே என்ற கருத்து தென் பகுதிகளில் நிலவுகின்றது. இந்த ஒரு காரணத்திற்காக சிங்கள மக்கள் உங்களை வெறுக்கின்றார்கள். இந்த நாட்டின் அரசியலை அல்லது வரலாற்றை தீர்மானிக்கும் உரிமையை பிரபாகரன் வைத்திருக்கக் கூடாது என்பது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

பதில்: தமிழர்களுக்கு நிராகரிக்கப்பட்ட உரிமைகளை வென்று கொடுப்பதற்காக வரலாறு உருவாக்கிய முன்னோடியே பிரபாகரனாவார். இவர் தமிழர்களின் நம்பிக்கை ஒளியாவார். தமிழர்களின் உரிமைகளையும், பாரம்பரியங்களை மட்டுமே அவர் தீர்மானிக்கின்றார். இந்த நாட்டின் வரலாற்றை தீர்மானிக்க அவர் விரும்பவில்லை. இதனைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் தமக்குள் மோதிக்கொள்ளும் உங்கள் அரசியல்வாதிகளாவார். தமது பிழைகளினால் பிழையான வரலாறுகளை அவர்கள் உருவாக்குவதற்கு பிரபாகரன் ஒன்றும் செய்ய முடியாது.

**கேள்வி: இறுதியாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக நீங்கள் பேசுகின்றீர்கள், நீங்கள் கூறும் அந்த மூன்றாம் தரப்பு என்ன?**

பதில்: போரோடு தொடர்பில்லாத, நேர்மையாக செயற்படும் எதாவது ஒரு நாடு அல்லது நிறுவனமே அந்த மூன்றாவது தரப்பாகும்.

**- தமிழ்ச்செல்வன் -**

பாரிஸ் லாசப்பலில்

உங்கள் அனைத்து இறைச்சி வகைகளுக்கும்

**BOUCHERIE LA CHAPELLE**

கோழி, கோழிக்கால், ஆட்டிறைச்சி
மாட்டிறைச்சி வகைகளுடன்
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்
உடன் மீன் வகைகள்
இவை மட்டுமா?
சனி, ஞாயிறு தினங்களில்
ஆட்டிறைச்சிப் பங்குகள், உயிர்க்கோழி
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்


**BOUCHERIE LA CHAPELLE**

62, Rue Louis Blanc, 75010 Paris
Tel: 01 40 38 34 08
Mo: La Chapelle ou Gare du Nord
(மக்கள் கடைக்கு முன்பாக)

# வா என்றார் கருணாநிதி! தயங்கினார் வைகோ!!

## பிரிந்தவர் கூடுவரா? அரசியலில் புதிய கூட்டா?

தற்போதைய தமிழ்நாட்டு அரசியல் நிலவரப்படி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ முன்னணியில் இருக்கிறார். அவர் நடாத்திய அறிஞர் அண்ணா பிறந்தநாள் விழாக் கொண்டாட்டம் தமிழ்நாடு அளவில் மட்டுமல்ல இந்திய அளவிலும் அவருக்கு முக்கியத்துவத்தை தேடித்தந்துள்ளது. வைகோவின் அழைப்பை ஏற்று இந்திய அரசின் பிரமுகர்கள் பலரும் சென்னை வந்திறங்கினர். பிரதமர் உள்துறை அமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர். இப்படி ஏகப்பட்ட பிரமுகர்கள். இவர்களை வரவேற்க சென்னை



விமான நிலையத்தில் தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர்கள் கூடியவேளையில் பிரிந்தவர் கூடிடும் காதல் ததும்பும் அரசியல் காட்சிகளும் அரங்கேறின.


பிரதமர் பதவியேற்றபின் சென்னை வந்த வாஜ்பாயை விமான நிலையத்தில் எதிரும் புதிருமான கருணாநிதியும், வைகோவும் இணைந்து வரவேற்றனர். வரவேற்பதற்காக முன்னதாகவே முதல்வர் கருணாநிதி விமான நிலையம் வந்திருந்தார். சற்று நேரத்தில் வைகோ அங்கு வந்தார்.

கருணாநிதி பந்தலினுள் அமர்ந்து இருந்ததனால் வைகோ பந்தலுக்கு வெளியே ஓரத்தில் நின்றுவிட்டார். அவரை கருணாநிதிக்கு அருகே காலியாக உள்ள இருக்கையில் அமரும்படி பாதுகாப்பு அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். வைகோ தயக்கம் காட்டினர். அப்போது மதிமுக பிரமுகர் எல்கணேசன் வைகோவை கருணாநிதி அருகே அழைத்துச் சென்றார். அருகே சென்றதும் கருணாநிதி வைகோவை வா என்று அழைத்தார். இதனைச் சற்றும் எதிர்பாராத வைகோ முதல்வரின் அருகில் சென்று அவரின் கையைப்பிடித்து 'நன்றாக இருக்கிறீர்களா?' என்று உடல் நலம் விசாரித்தார். பதிலுக்கு முதல்வரும் வைகோவின் உடல் நலம் விசாரித்தார். தி.மு.க.வில் இருந்து வைகோ 1993-ல் வெளியேற்றப்பட்டதன் பின் இப்போதுதான் இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக்கொள்கின்றனர்.

பின்னர் பிரதமர் வாஜ்பாய் மேடைக்கு வந்தபோது அவரை எல்லோரும் வரவேற்றனர். பிரதமர் வாஜ்பாய்க்கு தலைவர்களை முதல்வர் அறிமுகம் செய்தபோது வைகோ மற்றும் மதிமுகவினர் வரிசையில் நின்று கொண்டிருந்தனர். பிரதமரும் முதல்வரும் வைகோ அருகே வந்ததும் வைகோ பொன்னாடை போர்த்தினார். உடனே கீழே நின்றிருந்த பத்திரிகை படப்பிடிப்பாளர்கள் வைகோவைப் பார்த்து கொஞ்சம் பிரதமருடனும் முதல்வருடனும் நெருங்கி வாருங்கள் என்று கூச்சலிட்டனர். வைகோ தயங்க உடனே மேடையில் நின்றிருந்த முதல்வர் கருணாநிதி வைகோவை பார்த்து சிரித்தபடியே கையை தட்டிக்கொடுத்து வா பக்கத்தில் என்று அருகில் நிற்கவைத்துக்கொண்டார். அவரும் கையைப் பிடித்துக்கொண்டு அரவணைத்துக்கொண்டார். இதேபோன்று பிரதமரை வழியனுப்பி வைக்கும் நிகழ்ச்சியிலும் கருணாநிதியும் வைகோவும் சந்தித்து உற்சாகமாகப் பேசிக்



கொண்டனர். பிரதமர் பயணம் செய்யும் விமானம் புறப்பட்டு சென்றதும் முதல்வர் கருணாநிதியும் வைகோவும் கைகோர்த்த வண்ணம் வந்தனர். கருணாநிதியும் வைகோவும் சந்தித்து அணைத்துக்கொண்ட புகைப்படங்கள் முரசொலியிலும் இடம் பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மூலிகையில் இருந்து எரிபொருள்! விடாமுயற்சியில் ராமர்!!

சில காலத்திற்கு முன்பு மூலிகைகளில் இருந்து எரிபொருள் தயாரித்துள்ளதாகக் கூறி பரபரப்பை ஏற்படுத்தியவர் இராமர். ஆனால் அறிவியலாளர் முன் செயல்முறை அறிவியல் விளக்கத்தின்போது அவரால் அதனை சரிவர நிரூபிக்க முடியாமல் போனது. இது பின்னர் ஏமாற்று என வர்ணிக்கப்பட்டது. மீண்டும் தற்போது தமிழ் தேவி என்னும் பெயரில் மூலிகை எரிபொருள் தயாரித்து பரீட்சார்த்த முறையில் அளித்து வருகிறார் மூலிகை ராமர். இந்த நிலையில் அவரது கண்டுபிடிப்பைப்பற்றி கேள்விப்பட்ட பிரான்சு நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி லம்பர்ட் டி நிக்கோலா என்பவர் ராமருக்கு தங்கப்பதக்கம் அணிவித்து பாராட்டினார். அதைத் தொடர்ந்து அவ்விஞ்ஞானி கூறியதாவது:

தமிழன் ராமர் தனது குன்றாத ஊக்கத்தினாலும் தள்ராத உறுதியினாலும் ஏழு வருடங்களாக ஆய்வு செய்து அதில் வெற்றியும் கண்டுள்ளார். ராமர் பாவித்த மூலிகை 'தைலோபளோரா' என்னும் தாவரவியல் பெயர் கொண்டதாகும். இதில் எரிபொருள் சக்தி உண்டு. ராமர் தனது வல்லமையால் அதிலிருந்து எரிபொருளை பிரித்தெடுத்து எமது வாகனத்திற்கு உபயோகிக்கும்படி கொடுத்தார். அதனை நாங்கள் எங்கள் வாகனத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தினோம். இந்த எரிபொருளில் எவ்வித மாசும் தென்படவில்லை. இது முற்றிலும் நடைமுறை உபயோகத்திற்கு உகந்த எரிபொருள் என்பதை உறுதிப்படுத்துகின்றேன். ராமரது கண்டுபிடிப்பை உலகளாவிய ரீதியில் பலரும் பயன்பெறும் வண்ணம் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை ஏற்பாடு செய்துள்ளேன். அவரது தமிழ்தேவி மூலிகை எரிபொருளுக்கு உலகளாவிய காப்புரிமை பெற்றுத்தரவும் நாம் ஏற்பாடு செய்துள்ளோம். இவ்வாறு அவர் பேசினார்.


# Pyramid Proudly Presents

## Isai Puthaiyal

★ மிக விரைவில் எல்லாக் கடைகளிலும்

★ புதிய சிறந்த பாடல்கள்

★ போலிகளைத் தவிர்க்க தங்க எழுத்துக்களினால் Pyramid சின்னம் பொறிக்கப்பட்டுள்ளனவா? என்பதை பார்த்து வாங்கவும்




**Coming Soon**

**இசை புதையல்**

| பாடல்கள் | Songs |
| --- | --- |
| 1. ஒண்ணும் ஒண்ணும் (நிலாவே வா) | 1. Onnum Onnum (Nilaavey Vaa) |
| 2. பத்து ரூபா (என் ஆச ராசாவே) | 2. Paththu Rooba (En Aasa Raasavey) |
| 3. சாந்துபொட்டு (வீர தாலாட்டு) | 3. Saanthu Poddu (Veera Thaladdu) |
| 4. முந்தான சேலை (அரிச்சந்திரா) | 4. Munthana Chela (Harichchantira) |
| 5. வயசு புள்ள (கிழக்கும் மேற்கும்) | 5. Vayasu Pulla (Kizhakkum Metkum) |
| 6. பொன் திருவோண (கவலைப்படாதே சகோதரா) | 6. Ponn Thiruvona (Kavalaip padaathe Sakothara) |
| 7. நிலவே நிலவே (நிலாவே வா) | 7. Nilavey Nilavey (Nilaavey Vaa) |
| 8. புதுப்பொண்ணு (கிழக்கும் மேற்கும்) | 8. puthu Ponnu (Kizhakkum Metkum) |
| 9. சந்தன (இரத்னா) | 9. Santhana (Rathna) |
| 10. சோலைக்காட்டு (என் ஆச ராசாவே) | 10. Solaikkaddu (En Aasa Raasavey) |
| 11. ஆளப்பிறந்த (வீர தாலாட்டு) | 11. Aalappirantha (Veera Thaladdu) |
| 12. கம்மாக்கரை (ரத்னா) | 12. Kammakarai (Rathna) |
| 13. ஒரு கத்தரிக்காய்க்கு (கிழக்கும் மேற்கும்) | 13. Oru Kaththarikkai (Kizhakkum Metkum) |
| 14. சந்திர (நிலாவே வா) | 14. Chandra (Nilaavey Vaa) |
| 15. இதழ் செந்தூரம் (ரத்னா) | 15. Ithal Senthuram (Rathna) |
| 16. என்ன இது (அரிச்சந்திரா) | 16. Enna ithu (Harichchantira) |
| 17. பெண்ணாப்பிறந்த (கவலைப்படாதே சகோதரா) | 17. Ponnaap Pirantha (Kavalaip padaathe Sakothara) |
| 18. மயங்காத (என் ஆச ராசாவே) | 18.Mayangatha (En Aasa Raasavey) |
| 19. பூங்காற்றே (கிழக்கும் மேற்கும்) | 19. Poongattay (Kizhakkum Metkum) |
| 20. கடலம்மா( நிலாவே வா) | 20. Kadalamma (Nilaavey Vaa) |
| 21. வான்துளி (ரத்னா) | 21. Vaan Thuli (Rathna) |
| 22. காதல் என்பது (அரிச்சந்திரா) | 22. Kathal Ennpathu (Harichchantira) |
| 23. தெக்கு (என் ஆச ராசாவே) | 23. Thekku (En Aasa Rasavey) |
| 24. கத்துங்குயிலே (கிழக்கும் மேற்கும்) | 24. Kaththung Kuyley (Kizhakkum Metkum |
| 25. படிக்கட்டுமா (வீர தாலாட்டு) | 25. Paddikadumma (Veera Thaladdu) |
| 26. நீ காற்று (நிலாவே வா) | 26. Nee Kattu (Nilaavey Vaa) |
| 27. நாடோடிப்பாட்டு (அரிச்சந்திரா) | 27. Nadodi Pattu (Harichchantira) |
| 28. ஈஸ்வரா அல்லா (கவலைப்படாதே சகோதரா) | 28. Eswara Allah (Kavalaip padaathe Sakothara) |
| 29. வஞ்சிக்கொடி (ரத்னா) | 29. Vanchi Kodi (Rathna) |
| 30. அம்மன் கோயில் (வீர தாலாட்டு) | 30. Amman Kovil (Veera Thaladdu) |
| 31. ஏய் பஞ்சரா (என் ஆச ராசாவே) | 31. yea Panchara (En Aasa Raasavey) |
| 32. வாடிப்பட்டி (வீர தாலாட்டு) | 32. vaadi paddi (Veera Thaladdu) |
| 33. அஃகுதே (நிலாவே வா) | 33. Akkuthae (Nilaavey Vaa) |
| 34. கும்பாபிஷேகம் (வீர தாலாட்டு) | 34. Kumbabishegam (Veera Thaalaaddu) |
| 35. என்னோட உலகம் (கிழக்கும் மேற்கும்) | 35. Ennoda Ulagam (Kizhakkum Metkum |
| 36. பட்ட பகல் (வீர தாலாட்டு) | 36. Patta Pagal (Veera Thaladdu) |
| 37. வாடி பட்டி (ரத்னா) | 37. Vaadi Padi (Rathna) |

Distributed and Marketed by: (P) & ©1998 Pyramid av international pte ltd

PYRAMID AV INTERNATIONAL PTE LTD
83, Genting Lane # 06-02
Al-Homied Industrial Building,
Singapore 349568
Tel: (65) 841 7140 Fax: (65) 841 7150
E-Mail: pyrsin@paciffic.net.sg

PYRAMID AV (MALAYSIA) SDE BHD
11-0 11 th floor. semua house
lorong Bunus enam,
50100 Kuala lumpur, Malaysia
Tel: (603) 4661191 Fax: (603) 4661192
E-Mail: tspyr@mol.net.my

PYRAMID INTERNATIONAL LIMTED
2nd Floor, Pyramid House
1, Martindale road, Hounslow west
Middlesex, Unted Kingdom
Tel: (0181) 5722070 Fax: (0181)5725560
E-Mail: pyramid @dircon.co.uk

PYRAMID AV (CANADA) INC
6760 Davand Drive, Unit 1,
Missisauga, Ontario L 5 T 219, Canada.
Tel: 905-565-1152 - Fax: 905-565-1345
E-Mail: pyrcan@sympatico.ca

*Unauthrised public performance Broadcasting and copying of this recording is prohibited*

# 'அணு ஆயுத சோதனைத்தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாது!'

அனைத்துவகை அணுஆயுத சோதனைக்கும் தடை விதிக்கும் (சி.டி.பி.டி) ஒப்பந்தத்தில் இந்தியா உடனடியாகக் கையெழுத்திடும் வாய்ப்பு இல்லை என்று பிரதமர் வாஜ்பாயின் முதன்மைச் செயலர் பிரஜேஷ் மிஸ்ரா கூறினார். 3 பிரச்சினைகள் காரணமாக இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா தயக்குகிறது என்று அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: அமெரிக்காவிடமிருந்தும் வேறு சில நாடுகளிலிருந்தும் சில சலுகைகளை இந்தியா எதிர்பார்க்கிறது. அவை கிடைத்தவுடன் சி.டி.பி.டி.யில் கையெழுத்திட்டுவிடும் என்று சில வட்டாரங்களில் பேசப்படுகிறது. அது உண்மையல்ல. அணு ஆயுதப் பரவல் மேலும் நடைபெறக்கூடாது என்று அமெரிக்கா கருதுகிறது. நம் நாட்டுக்கு ஆபத்து ஏதும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம்.

இந்த இரு கருத்துக்களுக்கும் இசைந்த முடிவு காண்பது சாத்தியமா என்ற பேச்சு நடக்கிறது. எந்தச் சலுகையையும் யாரிடமும் இந்தியா எதிர்பார்க்கவில்லை. அணுக்குண்டுச் சோதனைக்கு முன்னாலிருந்த சுமுக உறவை மீண்டும் ஏற்படுத்தவே ஜஸ்வந்த் சி— தல்பாட் இடை



யிலான பேச்சுவார்த்தைகள் முயற்சிக்கின்றன. இந்தியா ஒரு அணு ஆயுத நாடு. இதை இன்றைக்கு இல்லாவிட்டாலும் ஏதேனும் ஓர் காலத்தில் அனைவரும் அங்கீகரித்தே தீர வேண்டும்.

இந்தியா மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்திருக்கிறது. இந் நிலையில் வரும் நவம்பரில் அதிபர் பில் கிளின்டன் இந்தியா வருவது சாத்தியமில்லை.. பொருளாதாரத் தடை அமுலில் இருக்கும்போது அந்நாட்டுக்கு அதிபர் செல்வது அமெரிக்காவுக்கு உகந்த செயல் இல்லை. அதற்காக தடை ஆணையை அவசர காலத்தில் அவர்களால் விலக்கிக்கொள்ளவும் முடியாது. இந்தியப் பயணத்தை கிளின்டன் ரத்து செய்யமாட்டார். அதே சமயம் ஒத்திவைப்பார். 3 காரணங்களுக்காக சி.டி.பி.டி யில் கையெழுத்திட இந்தியா 1996—லேயே மறுத்தது.

1. சி.டி.பி.டி உடன்பாடு பாரபட்சமானது.

2. அணு ஆயுத சோதனைக்குத் தடைவிதிக்கும் இந்த உடன்பாடு, ஆயுதப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துக்குச் சம்பந்தம் இல்லாதது.

3. இந்த உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டிய நாடுகள் பட்டியலில் இந்தியாவின் பெயரும் வேண்டுமென்றே சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே சி.டி.பி.டி.யில் இந்தியா கையெழுத்திடவில்லை.

# தி.மு.க. வின் மாபெரும் பேரணி

திமுக. பொன்விழாத் சிறப்பு மாநாட்டையொட்டி திருநெல்வேலியில் 17.09.98 வியாழக்கிழமை பிரமாண்டமான பேரணி நடைபெற்றது. இப்பேரணியை தி.மு.க. கட்சித் தலைவரும், முதல்வருமான கருணாநிதி பார்வையிட்டார். திருநெல்வேலி காந்தி சிலையருகிலிருந்து பேரணி தொடங்கியது. இதற்குக் கட்சியின் இளைஞர் அணிச் செயலர் முகஸ்டாலின் தலைமை தாங்கினார்.

அரசியல் கட்சிகளின் பேரணிகளுக்கே உரித்தான யானைகள், குதிரைகள் அணிவகுப்பு, பாரம்பரிய கலைநிகழ்வுகள், அலங்கார ஊர்திகள் என அனைத்து அம்சங்களும் பேரணியில் இடம்பெற்றிருந்தன. 9 அலங்கார ஊர்திகள் அணிவகுத்து வந்தன. கல்லக்குடியில் கருணாநிதி நடாத்திய ரயில் மறியல் போராட்டம், நகராட்சித் தேர்தலில் தி.மு.க. வென்றதற்காக கருணாநிதிக்கு அண்ணா மோதிரம் போடுவது, திமுக உதயமான சென்னை ராபின்சன் பூங்கா, கிருஷ்ணா நீரை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு கருணாநிதியிடம் அளிப்பது போன்றவற்றைச் சித்தரிக்கும் அலங்கார ஊர்திகளும் இருந்தன.

நெல்லை மாவட்டத்தின் பாரம்பரியம் மிக்க நையாண்டி மேளம், கரகம், சிலம்பம் போன்றவை அதிக அளவில் பேரணியில் இடம்பெற்றிருந்தன. பாளையங்கோட்டை யவாகர் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த தனி மேடையில் இருந்து பேரணியை முதல்வர் கருணாநிதி பார்வையிட்டார். யானைகள், குதிரைகள் அணிவகுப்பைத் தொடர்ந்து தி.மு.க. இளைஞர் அணியினர் வெள்ளைச் சீருடை அணிந்து வந்தனர்.

வெள்ளிக்கிழமை அதிகாலை 2.00 மணிக்குப் பிறகும் பேரணி தொடர்ந்தது. கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம் மாநிலங்களைச் சேர்ந்த தி.மு.க. வினரும் பேரணியில் பங்கேற்றனர். அதிகாலைவரை கருணாநிதி பேரணியைப் பார்வையிட்டார்:

# வரலாற்றை ஏற்படுத்திய ம.தி.மு.க. சென்னை பேரணி

சென்னையில் மதிமுக. நடத்திய பிரமாண்டமான பேரணியை பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகியோர் தனி மேடையில் பார்வையிட்டனர்.

சென்னையில் ம.தி.மு.க. மாநாடு 15.09.98 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாநாட்டையொட்டி சென்னை நந்தனம் தேவர் சிலை அருகில் இருந்து பகல் 1.30 மணியளவில் பேரணி புறப்பட்டது. பேரணியை ம.தி. மக. அவைத் தலைவர் எல்கணேசன் தொடக்கிவைத்தார். செஞ்சி இராமச்சந்திரன் எம்.பி. தலைமை தாங்கினார்.

பேரணியின் முன்னாள் குதிரையில் வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர். தொடர்ந்து இளைஞர் அணியினர் மாவட்டவாரியாக அணிவகுத்துச் சென்றனர். ஒவ்வொரு மாவட்டவாரியாக தொழிலாளர் அணி, வக்கில் அணி, என்ஜினியர் அணி, விவசாய அணி, மாணவரணி, மகளிர் அணி என்று ம.தி.மு.க. தொண்டர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலத்தில் போக்ரான் அணுகுண்டு பற்றியும், சேதுசமுத்திர திட்டத்தின் நன்மைகள் குறித்து விளக்கும் அலங்கார வண்டிகள் சென்றன. ஊர்வலத்தைப் பார்வையிட சென்னை ராதாகிருஷ்ணன் சாலையில் அமைக்கப்பட்ட தனி மேடைக்கு ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ பிற்பகல் 2.45 மணிக்கு வந்தார். அவரைத் தொடர்ந்து மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ், பஞ்சாப் மாநில முதல்வர் பிரகாஷ்சிங் பாதல், காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா ஆகியோர் வந்தனர்.

ஊர்வலம் மாலை 3.40 மணியளவில் தலைவர்கள் பார்வையிடும் தனிமேடைக்கு அருகே வந்தது. ஊர்வலத்தினர் தலைவர்களைப் பார்த்து உற்சாகமாக கோஷமிட்டனர்.



சரியாக 5.25 மணியளவில் பிரதமர் வாஜ்பாய் தனிமேடைக்கு வந்தார். அவரை மதிமுக. பொது செயலாளர் வைகோ மேடையைவிட்டு கீழே இறங்கிச் சென்று வரவேற்று, மேடைக்கு அழைத்துவந்தார்.

பிரதமர் வாஜ்பாய்க்கு அவர் சால்வைபோர்த்தி வரவேற்றார்.

# வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ தமிழ் மக்களை வைத்துத்தான் ஆலயங்கள், ஆதீனங்கள் இருக்கின்றன. தமிழ் மக்கள் இல்லாமல் ஆதீனங்கள் இருக்கமுடியாது. தமிழ் மக்கள் இல்லாமல் சைவ சமயத்தைப் பரப்ப முடியாது. சைவ சமயத்தைக் கட்டிக் காப்பாற்ற வேண்டுமானால் நாம் முதலில் இனத்தைக் காக்கவேண்டும். இனம் இல்லாமல் மொழியில்லை; சமயமும் இல்லை.

*– மதுரை ஆதீனம், தமிழன் எக்ஸ்பிரசில்*

❀ ❀ ❀

☺ அரசியல் சட்டத்தின் 356வது பிரிவை பயன்படுத்தவே மாட்டோம் என்று நாங்கள் உறுதிகூறவில்லை. அந்தப்பிரிவு தவறாக பயன்படுத்தப்படமாட்டாது என்றுதான் கூறியுள்ளோம். நிலைமை மோசமாக இருந்தால் அரசியல் சட்டத்தின் 356 வது பிரிவை பயன்படுத்துவோம். தேர்தலின்போதோ அல்லது அதற்குப் பிறகோ ஒரு கட்சி அளித்த வாக்குறுதியை மட்டும் பார்க்கக்கூடாது. இப்போது நாட்டு நடப்பு எப்படி உள்ளது என்பதைப் பார்க்க வேண்டும். 356 வது பிரிவை பயன்படுத்தினால் அதைப்பற்றி மக்களிடம் விளக்கிக் கூறுவோம்.

*– வாஜ்பாய் ஒரு பேட்டியின்போது*

❀ ❀ ❀

☺ 1967–ல் சென்னைக் கோட்டையில் இருந்து விரட்டப்பட்ட காங்கிரஸ் கட்சி மீண்டும் அக்கோட்டைக்குத் திரும்பமுடியவில்லை. காங்கிரசால் நாடு பாழானதுபோதும். ஊழல் மயமானது போதும். சுதந்திரப் பொன்விழா நிறைவு ஆண்டில் டெல்லி செங்கோட்டையில் வாஜ்பாய் தேசியக்கொடியை ஏற்றினார்.

2001–ல் குடியரசுப்பொன்விழாவின்போது முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையையும் பிரதமராக இருந்து அவரே ஏற்பார். வெள்ளையர் ஆட்சியின்போதே கிடப்பில் போடப்பட்ட சேதுசமுத்திரத் திட்டத்தை வாஜ்பாய் எப்படியாவது நிறைவேற்ற வேண்டும்.

*– வைகோ ம.தி.மு.க. கூட்டத்தின்போது*

❀ ❀ ❀

☺ 5 வயதுக் குழந்தையே இலட்சக்கணக்கான தொண்டர்களைத் திரட்டியுள்ளது. குழந்தை வளர்ந்து வாலிபத்தை அடையும்போது இக் குழந்தைக்குப் பின்னால்தான் தமிழகம் இருக்கும்.

*– மு.கண்ணப்பன் ம.தி.மு.க. கூட்டத்தின்போது.*

❀ ❀ ❀


☺ மத்திய ஆட்சிக்கு தி.மு.க. போன்ற கட்சிகள் ஆதரவு தரமுன்வந்தால் அதை நாங்கள் ஏற்போம்.

*– பிரதமர் வாஜ்பாய் செவ்வியில்*

❀ ❀ ❀

☺ ஈழத் தமிழர்களுக்கு மீண்டும் பிரச்சினை ஏற்பட்டால் போராட்டத்தில் குதிக்கத்தயாராக இருக்கின்றோம்.

*– மதுரை ஆதீனம், தமிழன் எக்ஸ்பிரஸ்*




நன்றி: தினக்குரல்

# தமிழக மீனவர்கள் சிறீலங்காப் படையால் தாக்கப்படுவது எனக்குக் கவலைதருகிறது

## – பெர்னாண்டஸ் –

(17.09.98)

தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு நன்றாக உள்ளது என மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

வல்லம்பெரியார் மணியம்மை மகளிர் பொறியில் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்ட அவர் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

பா.ஜ. அரசுக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தொடர்ந்து ஆதரவு அளித்துவருகிறார். தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறீலங்கா கடற்படையினரால் தாக்கப்படுவது எனக்கு வருத்தமளிக்கிறது. இது குறித்து கடலோரக் காவல் படை தக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

தமிழ் நாட்டிலிருந்து விடுதலைப் புலிகளுக்கு பெற்றோல், டீசல், மருந்துப் பொருட்கள் கடத்தப்படுவதாக பத்திரிகைகளில் வரும் செய்திகள் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அது பற்றி எங்களுக்கு எந்தத் தகவலும் இல்லை எனத் தெரிவித்தார்.


# ஏழாம் ஆண்டு வீரவணக்கம்

## சுப்பிரமணியம் கமலநாதன் (கமல்)

(வேலணை மேற்கு)


தாயின் மடியில் 23.08.1975

தாயக மண்ணில் 19.09.1991



## லெப். ஜீவா

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை தளபதி பால்ராஜின் பாதுகாவலர்)




நாட்காட்டிகள் திகதிகளை இழக்கலாம்
கால ஓட்டம் இரவுகளையும்
பகல்களையும் இழக்கலாம்
சூரியன் வெம்மையையும்
சந்திரன் குளிர்மையையும் கூட
இழக்கலாம் ஆனால்
ஜீவா உன் நினைவுகளை
எம்மால் இழக்க முடியுமா...........?
போர்க்களத்தில் புலியாகி
புதிய புறநானூறு படைத்தாய்
பகைவரை பந்தாடி உனது
சாதனைகள் கண்டு
எங்கள் தலைவன் நிமிர்ந்தபோது
உனது இழப்பினால் எங்கள் நெஞ்சம்
சிதறியது
நாளைய எங்கள் மக்கள் வாழ்வுக்காக
நேற்று உன்னை இழந்தாய்
தேசத்தின் விடிவுக்காய்
நெருப்புக்குள் நீ புகுந்தாய்
மண்ணுக்கு உரமாகி
மனிதர்க்கு உதாரணமாகிய
உன் நினைவுகள்
காற்று வீசும் வரை
கடலலைகள் எழுந்தாடும்வரை
எங்கள் மக்கள் நெஞ்சமெங்கும்
நீக்கமற நிறைந்திருக்கும்

*(19.09.91 அன்று இவருடன் வீரமரணத்தை தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்)*

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**தீவுப்பகுதி மக்கள்**

Pub




## இந்தோனேசியா

# சுஹார்ட்டோவிற்கெதிராக இலஞ்ச ஊழல் விசாரணை

இந்தோனேசியாவின் பிரதம வழக்கறிஞரான முகமட் காலிப், தான் இந்தோனேசியாவின் முன்னாள் தலைவர் சுஹார்ட்டோவிற்கு எதிரான இலஞ்ச ஊழல் விசாரணைக் குழுவிற்கு தலைமை தாங்கத் தயார் என அறிவித்துள்ளார். கடந்த ஜூன் மாதம் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்ட சுஹாட்டோவின் ஏராளமான சொத்துக்கள் பற்றிய உத்தியோக பூர்வ விசாரணை ஆரம்பிக்கப்பட உள்ளது இதுவே முதற் தடவையாகும்.

சுஹார்ட்டோ ஜனாதிபதி பதவியிலிருந்து தூக்கி எறியப்பட அவரிடம் இருந்த எண்ணிக்கையற்ற சொத்துக்கள் ஓர் காரணம். மக்களுக்காக பதவியில் அமர்த்தப்பட்டவர் சொத்துச் சேர்ப்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தற்போது அரசின் நிதித்துறை அலுவலர்களும் காவல்துறை அதிகாரிகளும் சுஹார்ட்டோவிடம் விசாரணைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

சுஹார்ட்டோவின் தனிப்பட்ட சொத்துக்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ள அரசு தனியான ஓர் குழுவினை அமைக்கும் என்றும், குழு அவரது வங்கிக் கணக்குகள் பற்றியும் விசாரணைகளை மேற்கொள்ளும் என திரு காலிப் தெரிவித்தார்.

திரு.சுஹார்ட்டோவின் சொத்துக்கள் பொதுவாக அவரது குடும்ப அங்கத்தவர்கள் பேரிலும் நண்பர்கள் பேரிலுமே உள்ளன. அவற்றைக் கண்டுபிடிப்பது மிகக் கடினம் என்றும் சொல்லப்படுகிறது. அண்மையில் தொலைக்காட்சி பேட்டியொன்றின்போது தனது 32 வருட ஆட்சியில் நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களை தான் மடக்கிக்கொண்டுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டினை சுஹாட்டோ மறுத்தார். இந்தோனேசியாவின் வங்கியொன்றின் பிரதான பங்குதாரராக சுஹார்ட்டோவின் மகன் இருந்துள்ளார்.

இவ்வங்கி சுஹார்ட்டோ ஆட்சி அகற்றப்பட்டதை அடுத்து, ஆட்டம்கண்டு தற்போது மூடப்படும் நிலைக்கு உள்ளாகியதைத் தொடர்ந்து சுஹார்ட்டோவின் மகன் இந்தோனேசியாவை விட்டு வெளியேற முயன்றார். தற்போது அவர் நாட்டைவிட்டு வெளியேற முடியாது தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

புதிய இந்தோனேசிய ஜனாதிபதி பி.ஜெ. ஹபீபி முன்னைய ஜனாதிபதி சுஹார்ட்டோ விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும், அவர் நீதியின்முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரிய மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பதில் தாமதம் காட்டுகிறார் என்ற குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை ஹபீபியின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் பலர் முன்னாள் அமைச்சரவையிலும் அங்கத்தவராக இருந்துள்ளனர். அவர்களில் சிலர் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டிற்கு உள்ளாகி உள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா

# அமெரிக்க வெளியுறவுச் செயலர் - ஈரானிய வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு

அமெரிக்க வெளியுறவுச் செயலர் திருமதி மடலின் அல்பிறைட் அடுத்தவாரம் ஈரானிய வெளியுறவு அமைச்சர் கமல் கராஷியை நியூயோர்க்கில் சந்திக்க உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போது ஈரானுக்கும் ஆப்கானிஸ்தானுக்குமிடையே ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலையை தணிப்பதற்கும், பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கும் ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் அவர்கள் அடுத்தவாரம் மாநாடு ஒன்றைக் கூட்ட உள்ளார். இதில் இப்பிராந்தியத்தின் எட்டு நாடுகள் கலந்துகொள்கின்றன. இம்மாநாட்டில் அமெரிக்க வெளியுறவுச் செயலரையும் விருந்தினராக கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொண்ட மெடலின் அல்பிறைட் இச் சந்தர்ப்பத்தில் ஈரானிய அமைச்சரையும் சந்தித்து பேச்சுக்களை நடாத்த இணங்கியுள்ளார்.

1979—ம் ஆண்டு ஈரானில் இருந்த அமெரிக்க தூதரகம் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் கைப்பற்றப்பட்டதன்பின் முதல்முறையாக உயர்மட்டப் பேச்சுக்கள் நடாத்தும் சந்தர்ப்பம் இது என தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் இவ்விருவரிடையேயும் நடைபெறப்போகும் பேச்சுக்கள் இரு தரப்பு உறவுகளைப் பற்றியிருக்காது என்றும், ஆப்கானிஸ்தான் பிரச்சினையை மையமாகக்கொண்டே பேச்சுக்



கள் இடம்பெறும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அடுத்தவாரம் ஐ.நா. புதுச் சபையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகிறது. இதில் பல வெளிநாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். இதன்போது அமெரிக்க வெளியுறவுச் செயலரும் அங்கு சமூகமளிப்பார். இவ்வேளையில் ஆப்கானிஸ்தானின் அண்டைநாடுகளான ஈரான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், பாகிஸ்தான், சீனா போன்றவைகள் கலந்துகொள்ளும் மாநாடே ஐ.நா சபையின் தூண்டுதலின் பேரில் நடைபெற உள்ளது. இதில் ஆப்கானிஸ்தானின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், பின்னர் அங்கு அமைதி ஏற்பட மேற்கண்ட நாடுகளில் ஒத்துழைப்பு இருக்கவேண்டும் என்றும் மாநாட்டின்போது இணக்கம் காணப்படும்.

ஈரானின் 9 இராஜதந்திரிகள் ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் தலிபான் படையினரால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்விரு நாடுகளிற்குமிடையே கொந்தளிப்பு நிலை தோன்றியது. ஆப்கானிஸ்தான் உடனான எல்லையில் ஈரான் இருபதாயிரம் இராணுவத்தினரை நிறுத்தியுள்ளது. இதே வேளை அமெரிக்க அரசு ஈரானின் இந் நகர்வு முயற்சியினை வன்மையாகக் கண்டித்துள்ளது குறிப்பிடத்தக்கது. வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் இது பற்றிக் கூறுகையில் ‘ஈரானின் ஆத்திரம் புரிகிறது ஆனால் இன்றைய நிலையில் இராணுவ நடவடிக்கை உகந்ததல்ல அது பிராந்திய ரீதியான போர் ஒன்றிற்கு வழிவகுக்கும்’ என்றார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசினை ஈரான் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கெதிரான ரபானி அரசிற்கே இதுவரை காலமும் ஈரான் இராணுவ, நிதி உதவிகளை வழங்கிவந்துள்ளது. பாகிஸ்தான் தலிபான்களின் பிரதான ஆதரவாளர்களாகும். இந்நிலையில் ஒரு காலத்தில் அமெரிக்கா பாகிஸ்தானின் பிரதான ஆதரவு நாடாக இருந்துள்ளது. தற்போது ஆப்கானிஸ்தானின் நிலவரம் அமெரிக்காவுக்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எப்படியாயினும் அல்பிறைட் — கராஷி சந்திப்பு ஆப்கானிஸ்தானைச் சுற்றியே அமையும் என்றபோதிலும் புதிய ஈரானிய அரசுடன் நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கு இப் பேச்சுக்கள் காரணியாக அமையும் என சொல்லப்படுகிறது.

## ரஷ்யா

# கடன்களைச் செலுத்த புதிய நோட்டுக்கள்

ரஷ்யாவின் புதிய கம்யூனிச செல்வாக்குக் கொண்ட அரசானது கடந்த வியாழனன்று கடந்த அரசினால் வழங்கப்படாதிருந்த கடன்களை வழங்கவும், புதிய செலவீனங்களுக்காகவும் புதிய றூபிள் நோட்டுக்களை அச்சடிக்க உள்ளதாகவும் அறிவித்தது.

இவ் அறிவித்தல் ஜனாதிபதி ஜெல்சினுக்கும், அவரது முதலாளித்துவ நண்பர்களுக்கும் பெரும் அதிருப்தியினை ஏற்படுத்தியுள்ளது எனச் சொல்லப்படுகிறது. ரஷ்யாவின் நிதி நிறுவனங்களால் பல வெளிநாடுகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய பல பில்லியன் றூபிள்களைச் செலுத்தவும், அரச வரி இலாகாவிற்கு வரிப்பாக்கியினைப் பெற்றுக் கொள்ளவும் ஏராளமான றூபிள்கள் தேவைப்படுகின்றன. இந்நிலையில் இதனைச் சமாளிக்க சில நாடுகளிடம் இருந்து உதவிகளைக் கோரியுள்ளோம். அது சரிவராத பட்சத்தில் நாம் புதிய நோட்டுக்களை அச்சடிக்க வேண்டிவரும். அது தவிர்க்கமுடியாதது என மத்திய வங்கியின் செயலாளர் பத்திரிகையாளருக்குத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் புதிய அரசு அமைக்கப்பட்டதன் பின் பிரித்தானிய, ஆஸ்திரிய, ஜேர்மனிய வெளிவிவகார அமைச்சர்களைக் கொண்ட குழுக்கள் மொஸ்கோவிற்கு விஜயம் செய்துள்ளன. அங்கு பேசிய ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் ரஷ்யாவின் புதிய பிரதமராக பிறிமக்கோவ் தெரிவாகியதையிட்டு நாம் சந்தோஷமடைந்தோம். அதே வேளை ரஷ்யா இதுவரை காலமும் முன்னெடுத்துவந்த பொருளாதார சீர்திருத்தக்கொள்கைகளை புதிய அரசும் கைவிடாது என நம்புகிறோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை ரஷ்ய ஜனாதிபதி யெல்சின் இராணுவத்தினருக்கு நீண்டகாலமாக வழங்கப்படாதிருந்த சம்பள பாக்கியினை வழங்க 16 பில்லியன் றூபிள்களை தயார் செய்யுமாறு பாதுகாப்பு அதிகாரிகளை கோரியுள்ளார். ரஷ்யாவில் இவ்வகையில் பாக்கியிருக்கும் சம்பளத் தொகையாக 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை உள்ளன.

## அல்பேனியா

# அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன எதிர்க்கட்சித் தலைவருக்கெதிராக சட்ட நடவடிக்கை

அல்பேனியாவில் ஆட்சியில் இருக்கும் சோசலிச அரசுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. இச் சமயம் அல்பேனியப் பாராளுமன்றத்தின் ஓர் குழு முன்னாள் ஜனாதிபதிக்கும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ந்தது.

அல்பேனியாவில் கடந்தவாரம் மக்கள் செல்வாக்கைக் கொண்ட எதிர்க்கட்சி அரசியல்வாதி அசேம் ஹஜ்தாரி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கலவரங்கள் மூண்டன. அவரது கொலைக்கு தற்போதைய சோசலிச அரசே காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இக் கலவரங்கள் அல்பேனியாவின் பல பகுதிகளிலும் தொடர்ந்தன. இறுதியாக கடந்த ஞாயிறன்று தலைநகர் டிரானாவில் பல்லாயிரம் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் கூடியபோது பாதுகாப்புப் படைகளுடன் மோதல்கள் ஏற்பட்டன. இதன்போது இராணுவத்தின் இரண்டு யுத்த தாங்கிகள் எதிர்க்கட்சி ஆதரவாளர்களால் கைப்பற்றப்பட்டது. அத்துடன் சில இடங்களின் பொலிஸ் நிலையங்களும் முற்றுகையிடப்பட்டு ஆயுதங்கள் கொள்ளையிடப்பட்டன. இதனையடுத்து அரசைக் கவிழ்க்கும் சதி முயற்சி ஒன்று அன்றைய தினம் நடந்தபோது அதனை இராணுவம் முறியடித்தது. நாட்டின் தலைவர் பாடோஸ் நானோ இரகசியமான ஒரு இடத்தில் தலைமறைவாக இரண்டு நாட்கள் இருந்தார்.

பின்னர் கடந்த புதனன்று அரச தொலைக்காட்சியில் தோன்றிய அவர் மக்களுக்கு உரையாற்றுகையில் ஆயுத முனையிலான எந்தப் பயமுறுத்தலுக்கும் தனது அரசு தலைகுனியாது. தனது அரசிற்கு எதிரான சதி முயற்சியில் ஈடுபட்ட முன்னைய ஜனாதிபதி சாலி பெறிசாவிற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாயும் அவர் தெரிவித்தார். பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளவே அரசு விரும்புகிறது. ஆனால் ஆயுதங்களை ஒப்படைக்க மறுக்கும் பயங்கரவாதிகளுடன் எப்படிப் பேச்சுக்களை நடாத்துவது. அரசு அரசியல் அமைப்பு விதிகளையும், சட்ட முறைகளையும் பேணி நடக்கும் என மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் பெறிசா கடந்த இருமுறை பாராளுமன்ற ஆணைக்குழுவில் தோன்ற மறுத்திருந்தார். மூன்றாவது முறையாகவும் இதே நிலை தொடருமானால் அவரது பாராளுமன்ற பாதுகாப்பு அகற்றப்படும். இதனால் அவர்மேல் வழக்குத் தொடரும் சாத்தியக்கூறும் அதிகமாகியுள்ளது. ஆனால் அவரோ கடந்த இரண்டு தினங்களாக 2000 இற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன் புதிய ஜனாதிபதிக்கெதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகிறார்.

இதேவேளை அல்பேனிய அரசு தொடரும் ஆர்ப்பாட்டங்களை அடக்க இராணுவத்தினருக்கு அதிக அதிகாரங்களை வழங்கியுள்ளதாயும், திரு பெறிசாவை பேச்சுக்களுக்கு வருமாறும் நாட்டின் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள உதவிபுரியுமாறும் கேட்டுள்ளது. எதிர்க்கட்சி ஆதரவாளர்களால் கைப்பற்றப்பட்ட தாங்கிகளும், சில தொகை ஆயுதங்களும் மீள ஒப்படைக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



*Promotion*
*இரண்டு மாத*
*Abonnement*
*Gratuits**

** Hors Packs SFR*

**A partir du 21 août 1998**

**PRIX DES PACKS SFR**




**O L A**

Coffret OLA
**Philips - 90Frs**
**Alcatel - 290Frs**
**Nokia - 690Frs**
இலவசம் Frais de dossier

**புதிய பழைய தொலைபேசிகள்**
**வாங்க — விற்க — திருத்த**

# ஆர்த்தி ஸ்ரூடியோ

**15 RUE CAIL, 75010 PARIS.**
**M°: GARE DU NORD - LA CHAPELLE**
**Tel: 01 40 34 20 90**



Pub

# S K M T E L E C O M

மேலதிக தொடர்புகளுக்கு முகுந்தன் (Raja) 01 42 05 19 09

**விநியோகஸ்தர்கள் தேவை**




மிகவிரைவில்
லண்டன்,
சுவிஸ், ஜேர்மனி,
நோர்வே, இத்தாலி
நாடுகளில்




# S K M N E T T E L E C O M

**SKM TELECOM**
**24 RUE DU DEPARTEMENT**
**75018 PARIS,**
**Tél: 01 42 05 19 09**
**Fax: 01 42 05 21 42**
**/ M°: La chapelle**
பாரீஸ் முத்துமாரியம்மன் கோவிலுக்கு அருகாமையில்

இலங்கை
இந்தியா
பாக்கிஸ்தான்

**SKM TELECOM**
**VEDERSGADE 13**
**7000 FREDERICIA, DANEMARK**
**Contact: Seelan**
**Tél/ Fax: 00 45 64 42 29 63**
**Mobil: 00 45 21 60 83 35**



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# சந்திரிகாவின் இயலாமையே

திங்கள்கிழமை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றிய சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, உலக நாடுகள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கக் கூடாது என விடுத்த வேண்டுகோளானது, விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் போரின் மூலம் அடக்கிவிடலாம் என்ற அவர்களின் எதிர்பார்ப்பு, திட்டங்கள் முடியாமல் போயுள்ள ஒரு நிலைமையே எடுத்துக்காட்டுகின்றது.

பல்வேறு செயல் திட்டங்களின் மூலம் சிறீலங்காவில் நடப்பது இனப் பிரச்சினையல்ல என் வெளி உலகிற்கு காட்டிவந்தவர் சந்திரிகா. அண்மையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற மகாநாட்டில் பேசியபோது கூட நாட்டில் சில கலகக்காரர்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே மோதல்கள் நடப்பதாகவும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் அவர்களை அடக்கி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவோம் எனவும் தெரிவித்திருந்தார். ஆனால், இன்று சர்வதேசத்தின் தலைவர்களின் முன்னே ஐ.நா. பொதுச்சபையில் அவர் விடுத்த இவ் வேண்டுகோளானது நாட்டில் இரு இனங்களுக்கிடையே போர் நடப்பது உண்மை என்பதை தனது வாயினாலேயே எடுத்துக் கூறியது போல் அமைந்துவிட்டது.

தீர்வுப்பொதி என்றும், உள்ளூராட்சி தேர்தல்கள் என்றும் வெளியுலகிற்கு காட்டிக் கொண்டு கைதுகளையும், காணாமல் போதல்களையும், சித்திரவதைகளையும் நடத்திக் கொண்டு வந்த சந்திரிகா அரசு மீட்கப்பட்ட பகுதிகளில் மக்கள் சந்தோசமாகவும், நிம்மதியாகவும் வாழ்கின்றார்கள் என வெளியுலகிற்கு படம்பிடித்துக் காட்ட பல வெளிநாட்டு தூதுவர்களையும் அப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்றது. இதேவேளை கதிர்காமர் போன்ற தூதுவஅமைச்சர்களை நாட்டுக்கு நாடு அனுப்பி பொய்ப் பிரச்சாரங்களை அந் நாடுகளின் தூதுவர்கள் மூலம் பரப்பிவிட்டது.

ஆனால், அரசு எதிர்பார்த்ததிற்கு மாறாகவே எல்லாம் நடைபெறத் தொடங்கின. யாழ். குடா சென்ற பத்திரிகையாளர்கள் சிலர் அங்குள்ள நிலைமையை வெளியுலகிற்கு எடுத்துக் கூறினர். செம்மணி புதைகுழி பற்றிய விபரம் ஐ.நா சபைவரை ஒலிக்கத் தொடங்கியது. சர்வதேச நாடுகள் விழித்தெழ தொடங்கும் இவ் வேளையில் சந்திரிகாவின் இவ் வேண்டுகோளானது, தனது இயலாத கட்டத்தில் சர்வதேச மட்டத்தில் அவர் வைக்கும் ஒப்பாரியே ஆகும். ஆனாலும், ஐ.நா.பொதுச் சபையில் சந்திரிகாவின் இவ் ஒப்பாரியானது, தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தியதில் இது தமிழர்களின் போராட்டத்துக்கு ஒரு சாதகமான நிகழ்வாகவே அமைந்துள்ளது..

# வன்னியில் தமிழர்களின் 'இன்ரிபாடா'

பார்வை

வன்னியில் உணவுத்தடைக்கு எதிரான மக்களின் போராட்டம் தொடர்ந்து வருகிறது. சிங்கள அரசின் 'பெயர்ப்பலகைகளை' தாங்கி நிற்கும் அரச பணிமனைகளை இம் மக்கள் இழுத்து மூட வைத்து விட்டனர். வன்னியில் இயங்கும் சர்வதேச நிறுவனங்களிடம் நியாயம் கேட்டு மக்கள் தொடர் உண்ணாவிரதங்களை நடாத்திவருகின்றனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன மண்ணில் பாலஸ்தீனிய மக்கள் 80 களின் இறுதியில் ஆரம்பித்த மக்கள் கிளர்ச்சியை ஒத்த சமநிலை இங்கு காணப்படுகின்றது. இன்ரிபாடா (Intifada) என அரபுக்களால் பெயரிடப்பட்ட மக்கள் எழுச்சியே யூத அரசுக்கு அரசியல் ரீதியாக நெருக்கடி கொடுத்த மகத்தான நிகழ்வு ஆகும். யூத ஆதரவுச் சக்திகளின் சர்வதேசப் பின் பலத்தை முறியடித்து பாலஸ்தீனிய மக்களின் போரை உலகரீதியாக நியாயப்படுத்திய இன்ரிபாடா அரபு அரசுகளுக்கு இடையேயான முரண்பாடுகளைக் கூடத் தாண்டி, அவர்களை தலைவர் யாசீர் அரபாத்தின் பின்னால் உறுதியாக நிற்கவைத்தது. ஒஸ்லோ உடன்பாடு எனப்படும் யூத - பாலஸ்தீனிய உடன்பாடு உருவாகுவதற்கான அரசியல் பின்னணியை கொடுத்தது இவ் இன்ரிபாடாவே ஆகும்.

இன்று வன்னியில் தோற்றம் கண்டுள்ள தமிழர்களின் 'உணவுக்கான போர்' ஒட்டுமொத்த விடுதலைப் போரின் தார்மீக பக்கத்தை வெளிக்காட்டுவதாகும். உணவை போருக்கான ஆயுதமாகப் பாவிக்கும் இனவெறி அரச அமைப்பின் சுயரூபத்தை இவ் வன்னி மக்களின் போர் அம்பலப்படுத்துகிறது. இன்று உலக இராஜதந்திர சமூகத்திற்கு வன்னிப் போரின் தார்மீகப் பக்கம் இதனால் புலப்படுத்தப்படுகின்றது.

வன்னியில் தமது போர் நடவடிக்கைகளின் இலக்கும் – வழிமுறைகளும் தகர்க்கப்படுவதை சந்திரிகா அரசினால் சகிக்க முடியவில்லை. 64,000 துருப்புக்களை பாவித்தும் சிறீலங்காவின் உச்ச பலம் புலிகளின் 'இனம்தெரியாத' பலத்தின் முன் மண்டியிட்டு அமர்ந்திருப்பதை சிங்கள இனவாதத்தினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வன்னிப் போரின் முடிவு சிங்கள – தமிழ் தேசியங்களுக்கு இடையேயான இறுதியான, முடிவான பிளவை பிரசவிக்கப் போகின்றது என சிங்கள தேசம் அச்சமுறுகின்றது. இவற்றிற்கு மேல், சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தை புலிகள் தீர்மானிக்கப் போகின்றார்கள் என்ற பீதி சிங்கள மக்களிடம் ஆழமாக பரவிவருகின்றது.

சிங்கள இராணுவத்திற்கு வன்னி மீதான போரை திசைதிருப்பி வெற்றிகொள்வதற்கு உணவுத்தடை போன்ற கொடூர நடவடிக்கை தேவைப்படுகின்றது. இராணுவத்தின் மீது தன் நம்பிக்கையை வைத்துள்ள சந்திரிகாவுக்கு, அரசியல் ரீதியாக வன்னி மீதான வெற்றி ஒரு அத்தியாவசிய தேவையாகிவிட்டது. இந்த சூழ்நிலைகள் மத்தியில் உலக வங்கி போன்றன சிறீலங்காவுக்கான நிதி ஒதுக்கீடுகளில் புதிய புதிய நிபந்தனைகளை விதித்து வருகின்றன. துண்டுவிழும் தொகை எனப்படும் வரவு - செலவு பற்றாக்குறையை குறிப்பிட்ட ஒரு விகிதத்திற்கு மேல் அனுமதிக்கக்கூடாது; அரச ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்; ஓய்வூதியத்தை குறைக்க வேண்டும்; இலவசமான அல்லது விலைகுறைக்கப்பட்ட விநியோகங்களை மக்களுக்கு மேற்கொள்ளக்கூடாது என உலக வங்கி கோரியது.

சந்திரிகா தன் இராணுவ - அரசியல் தேவையை உலக நிறுவனத்தின் நிபந்தனைகள் என்ற திரைபோட்டு மூடி அமுல்படுத்த முனைந்தார். சிங்கள அரச ஊழியர்களை குறைப்பது, ஓய்வூதியத்தை குறைப்பது போன்றனவற்றை அமுல்படுத்த விரும்பாத சந்திரிகா எதுவித கூச்சமுமின்றி தமிழர்களின் உணவு மீது கையை வைத்துள்ளார். 'உணவுத்தடை' என்ற ஆயுதத்தை கொடூரமான நோக்குடனும் 'நிபந்தனைகள்' என்ற திரையுடனும் சந்திரிகா அமுல்படுத்தியுள்ளார்.

ஆனால் தமிழர்கள் சிங்கள அரசின் இவ் அப்பட்டமான 'போக்கிரித்தனத்தை' தமது சுயநிர்ணய உரிமைக்கான மற்றுமொரு ஆதாரமாகக் கருதுகின்றனர். இன்று வன்னி முழுமையாக சிங்களத்துடனான தொடர்பை இழந்து வருகின்றது. அரச பணிமனைகளை இழுத்து மூடியதன் மூலம் தர்க்கரீதியாக சிறீலங்காவை வன்னி மக்கள் வெளியேற்றிவிட்டனர்.

இது ஒரு சர்வதேச சட்டவிதிகளின் கீழ் ஆராயப்படவேண்டிய நிலையாகும். தமிழர்களை ஆளும் உரிமையை சிறீலங்கா இதன்மூலம் இழந்துவிட்டதால், தமிழர்கள் தமது உயிர் வாழ்தலுக்கும், எதிர்காலத்திற்குமாக தனிநாட்டை இன்று பிரகடனப்படுத்தலாம். மறுபுறம் ஆளப்படாத பிரதேசங்களுக்கு உரிய சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகளுக்கு ஏற்ப, தமிழீழ தனியரசை தமிழர்கள் நிறுவலாம். இது ஒரு அக–புற சூழ்நிலை வளர்ச்சியாகும்.

எனினும் முடிவான அரசை நிறுவும் உரிமையை தமிழர்களின் தேசியத் தலைவர் தாய்ச்சமர் என வரையறை செய்த போரை, வெல்வதன் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ளலாம்.

- ராஜா




நன்றி: தினக்குரல்

## சிறு கதை

# அதிர்ஷ்டம்

தபால் ஆபீஸில் வேலை பார்க்கும் முத்துசாமியின் வீட்டில் கடந்த ஒரு மாதமாக எல்லாருமே மகிழ்ச்சியில்லாமல் இருக்கின்றனர். மனைவி அவருடன் சரியாகப் பேசுவதில்லை. அவருடைய இரண்டு மக்களும் மூன்றாம் மனிதர்களைப் போல கேட்ட கேள்விகளுக்கு பதில்மட்டும் சொல்லி விட்டுப் போகிறார்கள். அவ்வப்போது வந்து போகும் மாமியார் கூட பார்வையில் தன் கோபத்தைக் காட்டிக்கொண்டுதான் இருக்கிறார். ஐந்து வயது மகன் மட்டும் பாசமாக 'அப்பா... அப்பா' என்று வலம் வருகிறான். அவனுக்கும் விவரம் தெரிந்திருந்தால் அவர்களைப் போலத்தான் நடந்து கொண்டிருப்பானோ! ஒரு மாதத்திற்கு முன் வீட்டிற்குள் வந்த ஒரு எலிதான் இத்தனைக்கும் காரணம். அன்று முத்துசாமி டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார். இரவு நேரம் திடீரென்று அவருடைய கால்மேல் ஏறிய அந்த எலி வேகமாக ஓடி சமையலறைக்குள் புகுந்தது. அன்று இரவு எல்லாருமே எவ்வளவோ தேடியும் அது வெளியே வரவில்லை.

மறுநாள் அதிகாலையிலேயே ஒரு வேலையாகக் கிளம்பியவர் மனைவியிடம் 'எப்படியாவது எலியைக் கண்டுபிடிச்சு விரட்டிடு கடிச்சு நாசம் பண்ணிடப் போகுது' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

மாலை அவர் வீடு திரும்பியபோது ஒரு மகிழ்ச்சியான செய்தி காத்திருந்தது. அவருடைய மூத்த மகளுக்கு பாங்கில் இருந்து இன்டர்வியூ வந்திருக்கிறது. இதை மகள் வந்து சொன்னபோது அவருக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

சிறிதுநேரம் கழித்து காப்பி சாப்பிட்டவுடன் எலியைப்பற்றி மனைவியிடம் கேட்டார். அவள் 'பாத்திரமெல்லாம் ஒதுங்க வச்சேன். நீங்க சொன்னது தப்புங்க. அது எலி இல்லை மூஞ்சுறு. ரூமுக்குள்ளே நுழைஞ்சு கட்டிலுக்குக் கீழே போயிருச்சு, கீழே தான் ஏகப்பட்ட மூட்டை முடிச்சு கிடக்குல்ல. அதான் நாளைக்குப் பார்த்துக்கலாம்னு விட்டுட்டேன்' என்றாள்.

அன்று இரவு அவருடைய ஐந்து வயது மகன் மீது எலி ஏறிஇறங்க அவன் அலறி கண்விழித்தான். மறுநாள் அவனுக்கு ஜுரம் கண்டது. டாக்டரிடம் கூட்டிப் போனார் முத்துசாமி. 'ஒண்ணுமில்ல. சாதாரண ஜுரம் தான்' என்ற டாக்டர் ஊசிபோட்டு அனுப்பினார்.

அன்று அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு மாலையில் அவர் திரும்பியபோது மனைவி ஒரு கடிதத்தைக்கொண்டுவந்து கொடுத்தாள். அதை மைத்துனன் எழுதியிருந்தான். தனக்கு ரயில்வேயில் வேலை கிடைத்திருப்பதாகவும் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதத்தில ஆயிரம் ரூபாய் மணியார்டரில் அனுப்பி இருப்பதாகவும் கூறியிருந்தான்.

'நாளைக்கு மணியார்டர் வரும்னு நெனக்கிறேன்' என்றாள் மனைவி.

'செலவுக்குப் பயன்படும்' என்றவர். 'குழந்தைக்கு உடம்பு எப்படியிருக்கு அந்த எலி போயிருச்சுல்ல' எனறு கேட்டார்.

'இல்லைங்க. இன்னைக்கு கொஞ்சம் வேலை அதிகம். அதனால சாமான் எல்லாத்தையும் ஒதுங்க வைக்க முடியலே.

ம்... அப்புறம் இன்னொரு விஷயங்க. மூஞ்சுறு வீட்டுக்கு வர்றது ராசின்னு பக்கத்து வீட்டுப் பாட்டி சொன்னாங்க பாருங்க-நம்ம பொண்ணுக்கு பாங்கில இருந்து இன்டர்வியூ வந்திருக்கு. என் தம்பிக்கு வேலை கிடைச்சிருக்கு' மனைவி தயக்கத்துடன் சொன்னாள்.

'இந்த மாதிரி நம்பிக்கையெல்லாம் எனக்குப் பிடிக்காதுன்னு உனக்குத் தெரியுமில்ல. நேத்து குழந்தை மேல ஏறி ஓடியிருக்கு அவன் ஜுரம் வந்து படுத்திருக்கான். மறுபடி தொல்லை கொடுத்தா என்ன பண்றது'.

'எலி அவன் மேல ஏறியிருக்காதுன்னு நினைக்கிறேங்க. ஏதாவது கெட்ட கனவு கண்டிருப்பான். அதான் கத்தியிருக்கான்.'

'நீயா கற்பனை பண்ணி ஏதாவது சொல்லு. நாளைக்கு கண்டிப்பா அதை விரட்டிடு எலியா...'

அவள் சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டு 'ம்' என்றாள்.

ஆனால் மறுநாளும் எலியை விரட்ட அவள் முயற்சிக்கவில்லை. அன்று ஆபீஸ் சென்ற முத்துசாமிக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. 'வரும் வராது' என்று பல மாதமாக இழுத்துக் கொண்டிருந்த போனஸ் நிலுவைப் பணத்தை ஊழியர்களுக்குக் கொடுக்கச் சொல்லி டெல்லியிலிருந்து ஆர்டர் வந்திருந்தது.

மாலையில் வீடு திரும்பிய அவர், மனைவியிடம் இந்த சந்தோஷமான செய்தியைச் சொன்னார். அவள் 'எல்லாம் அந்த எலி நம்ம வீட்டுக்கு வந்த ராசி. எவ்வளவு நாளா இந்த விஷயத்தை சொல்லிக்கிட்டிருந்தீங்க. இப்பதான் பணம் வந்திருக்கு பாருங்க' என்று சொல்ல அவர் கோபத்துடன் கேட்டார்.

'மறுபடி எலிப் புராணமா.. என்ன இன்னைக்காவது அதை விரட்டினாயா... இல்லையா...'

'இல்லைங்க..' பையனுக்கு ஜுரம் வந்தாலும் உனக்குக் கவலையில்லை. அரிசி பருப்பு துணிமணியெல்லாம் காலியானாலும் பரவாயில்லை... இந்த செண்டி மெண்ட்தான் முக்கியம் இல்ல...'

'இல்லைங்க... நான் என்ன சொல்ல வந்தேனா...' என்று அவள் இழுத்தாள். இருவரின் சத்தமான பேச்சையும் கேட்டு குழந்தைகள் மூன்று பேரும் அங்கே வந்துவிட்டனர்.

'சரி..சரி... நான் சொல்றதை நீ செய்ய மாட்டே... நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே. நானே பார்த்து அந்த எலியை விரட்டுறேன்...ம்... போங்க போங்க. வேலையைப் பாருங்க.

முத்துச்சாமி சத்தம் போட எல்லாரும் கலைந்தனர்.


மறுநாள் அவருடைய கடுமையான முயற்சிக்குப் பின் அந்த எலி வீட்டிலிருந்து வெளியேறியது. அது வெளியே போனபோது முத்துசாமியின் மனைவி ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.

அடுத்த நாளிலிருந்து அவர்களுக்கு பிரச்சினைகள் ஒவ்வொன்றாக வர ஆரம்பித்தன. முத்துசாமியின் அம்மாவுக்கு உடம்பு சீரியஸாக இருப்பதாக ஊரிலிருந்து கடிதம் வர நான்கு நாட்கள் லீவு எடுத்துக்கொண்டு போய்ப் பார்த்து வந்தார். சுமார் இரண்டாயிரம் ரூபாய் வரை செலவானது.

'நம்ம குடும்பத்துக்கு நல்லது பண்றதுக்கு வந்த அந்த எலியை விரட்டிட்டீங்க. இப்ப பாருங்க. எதிர்பாராத செலவெல்லாம் வந்து கிட்டிருக்கு...' மனைவி அவரிடம் மெதுவாகச் சொன்னாள்.

'உலகத்துல யாருக்குமே உடம்பு சரியில்லாமல் போகாதா. செலவு ஆகாதா, எதுக்கும் எதுக்கும் முடிச்சுப்போடுற' முத்துசாமி கோபமாகச் சொன்னார்.

அடுத்த வாரத்தில் பாங்க்



இன்டர்வியூக்கு போய் வந்த மகள் சோகமாகக் காட்சியளித்தாள். அவர் விசாரிக்க 'இன்டர்வியூல ஃபெயில் ஆயிட்டேம்பா...' என்றாள் முத்துசாமிக்கு வருத்தமாக இருந்தது.

'நான் சொன்னதை நம்ப மாட்டேன்னீங்களே... அந்த ஜீவன் நம்ம வீட்ல இருந்திருந்தா இப்படி இவள் பெயிலில் ஆயிட்டு வருவாளா...' அவருடைய வருத்தத்தை அதிகப் படுத்தினாள் மனைவி.

'ஆரம்பிச்சுட்டியா... நீ பேசுறதைப் பார்த்தா எல்லாத்துக்குமே காரணம் அந்த எலிதான்னு சொல்லுவ போலிருக்கே.. சே...சே..' அவர் வெறுப்போடு பேச, அவள் விருட்டென்று அங்கிருந்து சமையலறைக்குள் போனாள்.

வீட்டில் அடுத்தடுத்து நடந்த நிகழ்ச்சிகளான சிறியவளின் கொலுசு காணாமல் போனது; புதிதாக வாங்கிய டி.வி. பழுதாகி இருநூறு ரூபாய் செலவானது; பையனுக்கு உயர்ந்த பள்ளியில் சீட் கிடைக்காமல்போனது ஆகிய எல்லாவற்றையும் முத்துசாமியின் மனைவி எலியோடு இணைத்துப் பார்த்தாள். வீட்டில் ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளுக்குமே காரணம் அந்த எலியை விரட்டியதுதான் என்ற எண்ணம் முத்துசாமியைத் தவிர எல்லாருக்கும் சிறிது சிறிதாக ஏற்பட ஆரம்பித்தது. எல்லாருமே அவரை ஒரு குற்றவாளியாகப் பார்க்கத் தொடங்கினர். இப்படித்தான் கடந்த ஒரு மாத காலமாக அவர் குடும்பத்தில் மகிழ்ச்சியற்ற சூழ்நிலை நிலவுகிறது.

அன்று 'பவர்கட்' ஆனதால் அரைமணி நேரத்திற்கு ரயில் இல்லை. முத்துசாமி ஆபீஸுக்குத் தாமதமாகப் போக ஆபீஸர் கோபமாகக் கேட்டார். 'என்ன இவ்வளவு லேட்டா வர்றீங்க. உங்க வீடுன்னு நெனச்சீங்கா...'

ஏற்கனவே பிரச்சினைகளில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்த முத்துசாமிக்கு பொசுக்கென்று கோபம் வந்துவிட்டது.

'ஏன் சார்... வீடுன்னா அவ்வளவு கேவலமாப் போச்சா... வீட்டுக்காகத்தானே வேலைக்கே வர்றோம்' சுருக்கெனப் பதில் சொன்னார்.

அதிகாரி அப்போது மௌனமானார். சில நாட்களில் தன் அதிகாரத்தைக் காட்டினார். முத்துசாமியை வெகுதூரத்திலுள்ள தபால் ஆபீஸுக்கு மாற்றிவிட்டார்.

இப்போது ஆபீஸ் போய் வருவதே அவருக்கு பெரிய பிரச்சினையாகி விட்டது. காலை ஏழு மணிக்கே வீட்டிலிருந்து புறப்படவேண்டும். இரவு எட்டு மணிக்குத்தான் வீடு வந்து சேர முடியும். அதிகமான அலைச்சலால் அவர் 'டைபாய்டு' ஜுரத்தில் விழுந்தார்.

மனைவியின் விடாத கவனிப்பால் ஒரு மாதத்திற்குள் பழைய உடல் நிலை திரும்பியது. ஆனால் பதினைந்து நாட்களுக்கு சம்பள இழப்பு. அவர் ஜுரத்தில் படுத்திருந்தபோதுகூட அவள் எலியைப் பற்றி சொல்லிக் கொண்டுதான் இருந்தாள்.

விடுமுறைக்குப் பின் ஆபீஸுக்குப் போக ஆரம்பித்தார். ஆனால் உடம்பு பலவீனமாக இருந்தது. நண்பர்கள் எல்லாரும் 'என்னப்பா இப்படி ஆயிட்டே? உடம்பைக் கவனிப்பா..' என்று அறிவுரை சொன்னார்கள்.

ரயிலில் வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது கடந்த ஒரு மாதமாக நடந்த நிகழ்ச்சிகள் அவர் நினைவுக்கு வந்தன. 'அந்த எலியை விரட்டாம விட்டிருக்கலாமோ..' அவர் தன்னைத் தானே கேட்டுக்கொண்டார்.

மறுநாள் அதிகாலையில் படுக்கையிலிருந்த அவரை மனைவி அவசரமாகத் தட்டி எழுப்பினாள்.

'ஒண்ணுமில்ல... உங்களத்தேடி ஒருத்தர் வந்திருக்கார் முக்கியமான விஷயமாம். உடனே பார்க்கணும்கிறார்' மனைவி சொல்ல முத்துசாமி வெளியே வந்து பார்த்தார். லாட்டரிச் சீட்டுக் கடைக்காரர் நின்று கொண்டிருந்தார்.

'நேத்து ராத்திரி நீங்க வாங்கிட்டு வந்த லாட்டரிச் சீட்டுக்கு ஒரு லட்ச ரூபாய் பரிசு விழுந்திருக்கு சார்' அவர் வாயெல்லாம் பல்லாகச் சொன்னார்.

முத்துசாமியின் மனசுக்குள் மகிழ்ச்சி அலை பாய்ந்தது. இருந்தாலும் சந்தேகத்தோடு கேட்டார். 'ஏங்க... என் சீட்டுக்குத்தான் பரிசு விழுந்திருக்குனு உங்களுக்கு எப்படி தெரிஞ்சது'.

'அது வந்து சார்... நீங்க வாங்கினது தான் நம்ம கடையில வித்த கடைசி சீட்டு அதான் என்னால கரெக்டா கண்டு பிடிக்க முடிஞ்சது. இங்க பாருங்க... பேப்பர்ல நம்பர் வந்திருக்கு...' பேப்பரை முத்துசாமி கையில் கொடுத்தார்.

முத்துசாமி வீட்டிற்குள் போய் லாட்டரிச் சீட்டை வேகமாக எடுத்து வந்தார். பேப்பரில் நம்பரை சரிபார்த்துவிட்டு உற்சாகமாகத் திருப்பிக் கொடுத்தார்.

'ரொம்ப சந்தோஷங்க... காப்பி சாப்பிடுறீங்களா...'

'அதெல்லாம் ஒண்ணும் வேணாம்சார். நீங்க சீட்டை பாங்கில டெபாசிட் பண்ண வந்தீங்கன்னா நானும்கூட நின்று போட்டோ எடுத்துக்குவேன். பத்திரிகை ஆபீஸுக்குக் கூட போன் பண்ணி சொல்லிட்டேன்.'

'அப்படியா... சரி நான் இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ளே பாங்குக்கு வந்துர்றேன். ஓ.கே..'

'ரொம்ப தாங்க்ஸ் சார் அப்ப நான் வர்ரேன்'

அவர் புறப்பட்டுப்போனதும் வீடு அல்லோலகல்லோலப்பட்டது. எல்லாரும் முத்து சாமியைச் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டு பேச ஆரம்பித்தனர். 'சரீங்க சீக்கிரமா புறப்படுங்க பத்திரிகைகாரங்க பாங்குக்கு வந்து வெயிட் பண்ணப்போறாங்க' மனைவி பதற்றமும் மகிழ்ச்சியும் சேர சொன்னாள்.

முத்துசாமி குளித்து சாப்பிட்டு புறப்படத் தயாரானபோது அவள் அருகில் வந்தாள். 'அதிர்ஷ்டம் எப்பவும் உங்கபக்கம் தாங்க. நான் ஏதோ தெரியாம அது இதுன்னு சொல்லி உங்க மனசை புண்படுத்திவிட்டேன் என்னை மன்னிச்சிடுங்க' என்றவளை முத்துசாமி நிமிர்ந்து பார்த்தார். அவளின் பார்வை அவர் கையிலிருந்த லாட்டரிச் சீட்டின் மேல் இருந்தது.

'சரி...சரி.. நடந்தது நடந்ததா இருக்கட்டும்' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

அவர் வீட்டிலிருந்து வெளியேறியபோது யாருக்கும் தெரியாமல் எலி ஒன்று வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தது.

அரு. அருள்செல்வன்

# வைட் வோட்டரில் தொடங்கி வைட் ஹவுசில் தொடரும்

அமெரிக்காவின் ஜனாதிபதி குற்றவாளிக் கூண்டின் முன் நிறுத்தப்பட்டுள்ளார். அவர் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் பல குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்கு வந்து இன்று ஓர் திருப்புமுனையைத் தொட்டுள்ளது. இதன் மூலம் எப்படியாவது திரு.கிளின்டனை குற்றவாளியாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை விசாரணை செய்யும் கெனத்ஸ்ரார் பல வருடங்களாக கிளின்டனை குற்றவாளிக்கூண்டில் நிறுத்தும் முயற்சியில் அயராது செயலாற்றுகிறார். அதில் மிகவும் உறுதியாகவும் இருக்கிறார். ஜனநாயகத்தின் ஒட்டுமொத்தப் பாதுகாவலன் என தன்னைக் காட்டிக்கொள்ளும் அமெரிக்கா இப் பிரச்சினையில் கையாளும் வழிமுறைகளும், மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் சர்வதேச ரீதியில் அந் நாட்டின் மேல் பெருத்த அவமானத்தைத் தோற்றுவிப்பதை அந்நாட்டின் அரசியல் தலைவர்கள் உணர மறுக்கின்றனர். காங்கிரசில் பெரும்பான்மையை வகிக்கும் குடியரசுக் கட்சியினர் எப்படியாவது கிளின்டனின் செல்வாக்கை சரிக்கும் நடவடிக்கைக்காக இதனை பயன்படுத்திக் கொள்கின்றனர். ஆனால், ஒட்டுமொத்தமாக இவர்கள் அரசியல் லாபத்திற்காக செயலாற்றுகிறார்கள் என்பதை அமெரிக்க மக்கள் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளனர். கிளின்டனின் பிரச்சினை அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது என்பதையும், இது தேவையற்ற ஒரு விவகாரம் என்பதையும் இதற்காக பல மில்லியன் மக்கள் பணத்தை விரையமாக்கியது அனாவசியம் எனக் கருதுகின்றனர்.


இவ் விவகாரத்தில் சிக்கிக் கொண்டுள்ள கிளின்டன் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டால் மட்டும் இப் பிரச்சினைகள் முடிவுக்கு வந்துவிடுமா என்றால் இல்லை என்றே கூறவேண்டும். இப் பிரச்சினையின் மூலம் எத்தகைய விடயங்களை சாத்தியமாக்கிக் கொள்ள பின்னணியில் இருக்கும் சக்திகள் முயல்கின்றன என்பது கிளின்டன் அறிந்து கொண்டதுதான். இவ் விவகாரத்தில் தான் வேண்டுமென்றே சிக்கவைக்கப்பட்டுள்ளதை அவர் புரிந்துகொண்டுள்ளார். இன்றைய நிலையில் சில சக்திகளுக்குத் தேவையானது கிளின்டனின் சரணாகதி.

ஜனாதிபதி கிளின்டன் மேல் தொடரும் குற்றச்சாட்டுக்கள் இன்று நேற்று சுமத்தப்பட்டதல்ல. அவர் ஆர்கன்சாஸ் மாநிலத்தின் ஆளுனராக பதவியேற்ற காலத்திலிருந்து பல குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டன. 1979-ம் ஆண்டு அவர் அம் மாநிலத்தின் ஆளுனராக பொறுப்பேற்ற காலத்தில் வைற் வோட்டர் ஆற்றுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குடியிருப்புத் திட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் கையாடல்கள், அதிகார துஷ்பிரயோகம் போன்றவை முதன் முதலில் இவருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களாக முன் வைக்கப்பட்டன. பின்னர் 1991ம் ஆண்டு அதே மாநிலத்தில் தனக்கு கீழ் தொழில் புரிந்த ஓர் பெண்ணுடன் பாலியல் வரம்பு மீறல்களை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. 1991-ம் ஆண்டு ஆளுனர் அலுவலகத்தில் கிளின்டன் தன்னை பாலியல் உறவிற்கு வற்புறுத்தியதாக மூன்றுவருடங்களின் பின் 1994ல் அமெரிக்காவில் வெளியாகிய சஞ்சிகை ஒன்றிற்கு போலா ஜோன்ஸ் முதன் முதலாக கூறினார். இது 1994ம் ஆண்டு பெப்ரவரி 11ம் திகதி வாசிங்டனில் பத்திரிகையாளர் மகாநாட்டில் முதல்முறையாக அம்பலப்படுத்தப்பட்டது. இவ் விவகாரம் விசாரணைக்கு உள்ளாகியிருந்த காலத்தில் தற்போதைய குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன. இன்று தொடர்ந்த பல குற்றச்சாட்டுக்களுக்கு கிளின்டன் பதில்சொல்ல வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளார். இன் இந் நிலைக்கு கிளின்டனின் பங்கும் கணிசமானது. அன்று ஆளுனர் பதவியை ஏற்றுக் கொண்ட போதே தனது அரசியல் எதிர்காலத்தை அவர் தீர்மானித்திருந்தார். ஜனாதிபதி பதவியே அடுத்த தனது குறிக்கோள் என உறுதி கொண்டிருந்தவர் தான் வைக்கும் ஒவ்வொரு அடியையும் மிகக் கவனமாகவைத்திருக்க வேண்டும்

இன்று கிளின்டன் மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அமெரிக்காவின் செல்வாக்கிற்கு குந்தகமாக அமையலாம். இன்று ஏற்பட்டுள்ள நிலைமைக்கு பல காரணங்களைக் கூறலாம். ஜனாதிபதி கிளின்டன் குற்றவாழிக் கூண்டில் ஏற்றப்படுவதற்கு காரணமாக பல சக்திகளை குறிப்பிடலாம். அவற்றுள் உள்நாட்டு அரசியல் வேறுபாடுகள், வெளிநாட்டு சக்திகள், உளவுத்துறை நடவடிக்கைகள் போன்றவற்றை குறிப்பிட்டுக் கூறலாம். உள்நாட்டு அரசியல் வேறுபாடுகள் என்பதை எடுத்துக்கொண்டால் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் உள்ள அரசியல் நிலைப்பாட்டைக் கூறலாம். காங்கிரசில் பெரும்பான்மையை வகிக்கும் குடியரசுக் கட்சியினர் இரண்டு முறைகள் ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளுக்கும் ஜனநாயக் கட்சியின் ஜனாதிபதியான கிளின்டனுக்கு உள்ள செல்வாக்கினைக் குறைக்கவும் அவர் மீது பழிவாங்கும் நடவடிக்கையை குடியரசுக் கட்சியினர் மேற்கொண்டிருக்கலாம். பலமுறை ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட திட்டங்களையும் செயற்பாடுகளையும் குடியரசுக் கட்சியினர் தடைசெய்துள்ளனர். நீண்ட காலமாக அமெரிக்காவில் பலத்துடன் இருந்த குடியரசுக்கட்சி இன்று பலமிழந்து போயுள்ளது. இதற்கு ஜனாதிபதி கிளின்டனின் மக்கள் ஆதரவும் அவர் மேற்கொண்ட சமூக நடவடிக்கைகளும் காரணமாகின்றன. ஜனநாயகக் கட்சிக்கு பெரும் பலத்தினைச் சேர்க்கும் கிளின்டனின் செல்வாக்கை அகற்ற குடியரசுக் கட்சியின் சில சக்திகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளின் அங்கமாகவும் இன்றைய விவகாரங்கள் அமையலாம். அடுத்ததாக உளவுத்துறை நடவடிக்கைகள் எனும் போது அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகளை வழி நடாத்தும் உளவுத்துறை தமது


> அமெரிக்கா உலக நாடுகளின் தலைவிதியை நிர்ணயிக்கின்றது என்பது ஒருபுறமிருக்க அமெரிக்காவின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஓர் வெளிநாட்டுச் சக்தியாக யூத சமூகத்தை குறிப்பிடலாம். உலகின் அனுதாபம் மிக்க ஓர் சமுதாயம் எனும் குறியீட்டுடன் மிகப் பலம் பொருந்திய ஓர் சமூகமாக யூத சமூகம் உள்ளது. அமெரிக்காவின் பெரும் செல்வந்தர்களும் அரசியல் தலைவர்களும் எவ்வகையிலேனும் யூதர்களுடன் இணைக்கப்பட்டே உள்ளனர். இவர்கள் அமெரிக்காவின் முடிவெடுக்கும் சக்திகளுக்குள் மிக முக்கியமானவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

கொள்கைகளுக்கு மாறான நடவடிக்கைகளை எடுக்கும் ஜனாதிபதியை தங்கள் வழிக்குக் கொண்டுவர மேற்கொண்ட மிரட்டல் நடவடிக்கைகள் இவை எனவும் கூறலாம். இதற்கு 80 களில் நடந்ததாகச் சொல்லப்பட்ட 'வைற் வோட்டர்' விவகாரம் 90-களில் வெளியாகியதும், போலாஜோன்ஸ் தனது பிரச்சினையை மூன்று வருடங்களின் பின் வெளிப்படுத்தியதும் மொனிக்கா லெவின்ஸ்கி விவகாரத்தில் ஒலிப்பதிவு நாடாக்கள், உடைகள் பாதுகாக்கப்பட்டு பின்னர் வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும். தமது கொள்கைகளுக்கு எதிராகவோ அல்லது மாற்றுக் கருத்துக்களையோ ஜனாதிப்தி வைக்குமிடத்து அவரை வழிக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகளாக இவ்வித செயற்பாடுகள் அமைந்திருக்கலாம். அடுத்ததாக வெளிநாட்டுச் சக்திகள் எனக் கூறும்போது அமெரிக்கா உலக நாடுகளின் தலைவிதியை நிர்ணயிக்கின்றது என்பது ஒருபுறமிருக்க அமெரிக்காவின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஓர் வெளிநாட்டுச் சக்தியாக யூத சமூகத்தை குறிப்பிடலாம். உலகின் அனுதாபம் மிக்க ஓர் சமுதாயம் எனும் குறியீட்டுடன் மிகப் பலம் பொருந்திய ஓர் சமூகமாக யூத சமூகம் உள்ளது. அமெரிக்காவின் பெரும் செல்வந்தர்களும் அரசியல் தலைவர்களும் எவ்வகையிலேனும் யூதர்களுடன் இணைக்கப்பட்டே உள்ளனர். இவர்கள் அமெரிக்காவின் முடிவெடுக்கும் சக்திகளுக்குள் மிக முக்கியமானவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அண்மைக்காலமாக கிளின்டனின் பாலஸ்தீன அணுகுமுறைகளில் ஏற்பட்ட மாற்றம் யூத சமூகத்தின் மத்தியில் பெரும் அதிருப்தியினை ஏற்படுத்தியிருந்தது. கிளின்டனின் நிலைப்பாட்டை மாற்றவும், அவருக்கு ஓர் நெருக்குதலை ஏற்படுத்தி தமது வேலைத் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளவும் இச் சக்திகள் முயன்றிருக்கலாம் என்றும் கருதக்கூடியதாக உள்ளது. எப்படியாகினும் கிளின்டன் பிரச்சினைகளுக்குள் சிக்கவைக்கப்பட்டுள்ளார் என்பதுதான் உண்மை.



## 'கிளின்டன் விவகாரங்கள்'

## உலகக் கண்






கிளின்டனுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் இறுக்கமடைந்து வரும் வேளையில் அமெரிக்க மக்களிடையே அவருக்குள்ள செல்வாக்கு அதிகரித்து வருகிறது. சுமார் 70 விகிதமான மக்கள் ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கள் அரசியல் ரீதியானவை என்றும் அவை தனிப்பட்ட ரீதியில் ஒரு மனிதனுக்கு உள்ள உரிமைகளை மறுக்கின்றன என்றும் கூறுகின்றனர். சர்வதேச ரீதியிலும் கிளின்டன் குற்றமற்றவர் என்பதுபோன்ற நிலைப்பாடே உள்ளது. அண்டை நாடான கியூபாவின் தலைவர் பிடல் காஸ்ட்றோ இதுபற்றிக் கூறுகையில், வலதுசாரி பிற்போக்குவாதிகளின் செயற்பாடுகளின் விளைவே இன்று கிளின்டன் குற்றவாளியாக்கப்பட்டது என்றும் அவர் பிரச்சினைகளுக்குள் சிக்க வைக்கப்பட்டுள்ளார் என்றும் கூறினார். எப்படியாயிருந்த போதிலும் அடுத்து வரும் நாட்கள் கிளின்டனின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் நாட்களாக அமையப்போகின்றன. அவர் வெள்ளை மாளிகையில் ஒகஸ்ட் 17—ம் திகதி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திற்கு முன்பாக நடந்துகொண்ட முறை பற்றிய ஒளிப்பதிவுநாடா வெளியாகின்றது. இதன்பின் என்ன நடக்கப்போகின்றது என்பதை உலகம் உற்று அவதானித்துக் கொண்டிருக்கிறது.

- உதயன் -

# சுவட்டு, மைதான மெய்வல்லுனர்

சுவிற்சர்லாந்தில் வாழும் தமிழீழ சிறார்களின் தாய்மொழி வளர்ச்சிக்காக பெரும் பணியாற்றிவரும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கல்விச்சேவையினர், சுவிஸ்நாடு தழுவிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான சுவட்டு, மைதான மெய்வல்லுனர் போட்டிகளை 30.08.98 சூரிச் பெருநகரில் நடாத்தியுள்ளனர். இப்போட்டிகளில் 23 பாடசாலைகளிலிருந்து 300ற்கும் மேற்பட்ட போட்டியாளர்களும் 1000-இற்கு மேற்பட்ட பார்வையாளர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். போட்டிகள் காலையிலேயே ஆரம்பமானது.




புலிகளுக்கு மகுடம் சூட்டிய முல்லைப் பெரும்சமரில் விதையான மாவீரன் புலிக்குட்டி எனப்படும் ஆனந்தராஜா ஜெயமோகனின் தாயார் திருமதி ஆனந்தராஜா நாகேஸ்வரி தேசிய கொடியை ஏற்றிவைக்க, உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழு கல்விச்சேவையின் (சுவிஸ் பணியகம்) பொறுப்பாளர் கல்விச் சேவையின் கொடியை ஏற்றி வைத்து தாய் மண்ணின் விடிவுக்கு அர்ப்பணமான மாவீரர்கள், பொதுமக்களுக்கு அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு, அணிவகுப்பு மரியாதையுடன் போட்டிகள் ஆரம்பமானது.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், பார்வையாளர்கள் மிகவும் உற்சாகப்படுத்தியவண்ணம் இரு-க்க விறுவிறுப்பாக மைதானம் காட்சியளித்தது.

மாணவர்களுக்கான போட்டிகள் தவிர ஆசிரியர்கள், பார்வையாளர் போட்டிகளும் மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. வினோட உடைப்போட்டியில் தாய்நாட்டு நிகழ்வுகளை சித்தரிக்கும் கதாபாத்திரங்களே பெரு வரவேற்பையும் பரிசையும் பெற்றிருந்தது குறிப்பிடத் தக்கது. இது தவிர பார்வையாளருக்காக துப்பாக்கி சுடும் போட்டிகளும் மைதான ஓரலில் நடைபெற்றபோது பலர் பங்கெடுத்துக்கொண்டனர். பிற்பகலிலிருந்து வெற்றிபெற்ற மாணவ மாணவியருக்கான கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் நடைபெற்றது. பாடசாலை ஆசிரியர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாக அங்கத்தவர்கள் என பலதரப்பட்டவர்களினால் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.




பங்குபற்றிய மாணவர்கள் 5, 7, 9, 11, 13, 15, 17 வயதுக்குட்பட்டோர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஓட்டம், பழம் சேகரித்தல், பந்தெறிதல் தண்ணீர் நிரப்புதல், கயிறடித்தல், நீளம் ப்பாய்தல், தேசிக்காய் ஓட்டம், அஞ்சல் ஓட்டம் என பலவகையான விளையாட்டுக்கள் இடம்பெற்றன. குறிப்பாக சின்னம் சிறார்களான 5, 7, 9 வயதுக்குட்பட்டோர் கூடுதலான தொகையில் பங்கெடுத்துக்கொண்டதால் அவர்களுக்குரிய போட்டிகள் பகுதிபகுதியாக பிரிக்கப்பட்டும் 1-ம், 2-ம் சுற்றுக்களாகவும் நடத்தப்பட்டே இறுதி தெரிவுகள் இடம்பெற்றன. 50 இற்கும் மேற்பட்ட ஒழுங்கமைப்பாளர்களை சேவையில் ஈடுபடுத்தி மிகவும் துல்லியமாக நிறைவுடனான முடிவுகள் எடுக்கப்பட்டன. காலநிலையும் கரிகாலன் வழி மக்களுக்கு கைகொடுத்துதவியது. பசியை போக்கி தாகத்தை தீர்க்க வசதியாக மைதான ஓரமாக சிற்றுண்டிச்சாலையும் அமைக்கப்பட்டிருந்தது. ஈழத்து சுவையுடன் கூடிய பலவகையான பண்டங்கள் சிற்றுண்டியில் கிடைக்கக்கூடியதாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. போட்டிகள் முடிவை எட்டியதும் பரிசளிப்பு வைபவம் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மாவீரன் புலிக்குட்டியை ஈன்றெடுத்த அன்னை திருமதி ஆனந்தராஜா நாகேஸ்வரி இறுதிக்கட்ட பரிசில்களை வழங்கிமுடிந்தார். தேசிய கொடியும், கல்விச்சேவையின் கொடியும் அமைதியாக இறக்கப்பட்டு போட்டிகள் சிறப்பாக .முடிவை எட்டின.



**தொகுப்பு:**

## முதலாவது இடத்தை தட்டிச் சென்றவர்கள்

| பெயர் | பிரிவு | பால் | விளையாட்டு | பாடசாலை |
|---|---|---|---|---|
| நா. விதூஷன் | 5 வயது | ஆண் | 50 மீ ஓட்டம் | மாலதி, சூர் |
| சி. அருணிசா | 5 வயது | பெண் | 50 மீ ஓட்டம் | மாலதி, சூர் |
| சி.பிரவீன் | 5 வயது | ஆண் | பழம் சேகரித்தல் | கிறங்கன், த.வி |
| சி.அருணிசா | 5 வயது | பெண் | பழம் சேகரித்தல் | மாலதி, சூர் |
| சி. பிரவீன் | 5 வயது | ஆண் | பந்தெறிதல் | கிறங்கன், த.வி |
| சி.அருணிசா | 5 வயது | பெண் | பந்தெறிதல் | மாலதி, சூர் |
| உ. துஷ்யந்தன் | 7 வயது | ஆண் | 75 மீ ஓட்டம் | பேர்ன் த.வி |
| செ. பிரசிகா | 7 வயது | பெண் | 75 மீ ஓட்டம் | லுசேர்ன் த.வி |
| சி. சுகந்தன் | 7 வயது | ஆண் | பழம் சேகரித்தல் | துர்க்கா த.வி |
| செ.பிரசிகா | 7 வயது | பெண் | பழம் சேகரித்தல் | லுசேர்ன் த.வி |
| சி. சாத்வீகன் | 7 வயது | ஆண் | பந்தெறிதல் | கொனல்பிங்கன் த.வி |
| செ.பிரசிகா | 7 வயது | பெண் | பந்தெறிதல் | லுசேர்ன் த.வி |
| ச. நிசாந் | 9 வயது | ஆண் | 75 மீ ஓட்டம் | வீஸ் த.வி. |
| அ. தனிஸ்ரலா | 9 வயது | பெண் | 75 மீ ஓட்டம் | துர்க்கா த.வி. |
| ச.நிசாந் | 9 வயது | ஆண் | தடைஓட்டம் | வீஸ் த.வி |
| செ.கயூதா | 9 வயது | பெண் | தடைஓட்டம் | சொலத்தூண் த.வி |
| சி. சரண்ராஜ் | 9 வயது | ஆண் | பந்தெறிதல் | பேர்ன் த.வி |
| செ.கௌசலா | 9 வயது | பெண் | பந்தெறிதல் | துர்க்கா த.வி |
| சி. ஜெயந்தன் | 11 வயது | ஆண் | 75 மீ ஓட்டம் | துர்க்கா த.வி |
| க. அஞ்சலிகா | 11 வயது | பெண் | 75 மீ ஓட்டம் | மாலதி, சூர் |
| சி. ஜெயந்தன் | 11 வயது | ஆண் | 100 மீ ஓட்டம் | துர்க்கா த.வி |
| க. அஞ்சலிகா | 11 வயது | பெண் | 100 மீ ஓட்டம் | மாலதி, சூர் |
| சி:யோகராஜா | 11 வயது | ஆண் | தடைஓட்டம் | லுசேர்ன் த.வி |
| பி.சம்யுதா | 11 வயது | பெண் | தடைஓட்டம் | சொலத்தூன் த.வி. |
| சி. அஜந்தன் | 13 வயது | ஆண் | 100 மீ ஓட்டம் | பாசல் த.வி |
| பூ.சுமிதா | 13 வயது | பெண் | 100 மீ ஓட்டம் | சொலத்தூன் த.வி. |
| ம.ஜீவேந்தன் | 13 வயது | ஆண் | 200 மீ ஓட்டம் | பேர்ன் த.வி |
| சா.மயூரா | 13 வயது | பெண் | 200 மீ ஓட்டம் | சூரிச் த.வி |
| சி. அஜந்தன் | 13 வயது | ஆண் | நீளம்பாய்தல் | பாசல் த.வி |
| பூ. சுமிதா | 13 வயது | பெண் | நீளம்பாய்தல் | சொலத்தூண் த.வி |
| சி.மணிமாறன் | 15 வயது | ஆண் | 100 மீ ஓட்டம் | லுசேர்ன் த.ம |
| சி.டயானா | 15 வயது | பெண் | 100 மீ ஓட்டம் | லுசேர்ன் த.ம |
| சி.மணிமாறன் | 15 வயது | ஆண் | 200 மீ ஓட்டம் | லுசேர்ன் த.ம |
| இ.நர்மதா | 15 வயது | பெண் | 200 மீ ஓட்டம் | வீஸ் த.வி |
| சி.மணிமாறன் | 15 வயது | ஆண் | நீளம்பாய்தல் | லுசேர்ன் த.ம |
| இ.நர்மதா | 15 வயது | பெண் | கயிறடித்தல் | வீஸ் த.வி |
| கு.வினோதன் | 17 வயது | ஆண் | 100 மீ ஓட்டம் | பேர்ன் த.வி. |
| கு.வினோதன் | 17 வயது | ஆண் | 200 மீ ஓட்டம் | பேர்ன் த.வி |
| கு.வினோதன் | 17 வயது | ஆண் | நீளம்பாய்தல் | பேர்ன் த. வி |

குறிப்பு: 17வயது பெண்கள் பிரிவில் 100மீ, 200மீ, நீளம்பாய்தல் போட்டிகளில் ஒரேஒரு மாணவியான த.ஜனுஜா (மாலதி, சூர்) மட்டும் பங்குபற்றியதால் போட்டிகள் நடைபெறாது பரிசில்கள் வழங்கப்பட்டன.

* த.வி. - தமிழ் வித்தியாலயம்
த.ம. - தமிழ் மன்றம்

## குழு விளையாட்டுக்கள் அஞ்சல் ஓட்டம்

ஆண்கள் பிரிவு (11 – 19 வயது)
1ம் இடம்: சுக் த.வி
2ம் இடம்: சூரிச் த.வி
3ம் இடம்: லுசேர் த.ம

பெண்கள் பிரிவு (11 – 19 வயது)
1ம் இடம்: சொலத்தூன் த.வி
2ம் இடம்: சூரிச் த.வி
3ம் இடம்: துர்க்கா த.வி

## பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரியைகள், நிர்வாகிகளுக்கான போட்டி

ஆண்கள் (200 மீ ஓட்டம்)
1ம் இடம்: சிவலிங்கம் - சூரிச் த.வி
2ம் இடம்: மு.இந்திரா உதயன் - ஊஸ்ரர் த.வி
3ம் இடம்: எஸ். உதயபாரதிலிங்கம் -பேர்ன் த.வி

பெண்கள் (100 மீ ஓட்டம்)
1ம் இடம்: க.ரதி - சுக் த.வி
2ம் இடம்: ச. நற்குணேஸ்வரி - த.வி.
3ம் இடம்: ந. உஷா- வீஸ் - த.வி

# போட்டிகள் - சுவிஸ்











## முதல் இடத்தை அடைந்ததன் அடிப்படையில் பாடசாலைகளின் முதல் 5 நிலைகள்

1. லு சேர்ன் தமிழ் மன்றம் - 8 முதல் இடங்கள்
2. மாலதி கல்வி நிலையம் - 6 முதல் இடங்கள்
3. பேர்ன் தமிழ் வித்தியாலயம் - 6 முதல் இடங்கள்
4. துர்க்கா தமிழ் வித்தியாலயம் - 5 முதல் இடங்கள்
5. சொலத்தூன் தமிழ் வித்தியாலயம் - 4 முதல் இடங்கள்

## வினோத உடைப்போட்டி

1ம் இடம் - சுவைஸ் சத்தியநாதன் - தமிழ்ச்சிறுவர் பாடசாலை

2ம் இடம் - சுக் த.வி

3ம் இடம் - சூரிச் த.வி


## பார்வையாளர்களுக்கான போட்டி


**ஆண்கள் (1500மீ)**

1ம் தே. ரஞ்சித்
2ம் ஜோ. அன்ரன்
3ம் ம. நேசதுரை

**பெண்கள் (1500மீ)**

1ம் இ. செல்வராணி
2ம் வி. புஸ்பரதி
3ம் க. சந்திரமலர்





## சிறப்பு பரிசில்களைப் பெறும் பாடசாலைகள்

1. மாலதி கல்வி நிலையம் சூர் - 5 வயது பெண்கள் பிரிவில் அனைத்துப் போட்டிகளிலும் முதலிடத்தை தட்டிச்சென்றவர் சி.அருணிசா
2. A. லுசேர்ன் தமிழ் மன்றம் -7வயது பெண்கள் பிரிவில் அனைத்து போட்டிகளிலும் முதலாம் இடத்தை தனதாக்கியவர் செ.பிரசிகா

   B. லுசேர்ன் தமிழ் மன்றம்-15 வயது ஆண்கள் பிரிவில் அனைத்து போட்டிகளிலும் முதல் இடத்தை எட்டியவர் சி. மணிமாறன்
3. பேர்ன் தமிழ் வித்தியாலயம்-17 வயது ஆண்கள் பிரிவில் அனைத்து போட்டிகளிலும் முதல் இடத்தை பற்றிக்கொண்டவர் கு.வினோதன்










# புலம்பெயர்ந்த பாதையில் பெண்களின் இடர்பாடுகள்...

இதற்கு முன் வந்த பயணத் தொடரில் சம்பந்தப்பட்டவர்களைப் போலவே கீழ்வரும் பெண்ணும் கொழும்பிலிருந்து புறப்பட்டு மொஸ்கோ வந்து சேரும்வரை பலவிதமான பயம், பதட்டம், ஏக்கம் என பல் வேறுபட்ட உணர்ச்சிகளிற்கும் ஆளாகியிருப்பார் என்பது எமக்குத் தெரிந்ததே. எனவே இனி வரும் தொடர்களில் நேரடியாக அவர்கள் பிறநாட்டில் பட்ட பிரச்சினைகளையே உற்று நோக்குவோம். இவ் வாரம் எம்பயணத் தொடரில் வருபவர் 93-ம் ஆண்டு பாரிசிற்கு வந்த 29 வயதுக்குடும்பத் தலைவி வசந்தினி. இவர் கூறுகிறார்,

'நாங்கள் எல்லோருமாக பதினொரு பேர் மொஸ்கோவிலுள்ள ஓர் விடுதியில் தங்கியிருந்தனாங்கள். எங்கள் பிரயாண முகவர் சொற்படி குறிப்பிட்ட ஒரு நாளில் மொஸ்கோவின் எல்லை கரை வழியாக இன்றுமொரு (பெயர் சரியாகத் தெரியாது) நாட்டிற்குள் நுழைய வேண்டும். குறிப்பிட்ட அந்நாளும் வரவே எம் பயமும் அதிகரித்தது. காரணம் நாம் கடக்கப்போகும் எல்லைக் கரைக்கப்பால் ஏராளமான இராணுவ முகாம்கள் தொலைவில் தெரிந்தன. அதைவிட இடையிடையே அவர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்களோ தெரியாது துப்பாக்கிக் குண்டுச் சத்தங்களும் . கேட்டபடி இருந்தன.

ஒரு நாள் மாலை எம்மை அழைத்து வந்த பிரயாண முகவர் எம்முடன் ஒரு குறிப்பிட்ட தூரம்வரை வந்துவிட்டு இனி நாம்தான் தனித்து மிகுதித்தூரம் செல்ல வேண்டும் என்றார். அவர் எம்மை வழியனுப்பி வைத்த பாதை நிறைய சவுக்கு மரமும் வேறு சிறு புதர்களாலும் சூழப்பட்ட இருண்ட பகுதி. அதுவும் குளிர்காலம் ஆரம்பமாக இருந்ததால் மெல்லிய குளிருடன் கூடிய மழையும் பெய்துகொண்டிருந்தது. மேலும் அவர் எம்மை அவ்வழியினூடே நடந்துசெல்லக்கூடச் சொல்லவில்லை. பின் என்னென்று அக்கரையை அடையச் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறீர்கள். இப்ப சொல்லக்கூடச் சிரிப்பாக இருக்கிறது. அதாவது உயரமான அம் மலை போன்ற பகுதியிலிருந்து அப்பாலுள்ள நாம் சென்றடைய வேண்டிய இடத்திற்கு உருண்டபடிதானே செல்லவேண்டும். ஏனெனில் நாம் நின்றதோ உயரமான பகுதி, செல்ல வேண்டியதோ சற்று பள்ளத்தாக்கான பிரதேசம் அதுவும் மழையின் ஈரத்தில் எப்படி இருக்கும்?

சரி ஏதோ வந்துவிட்டோம் இனி மிகுதித்தூரமும் அவர்கள் சொல்கிறபடி கேட்கத்தானே வேணும். ஒருவரையொருவர் பார்த்து சிரித்தபடியே மெல்ல மெல்ல உருளத் தொடங்கினோம். ஓர்சிலர்தான் நிதானத்துடன் முடிவடையும் இடத்திற்கு சிறு காயங்கள் ஏதுமின்றி வந்தடைந்தனர். ஏனைய நாங்கள் எல்லோரும் அங்குமிங்குமாகப் புரண்டு சிறிய சிராய்ப்புக்காயங்களுடன்தான் வந்தடைந்தோம். சரி இதுவொன்றும் பெரிய விடயமில்லை என்று ஒரு 1/2 மணித்தியாலம் கழித்துத்தான் தெரிந்தது.

ஏன் தெரியுமா எம் பதினொரு பேரையும் சூழ்ந்தபடி இராட்சதத்தனமாகக் குரைத்தபடி நின்றன நான்கைந்து நாய்கள். அவை நிறைகோபத்தில் நிச்சயம் இன்று எம்மைக் கடித்துக் குதறத்தான் போகுதென்றே எல்லோரும் எண்ணிவிட்டோம். அதனால் ஒருவரை ஒருவர் பிடித்தபடி 'அடிக்... அடிக்' என்று எங்கட யாழ்பாணத் தமிழிலையே கத்தினால் நாய்க்கு எங்க விளங்கும். அவை விடாமல் எம்மைச் சுத்திக்குரைத்தபடியே இருந்தன. ஆனாலும் எங்கள் எல்லோருக்கும் ஆச்சரியம் ஏன் இன்னும் கடிக்கவில்லை என்பதுதான். அதுகூட சற்று நேரத்தில் விளங்கிவிட்டது. அதாவது கைகளிலே பெரிய ஒளி செலுத்தும் கருவிகளுடனும் துப்பாக்கிகளுடனும் வந்த இராணுவம். எம்மை கைது செய்யும் போது அந்நாய்களைத் தடவிக் கொண்டார்கள். அந்நாய்களுடன் ஏதோ புரியாத மொழியில் பேசிக்கொண்டார்கள். இப்பொழுது எல்லோருக்கும் விளங்கிவிட்டது. அதாவது எல்லைப்புறக் காவலில் ஈடுபட்ட இராணுவத்திடம்தான் நாம் பிடிபட்டுள்ளோம். அதனால்தான் நாய் கூட அவர்களால் பழக்கப்பட்ருந்ததால் எம்மைக் கடிக்கவில்லையென்று.


எங்கள் எல்லோரையும் தம்முடன் சிறிதுதூரம் கால்நடையாக அழைத்துச் சென்றவர்கள் சிறிது நேரத்தில் ஓர் இராணுவ வண்டியில் எம்மை ஏற்றிக் கொண்டு தம் முகாமுக்குச் சென்றனர். அங்கே சென்றதும் ஓர் உயர் அதிகாரி எம்முடன் வந்த ஒருவருடன் ஆங்கிலத்தில் உரையாடி எம் முழு விபரங்களையும் பெற்றுக் கொண்டார். நாங்கள் எல்லோருமே மரப் பலகையால் நாற்புறமும் அடைத்த பெரியதொரு அறைக்குள் அடைக்கப்பட்டுவிட்டோம். அங்கு ஒரு மூலையில் சிறிய மெல்லிய ஒளியுடன் கூடிய விளக்கைத் தவிர வேறெதுவும் இல்லை. எல்லோர் உடையும் ஈரமும் மண்ணுமாக இருந்தது. ஆனால் அதையும் விட பயம் என்றால் அப்படி ஒரு பயம் எங்கே நாளைக்கு எம்மைச் சுட்டுவிடுவார்களோ என்று. ஆனால் விடிந்ததும் எம்மிடம் வந்த ஓர் இராணுவ வீரன் ஒரு பெட்டி நிறைய பாணும் சுடச்சுட தேநீரும் தந்தார். பின் தம் வாகனத்தில் தன்னுடன் பணிபுரியும் இன்னும் இரண்டு வீரர்களுடன் எங்களையும் அழைத்துக்கொண்டு ஒரு புகையிரத நிலையத்திற்கு வந்தார். ஏதோ தம்முள்ளே கதைத்துக்கொண்டிருந்தவர்கள் புகையிரதம் வந்ததும் எங்கள் கைகளில் குறிப்பிட்ட ஒரு புகையிரத நிலையத்தின் பெயரை எழுதி அதற்குரிய பயணச்சீட்டையும் தந்து ஏற்றிவிட்டுத் தம்பாட்டுக்குச் சென்றுவிட்டார்கள்.

எங்களிற்கு இதைப் பார்க்க பெரும் புதிராக இருந்தாலும் அவர்கள் சொன்னதின்படியே நடந்துகொண்டோம். சற்று நேரத்தில் அவர்கள் எழுதித்தந்த புகையிரத நிலையத்தில் இறங்கினோம்.

என்ன ஆச்சர்யம்! எம்மை வரவேற்க அங்கு எம் பிரயாண முகவர் வந்துநின்றிருந்தார். இதன் பிற்பாடு 2 மாதங்கள் மேலும் அங்கு நின்று மீண்டும் வேறு மார்க்கமாகவே குறிப்பிட்ட அவ் எல்லையைக் கடந்து எத்தனையோ விடுதிகள் எல்லாம் தங்கி, கொழும்பிலிருந்து புறப்பட்டு 8 மாதங்கள் முடியும் நேரம் பிரான்சை வந்தடைந்தேன்.

# 9 ஆண்டுகளாக அடக்கம்செய்யப்படாத சர்வாதிகாரியின் உடல்

பிலிப்பைன்ஸ் நாட்டை தன் சர்வாதிகாரப் போக்கால் மனம் போன போக்கிற்கு ஆட்டிப் படைத்தவர் பெர்டினான்ட் மார்க்கோஸ். இன்று இவர் (அமெரிக்காவிலுள்ள ஹவாய்த்தீவில்) இறந்து 9 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இன்றுவரை இவரது உடல் அடக்கம் செய்யப்படா



மல் பதனிடப்பட்டு கண்ணாடிப் பேழையில் வைத்து அவர் மனைவியால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஏன் தெரியுமா? எல்லாம் தன் கணவனின் உடலை தம் தாய்நாடான பிலிப்பைன்சிலேயே புதைக்க வேண்டும் என்ற பெர்டினான்ட்டின் மனைவி இமெல்டாவின் ஆசை தான்.

ஆனால் இமெல்டா மட்டும் ஆசைவைத்து என்ன பயன். பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களின் ஒட்டு மொத்த வெறுப்பையும் தன் வசம் வாங்கிவிட்டல்லவா அவர் கணவன் இறந்துவிட்டார். அங்குள்ள மக்கள் எல்லோருமே பெர்டினான்ட் 'சுத்த அயோக்கியன், நாட்டைக் கொள்ளையடித்தவன். இவனின் உடல் எம் நாட்டிற்குள் வரவே கூடாது' என ஆரவாரம் செய்தனர். ஆனால் இமெல்டா கலங்கவில்லை. துணிந்து, ஹவாய்த்தீவிலிருந்து தன் கணவனின் உடலை 4 ஆண்டுகளுக்கு முன் பிலிப்பைன்சிற்கு கொண்டுவந்துவிட்டார். ஆனால் கொண்டுவந்தும் மக்களின் எதிர்ப்பை மீறி அவரால் அங்கே கணவனின் உடலை அடக்கம் செய்ய முடியவில்லை. ஆரம்பத்தில் பிலிப்பைன்சின் தலைநகரான மணிலாவில் உள்ள 'தேசியவீரர்கள்' கல்லறையில் புதைக்க முயன்றும் மக்கள், 'பெர்டினான்ட் ஒரு கொள்ளைக்காரன். அவன் எப்படித் தேசிய வீரன் ஆவான்?' என ஆர்ப்பாட்டம் செய்ததால் இன்றும்கூட தன் கணவனின் உடலை தன் வசம் பாதுகாத்தவண்ணமே இருக்கிறார் இமெல்டா. ஆனால் சமீபத்தில் இவர் காத்திருந்ததற்கு பயனாக ஒரு விடயம் நடந்தேறியுள்ளது.


அதாவது பிலிப்பைன்சில் புதிய அதிபராக பதவிக்கு வந்த எஸ்ட்ராடா, இமெல்டாமேல் அனுதாபம்கொண்டு 'தேசிய வீரர்கள்' என்ற கல்லறையை 'படைவீரர்கள், ஜனாதிபதிகள், தேசிய வீரர்கள் கல்லறை' என்று பெயர்மாற்றிவிட்டார். அதாவது இறந்த பெர்டினான்ட் முன்பு ஜனாதிபதியாக இருந்தவர் என்பதால் இனி அவரை இக் கல்லறையில் புதைப்பதை மக்கள் தடுக்க மாட்டார்கள் என்ற எதிர்பார்ப்புத்தான் புதிய அதிபருக்கு.

தற்போது இமெல்டாவும் இப் பெயர் மாற்றப்பட்ட கல்லறையில் 75 ஆயிரம் டொலர் செலவில் பிரத்தியேகக் கல்லறை மண்டபத்தை உருவாக்கி வருகிறார். எங்கே! இனி மக்கள் மனமும் இமெல்டாவின் செயலை ஏற்கவேண்டுமே?

# மனமுண்டானால்......

'எலிசபத் காரூஸ்த்' ஒரு சாதாரண ஓவியம் தீட்டும் பெண்மணி மட்டும்தான். எப்பொழுது சொல்லுங்கள் 1990ல். ஆனால் இன்று ஏறக்குறைய 180 பிள்ளைகளைப் பாதுகாத்து பராமரிக்கும் ஒரு பெரிய தொழிற்கூடத்தின் தலைவி. இன்றைய இந்த 180 பிள்ளைகளின் எண்ணிக்கை கூட நாளைக்கு அதிகரிக்கும் என எதிர்பார்த்து சந்தோஷமாக சிரிக்கும் இந்தப் பெண்ணால் எப்படி இவர்களை தனித்துநின்று பராமரிக்க முடிகிறது? அதைப் பற்றி எலிசபத்தே கூறுகிறார்.

1990-ல் நான் சாதாரணமாக ஓவியம் தீட்டி அதை வெளியே விற்பனை செய்துகொண்டிருந்தேன். ஒருநாள் என் அருகிலுள்ள ஓர் குடும்பம் உண்ண உணவின்றி மிகவும் துன்பப்படுவதாகக் கேள்வியுற்று பார்க்கச் சென்றேன். அங்கே அவர்களின் நிலை என் உதவியை மிகவும் எதிர்பார்ப்பவர்களாகவே இருந்ததால் என்னால் இயன்றதை உதவ முன்வந்தேன். அந்த ஆரம்ப வாயிலாக இன்னும் ஏராளமான அப்பாவிக்குழந்தைகள் எமைச்சூழ அலைக்கழிக்கப்பட்டவர்களாக வாழ்வைக் கண்ணுற்று மிகவும் வருந்தினேன். இதன்காரணமாகவே என்னை அறியாமல் என்னால் உதவி பெறுவோரின் தொகை அதிகரித்துவிட்டது. இவர்கள் எல்லோரையும் நல்லபடி வளர்ப்பது மட்டுமல்ல, நாளைக்கு தம்



சொந்த முயற்சியிலேயே இவர்களை வாழப்பழக்க வேண்டும் எனவும் அடிக்கடி எண்ணிக் கொண்டேன். எனவே எனக்குத் தெரிந்த திறமைகளை அவர்களுக்கும் கற்றுக்கொடுத்தேன். அவர்களிடையே இருந்த திறமையையும் வெளிக்கொண்டு வந்தேன். அதன் பலன் எங்கள் எல்லோரினதும் கைவண்ணங்கள் பொருந்திய கலை வேலைப்பாட்டுப் பொருட்கள் விற்பனைக்குத் தயாராயின. ஆரம்பத்தில் மெல்ல மெல்ல ஆரம்பித்த எம் விற்பனை, இன்று பலநாடுகளிற்கும் பரவிவிட்டது. இதனால் ஏராளமான இளைஞர் யுவதிகள் என்னுடன் இன்று இத் தொழிலில் தேர்ச்சி பெற்றுவிட்டார்கள். இப்பொழுதும் கூட இதைவிட எப்படி எம்மை முன்னணிக்குக் கொண்டு வரலாம் என்று யோசிப்பதாகக் கூறும் இந்த அன்பான பெண்மணி, தன் விடுமுறைக் காலங்களைக் களிப்பது கூட ஆதரவில்லாத குழந்தைகள் வாழும் இல்லங்களைப் பார்வையிடுவதில்தான் என்கிறார். அண்மையில்கூட அவர் இந்தியாவிற்குச் சென்று சென்னையிலுள்ள ஆதரவில்லா குழந்தைகள் காப்பகத்தில் அங்குள்ள மழலைகளுடன் சிரித்து மகிழ்வதையே இங்கே காண்கின்றோம்.

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி லக்ஷிகா ஸ்ரீ, செல்வன் சர்வோதயா அருச்சுனன், செல்வன் நீலன் திசவீரசிங்கம் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்



**பெயர்:** சுஜா அன்ரன்
**வயது:** 09 (08.04.89)
**இடம்:** Pau, France.


அம்மா

இரண் பகுதி

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்
தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்.
விளக்கம்: ஆசிரியர்கள், பெரியோர்கள்
தன் மகனையும் மகளையும் போற்றுவதைக்
கேள்விப்படும் போது ஒரு தாய் அவர்களைப்
பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை
விட அதிகம் அடைவாள்.



**பெயர்:** அன்ரன் சிஜன்
**வயது:** 14.09.88
**இடம்:** Pau, France.




## கவிதை முற்றம்


### பெற்றோரின்றி நானில்லை

மேகம் இன்றி மழையில்லை
இராகம் இன்றி கீதம் இல்லை
இதழ்கள் இன்றி மலர்கள் இல்லை
இன்னல் இன்றி மனித வாழ்வும் இல்லை

கரையின்றி ஆறு இல்லை
சுவரின்றி சித்திரம் இல்லை
கற்பனையின்றி கவிதையில்லை

குயில்கள் இன்றி சோலையில்லை
குழந்தை இன்றி குதூகலம் இல்லை
உறவு இன்றி உலகம் இல்லை
உள்ளம்இன்றி மனிதன் இல்லை
தண்ணீர் இன்றி தாமரை இல்லை
பெற்றோரே! நீங்கள் இன்றி நான் இல்லை.

France. Pau இல் இருந்து
**டயானா அருள்நேசன்**




## தியாகி திலீபன்



எதிர்வரும் 26.09.98 அன்று தியாகி திலீப னின் நினைவு நாளாகும். இப்புனிதமான நாளில் தமிழீழ மக்களும், உலகெங்கும் வாழு கின்ற தமிழர்களும் தியாகி திலீபனை நினைத்து போற்றுவார்கள். விழாக்கள் எடுப்பார்கள். தியாகி திலீபனை உங்களுக்குத் தெரியுமா? அவர் எப்படி தனது உயிரைத் தியாகம் செய் தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

தமிழீழ மக்கள் சிறீலங்கா அரசின் அடக்கு முறைக்கு எதிராக போராடிக்கொண்டிருந்த வேளையில் தமிழீழ மக்களுக்கு உதவ வருகி றோம் எனக் கூறிக்கொண்டு இந்திய அந்நியப் படையினர் தமது படை பலத்துடன் தமிழீழ மண்ணில் வந்து இறங்கினார்கள். ஆனால் வந்திறங்கிய சில மாதங்களிலேயே சிறீலங்கா அரசின் நண்பனாக மாறி தமிழீழ மக்களுக்கும், போராளிகளுக்கும் அநீதி புரிய முற்பட்டார்கள்.

சிறீலங்கா அரசின் அடக்கு முறை நடவடிக் கைகளுக்கு இந்திய அந்நியப்படைகள் ஆதரவு புரிந்தன. இந்த அநீதியை எதிர்த்து தனது மக்களுக்காக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தினார். தியாகி திலீபன். அகிம்சையின் தந்தை எனப்போற்றப்படும் மகாத்மா காந்தி பிறந்த தேசத்தின் படையினர் திலீப னின் நீதியான அகிம் சைப் போராட்டத் திற்கு மதிப்பளிப்பார் கள் என்று எல்லோரும் நம்பினார்கள்.

ஆனால் 12 நாட்கள் ஒரு சொட்டு நீர்கூட அருந்தாமல் தனது மக்களுக் காக உண்ணா விரதமிருந்து தனது உயிரை தியாகம் செய்தார் திலீபன். தமிழீழ மக்களு டைய போராட்ட வரலாற்றிலே தியாகி திலீப னின் தியாகம் முக்கியமானதாக போற்றப் படுகிறது.

தமிழீழத்தின் ஊரெழு என்னும் கிராமத்தில் பிறந்த திலீபன் சிறுவயதிலேயே துடிப்பும், ஊக்கமும், திறமையும் நிறைந்து விளங்கினார். பெரியவனாகி தாய் நாட்டிற்காகவும், தனது மக்களுக்காகவும் தனது உயிரையே தியாகம் செய்தான்.

நாங்களும் இந்த உயர்ந்த தியாகியை மனதில் இருத்திப் போற்றுவோமாக!

## குட்டிக் கதை படிப்போம்

### முட்டாள் பூசாரி!

குழந்தைகள் கோவில் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சத்திக்கும்மாளம் போட்டுக்கொண்டு தண்ணீரில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பூசாரிக்கு இது துளிகூடப் பிடிக்கவில்லை. அவர் குழந்தைகளை அதட்டி விரட்டி விட்டார். கோவில் சொந்தக்காரர் பூசாரி யின் செய்கைக்கு வருத்தப்பட்டு அவரை வேலை யிலிருந்து நீக்கிவிட்டார். பூசாரிக்கு ஒரே ஆத்தி ரம். அவர் பழிவாங்க விரும்பினார். அவர் தன் பெட்டி படுக்கைகளைக் கட்டிவைத்துவிட்டு ஒரு பெரிய பந்தத்தைத் தயாரித்தார். இரவு வரும்வரை காத்திருந்தார். நடுச்சாமத்தில் அவர் புறப்பட்டார். வழியில் அந்தப் பந்தத்தில் நெருப்பை பற்றவைத் துக்கொண்டார். தீப்பந்தத்தைக் குளத்தின் ஒரு மூலையில் வைத்துவிட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடிவிட்டார். சில வருடங்கள் கழிந்தன. பூசாரி ஒரு சாமியார் வேடத்தில் திரும்ப வந்தார். வழியில் ஒரு கோவில் வேலைக்காரனைப் பார்த்தார். அவ னிடம் அந்தப் பழைய பூசாரி என்னவானார்? என்று கேட்டார். 'அவரைத்தான் சில வருடங்களுக்கு முன்பு வேலையிலிருந்து நீக்கிவிட்டார்களே' என் றான் வேலைக்காரன். 'அவர் கோவில் குளத்தில் நெருப்பை வைத்துச் சாம்பலாக்கிவிட்டார் அல் லவா? என்று பதிலுக்கு வினாவினார் பூசாரி.

நீர் நிரம்பிய குளத்துக்கு நெருப்பு வைப்பதா!' என்று அந்த வேலைக்காரன் கடகடவென்று சிரித் தான்.

**சி. பிரதீபன்**
**வயது:13 (02.10.1985)**
**இடம்: London**
**4 N X S.E18, England**

## இனிய தமிழும் எங்கள் அனுபவமும்

அன்பின் தோழர்களே! எமக்குக் கிடைத்த அனுபவத்தை உங்களுக்கு அறியத்தருகிறோம். இதனால் யாருக்காவது நன்மை ஏற்படலாம். விடுமுறையின்போது எமது உறவினர்கள் லண் டன், நெதர்லாந்து நாடுகளிலிருந்து பிரான்ஸ் வந்திருந்தார்கள். எங்கள் வயதையொட்டிய 6 பிள்ளைகள் பெற்றோருடன் வந்திருந்தார்கள். பிரிந்திருந்த பெரியோர்கள் மிகவும் மகிழ்ச்சி யாக கதைத்தார்கள். ஆனால் பிள்ளைகள் நாங்களோ ஒரு வசனம் கூடக் கதைக்க முடிய வில்லை. மொழிப்பிரச்சினைதான் காரணம். லண்டன் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் மட்டும் தான் தெரியும்.

நெதர்லாந்துப் பிள்ளைகளுக்கு அந்நாட்டு மொழியும், ஆங்கிலமும் தெரியும், அதனால் அவர்கள் கதைத்து விளையாடினார்கள், எமக்கோ தமிழும், பிரான்ஸ் மொழியும்தான் தெரியும். அதனால் அவர்கள் எம்மோடு பழ கவே முடியவில்லை. இதனால் எல்லோருக்கும் சரியான கவலையாக இருந்தது. ஆகவே நமது தாய்மொழி தமிழை மறக்காமல் எல்லோரும் படித்தால் எமக்குக் கவலையே ஏற்படாது தோழர்களே!

**த.சிந்துஜா -- த.சஜீதா**
**45500 ஜியான்**

## அறிந்துகொள்ளுங்கள்

1. முதன் முதலில் முத்திரை எங்கே வெளியிடப் பட்டது?
**பிரித்தானியாவில்**
2. சீனாவின் தலைநகரம் எது?
**பீகிங்**
3. நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு எது?
**நோர்வே**
4. அமெரிக்க நாட்டின் தேசிய சின்னம் எது?
**தங்கத்தடி**
5. பிக் பென்ட் மணிக்கூட்டுக் கோபுரம் எங்கே உள்ளது?
**லண்டனில்**
6. இலங்கையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் எங்கே உள்ளது?
**அகலவத்தையில்**

சி.பிரதீபன்
(London)

# வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத் தத்துவம்

**பேராசிரியர்: ஆ.வேலுப்பிள்ளை**

**'ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்**
**அன்றென்ப ஆறு சமயத்தார் — நன்றென**
**எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்**
**முப்பான் மொழிந்த மொழி'**

இது கல்லாடனார் திருவள்ளுவ மாலையில் திருக்குறள் பற்றிப் பாடிய வெண்பா என்பர். இந்திய மண்ணில் தோன்றிய சமய நெறிகள் ஆறு. இவை தத்தமக்குரிய சமய நூல்களும் தத்துவச் சிந்தனைகளும் கொண்டு விளங்கின. வெவ்வேறு கோட்பாடுகளையுடையனவாக விளங்கிய இச் சமயங்கள், மக்கள் உள்ளங்களைத் தங்கள் பால் ஈர்ப்பதற்காகப் போட்டியிட்டன. மணிமேகலை முதலியவற்றில் குறிக்கப்படும் பட்டி மண்டபங்கள் நாடெங்கும் தோன்றின. சமய வாதங்கள் சொற்போர்கள் நடைபெற்றன. சமயப் பூசல் தோன்றியதால் சமயங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளும் பெரிது படுத்தப்பட்டன. ஒரு சமயத்தவர் உண்மைப்பொருளென ஒன்றைக் கூறினால், மறு சமயத்தார் உண்மைப்பொருள் வேறென்பர். ஒரு சமயத்தார் உண்மைப்பொருள் வேறென்றால் அடுத்த சமயத்தார் உண்மைப்பொருள் அதுவன்று என்பர். சமயங்கள் என்றுமே சந்திக்க முடியாத துருவங்கள் போலக் காட்சியளித்தன. இந்த நிலையில் திருக்குறள் தோன்றியது. திருக்குறள் கடைச் சங்கத்தில் அரங்கேறியதாகக் கதை வழங்குகிறது. திருக்குறள் அரங்கேற்றப்பட்ட பொழுது அதற்குப் பலத்த எதிர்ப்பு இருந்ததாகத் தெரிகிறது. இந்தியச் சிந்தனை



வரலாற்றிலும் தமிழ் நாட்டுச் சிந்தனைப் போக்கிலும் பல வழிகளில் புதுமையைப் புகுத்திய திருக்குறள் ஆரம்பத்தில் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியேற்படுவது இயல்பே. திருக்குறளுக்கு எதிர்ப்பு சில காலம்தான் இருந்தது. திறமையையும் பொருண்மையையும் திரையிட்டு மறைத்துவிட முடியாது. எல்லாச் சமயத்தினரும் திருக்குறளைப் போற்றும் நிலை வெகு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிட்டது.

பாரத நாட்டு மண்ணில் பிறந்த சமயங்கள் மாத்திரமல்ல. புகுந்த சமயங்களும் தம்முடைய செல்வாக்குத் திருக்குறளிற் காணப்படுவதாகக் கூறின. கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய சமயங்களும் திருக்குறளில் தம்முடைய கொள்கைகளுக்கு அமைதி கண்டன. திருக்குறள் 'உலகப் பொதுமறை' என்பது யாவருக்கும் உடன்பாடாயிற்று. இவற்றிலிருந்து ஒன்று புலப்படுகிறது — ஒவ்வொரு சமயமும் சொல்லும் பொருள் திருக்குறளில் காணப்படுகிறது.

இன்றேல், எல்லாச் சமயங்களும் திருக்குறளைப்போற்ற முடியாது. அதனால்தான் போலும் மதுரைத் தமிழ் நாகனார் திருவள்ளுவ மாலையில் 'எல்லாப் பொருளும் இதன் பாலுள இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்று கூறினார். எல்லாச் சமயங்களும் திருக்குறளைப் போற்றுவதிலிருந்து இன்னொரு உண்மை புலனாகிறது. எந்த ஒரு சமயத்தின் கொள்கையையும் திருக்குறள் முற்றாக எடுத்துக் கூறவில்லையென்பதுதான் அது. அப்படி அது கூறியிருந்தால், குறள் ஒரு சமயத்திற்குரிய நூலாகக் கருதப்பட்டுப் பிற சமயங்களால் ஒதுக்கப்பட்டிருக்கும்.

வள்ளுவரின் சமயம் என்ன என்ற புதிரை விடுவிக்கப்பல அறிஞர் நீண்ட காலமாக முயன்றுள்ளனர். அதை நிறுவுவதற்குப் புறச்சான்றுகள் போதிய அளவு கிடைக்கவில்லை. அகச்சான்றுகள் வலுவற்றுக் காணப்படுகின்றன. வள்ளுவர் இல்லறத்திலிருந்தவரா அல்லது துறவியா என்ற வினாவுக்கும் நிச்சயமான விடை கூற முடியாது. இந்தக் கேள்விகளுக்கு நிச்சயமான விடைகள் காணப்பட்டாலும் வள்ளுவர் நூலின் முக்கியத்துவச் சிறப்பு எவ்வகையிலும் குறைந்துவிட முடியாது. வள்ளுவர் எந்தச் சமயத்தில் பிறந்தார். எந்தச் சமய அனுஷ்டானங்களைப் பின்பற்றினார் என்பன பற்றிய கருத்து வேறுபாடு ஏற்படமுடியாது. வள்ளுவர் சமயத்தின் புறத்தோற்றத்தில் தம்மைப் பறிகொடுத்துவிடவில்லை. சமயவாதிகளின் தாக்கம் அவரை மயக்கிவிடவில்லை. சமயத்திலிருந்து வள்ளுவர் ஒதுங்கவுமில்லை. வள்ளுவர் சமயங்களை நன்கு கற்றிருக்கிறார். சமய உண்மைகளை ஊடுருவி நோக்கியிருக்கிறார். சமய உண்மை வள்ளுவருக்குப் புரிந்திருக்கிறது. சமய அடிப்படை வள்ளுவருக்குத் தெரிய வந்திருக்கிறது. சமய அடிப்படையில் வள்ளுவர் 'சர்வ சமய சமரசம்' பாடவில்லை. 'சர்வ சமய சமரசம்' பாடியவர்களின் பரந்த மனப்பான்மை பலராலும் பாராட்டப்படுகிறது. வள்ளுவர் அவர்களிலும் எவ்வளவோ ஆழமாகச் சென்றுவிட்டார். எல்லாச் சமயங்களும் அவர் மேல் உரிமை கொண்டாடுகின்றன.

வாழ்க்கையைச் சீர்திருத்தி அமைக்க முயன்றன சமயங்கள். சுகங்களில் அளவிறந்த பற்று வைப்பதனால் ஏற்படும் அனர்த்தங்களை அவதானித்து, வாழ்க்கையில் ஒரு ஒழுங்கை ஒரு நீதியை —நிலைநாட்ட முயன்றனவே சமயங்கள். ஒழுங்காக வாழ்ந்து உலகியலின்பங்களைத் துய்க்க வேண்டும் என்றே சமயங்கள் கூறவிரும்பினபோலத் தெரிகிறது. ஆனால் பிரச்சினைகள் பல எழுந்தன. எல்லாரும் ஒழுங்காக வாழவில்லை. ஒழுங்கில்லாத வாழ்வுடையவர்கள் உலகியலின்பங்குகளைக்கூடிய அளவு துய்க்கிறார்கள் போலத் தெரிந்தது. ஒழுங்காக வாழ்பவர்கள் துன்பங்களிலிருந்து ஒதுங்கப்போய் இன்பங்களை இழந்துவிட்டவர்கள் போலானார்கள். ஒழுங்கில்லாத வாழ்வுடையவர்களுக்கு வாழ்க்கைச் சுகங்களை அனுபவிக்க நிறையச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஒழுங்காக வாழ்வதால் என்ன பயன் என்ற கேள்வி இயல்பாக எழுகின்றது. சமயங்கள் அளித்த விடை இம்மையை மதிக்காமல் மறுமையை நோக்குவதாகும். ஒழுங்காக வாழ்பவர் இறந்த பின்பு அடையும் கதி அல்லது மறுபிறப்பு மிகவும் சிறந்திருக்கும் என்று கூறிய சமயங்களே, ஒழுங்காக வாழாதவரும் அடையும் இவ்வுலகச் சுகங்கள் நிலையற்றன, வெறுத்தற்குரியன என்று பிரச்சாரம் செய்தன. வாழ்க்கையில் வெறுப்பும் முத்தியில் விருப்பும் கொண்ட ஒழுங்கான வாழ்க்கையை நிலைநாட்டும் நோக்கமாகவே சமயங்கள், தோன்றின போலக் காணப்படுகின்றன.

ஆனால், பிரச்சார வேகத்தில் ஒழுங்கான வாழ்க்கையை வற்புறுத்தும் போக்குத் தளர்ந்துவிட்டது. ஏனைய அற நூல்களும் சமய நூல்களும் மக்களை நிரந்தரமாகக் கவர்ந்திழுக்கும் சக்தி பெறவில்லை. ஒழுங்கீனமான வாழ்க்கையைக் கண்டிக்கும் நோக்கை வைத்து உலக நிலையாமை, வாழ்க்கை வெறுப்பாகிய கொள்கைகளை நாடகப் பாணியில் அளவிறந்து வற்புறுத்தும் இந்த நூல்கள், வாழ்க்கையில் பெருந்துன்பம் அல்லது ஏமாற்றம் அடைந்தவர்களுக்கே ஒருவித மன நிறைவை அளிக்கின்றன. மனிதர்களுக்கு இயல்பாக அமைந்து வாழவேண்டும் என்னும் துடிப்பை உதாசீனம் செய்யும் நூல்களாக இவை அமைந்திருக்கின்றன. வள்ளுவர் இந்த நிலையை உணர்ந்திருக்கிறார். வள்ளுவர் உணர்ந்தது சமயங்களின் அடிப்படையை மாத்திரமல்ல, தன்னுடைய காலத்திற்கு முன்பு தோன்றிய உலகியல் சுகங்களைப் போற்றும் சங்ககால இலக்கியத்தையும் படித்திருக்கிறார். மனுதர்ம சாஸ்திரம் முதலிய வடமொழி நீதி நூல்களையும் அர்த்த சாஸ்திரம் முதலிய வடமொழிப் பொருளியல் நூல்களையும் காம சூத்திரம் முதலிய வடமொழி காம நூல்களையும் கற்றிருக்கிறார். பசும் புல்லையுண்டு பாலாகப் பொழியும் பசுப்போல இவையாவற்றையும் கற்றுச் சிந்தித்துக் குறட்பாக்கள் வடிவில் அவற்றின் சத்துக்களை மாத்திரைகளாக, வில்லைகளாக, மருந்துக் குழிகைகளாக, எமக்குத் தந்திருக்கிறார்.

திருக்குறள் என்னும் நூலின் அமைப்பே உலக வாழ்வு பற்றிய வள்ளுவரின் பார்வையைத் தெளிவாக்குகிறது. தலைவனும் தலைவியும் கூடிக்களிக்கும் இன்பத்தை வள்ளுவர் காமத்துப்பாலில் இருபத்தைந்து அதிகாரங்களில் எடுத்துக் கூறுகிறார். ஏனைய பல அற நூல்களும் சமய நூல்களும் கூறுவதுபோல், அவர் இத்தகைய இன்பத்தைச் சிற்றின்பமென இழித்துரைக்கவில்லை. களவொழுக்கத்தைக்கூட அவர் கடிந்துரைக்கவில்லை. இல்லற வாழ்க்கை திருக்குறளில் சிறப்பிடம் பெறுகிறது. குடும்ப வாழ்க்கைச் சிறப்பு இருபது அதிகாரங்களில் எடுத்துக் கூறப்படுகிறது.

**அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற்**
**புறத்தாற்றிற்போ ஒய்ப்பெறுவ தெவன்.**

இந்தியச் சிந்தனையின் பழைய வரலாற்றில் இத்தகைய துணிகரமான கருத்துக் காணப்படுவது ஒருபுதுமை. அறவழியில் இல்வாழ்க்கை அமைந்தால் அங்கு பெறமுடியாத எதையும் துறவு மார்க்கத்தில் பெற்றுவிட முடியாது என்று வள்ளுவர் கூறுகின்றார். ஒழுங்காக இல்லறத்தில் நின்று வாழ்பவன், பூவுலகத்திலிருக்கும் பொழுதே தேவன் என்ற அந்தஸ்துப் பெற்றுவிடுவான் என்பதை

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள்**
**வைக்கப்படும்** என்று கூறுகிறார்.

உலக வாழ்க்கை ஒழுங்காக நடைபெறுவதற்குப் பெரிதும் வேண்டிய பொருட்பால் எழுபது அதிகாரங்களில் பரந்து காணப்படுகிறது. நூற்றுமுப்பது மூன்று அதிகாரங்களைக் கொண்ட திருக்குறளில் நூற்றுப் பதினைந்து அதிகாரங்களுக்குக் குறையாமல் எட்டில் ஏழு பங்கில், இவ்வுலக வாழ்க்கைச் சிறப்பும் இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டியளவு கூறப்படுகின்றன.

இவ்வாறு இயம்புவதால், சமயங்கள் பிரத்தியேகமாக எடுத்துக் கூறும் விடயங்கள் திருக்குறளில் இல்லையென்றாகா, துறவியலில் பதின்மூன்று அதிகாரங்கள் காணப்படுகின்றன. ஊழ், நீத்தார் பெருமை என்பன தனித் தனி அதிகாரமாகக் காணப்படுகின்றன. திருக்குறள் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. இந்நூலை முழுவதாகப் பார்க்கும்பொழுது, அது வாழ்க்கைச் சுகங்களைப்போற்றும் நூல் என்றே கூறவேண்டும். ஒழுங்காக வாழ்ந்து உலகியலின்பங்களைத் துய்க்க வேண்டுமென்பதுதான் வள்ளுவர் வாழ்க்கைத் தத்துவம். இந்தியச் சிந்தனை வரலாற்றில், வாழ்க்கை வெறுப்பு, உலக நிலையாமை பற்றிய கருத்துக்கள் நிறையக் காணப்படுகின்றன. அவற்றுக்கெதிராக வள்ளுவர் செய்த புரட்சி திருக்குறளாக மலர்ந்தது.

நன்றி:
தமிழ்ச் சமய வரலாறு.

## தியாகி திலீபனின் நினைவைச் சுமந்து...

# இது எங்கள் தேசியம்

திலீபன்
இப்பொழுதெல்லாம்
இப்படி உச்சரிக்க
முடிவதில்லை
எழுத்துக்களைக் கோர்த்து
வாசிக்கவும் முடிவதில்லை.

வாய் திறக்க முடியாத
ஒரு
மௌன அழுகை
நாடிகள்
மெதுவாய் ஆனால்
அழுத்தமாய் வெடிப்பது
போன்ற
ஓர் வலி.

குருதி வடிக்கும்
இதயம் கூட
தடுமாறி
வெளிறிப்போன குருதியை
கண்வழியாய்
ஓயாமல் தள்ளுகிறது.

எங்கள்
சுவாசங்கள்....
ஒரேயொரு சூரியன்
தினமும் புதிது புதிதாய்
பிரசவிக்கும் காலையைப்
போல
உன்
உயிர்ப்புக்களை
நேசிக்கிறது.

ஒருநாள் உணவை
மறக்க முடியாதாம்...
பலநாள் உணவை
ஒன்றாய் திணிக்கவும்
முடியாதாம்.....
உண்மை!!

அந்த
தியாக வாசகம்
வயிறு பசித்து பசித்து
நாடிகள்
துடித்து துடித்து மெல்லச்
சுருங்க

என்
மண்ணின் மணிகள்
ஓதியது
தமிழில்
புதுவரியாக்கப்பட்டது.

திலீபன்
எம் தேசமானான்
காற்றானான்
எங்கள் மூச்சானான்

இப்பொழுதெல்லாம்
உச்சரிக்க முடியாத
ஒரு
உயரிய...
எங்கள் மூச்சிலும் மேலான
தேசமானான்
தேசியமானான்

ஆனாலும்
மெதுவாய் அழுத்தமாய்
நெஞ்சோடு ஓர் வலி....

முரசூர் பழ. தியான்
(ஜேர்மனி)

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது
ஜவ்னா இறைச்சிக்கடை

# ஜவ்னா இறைச்சிக்கடை

ஆடு, மாடு, கோழி
இறைச்சி
வகைகளையும்,
தினமும் உயிர்க்கோழி
வகைகளையும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்



திங்கட்கிழமைகளில் சபரியப்பன் மளிகை
நிறுவனத்தில் எல்லா இறைச்சி
வகைகளையும் ஓடர் செய்துகொள்ளலாம்

B

**Jaffna Boucherie**

70, Rue Louis Blanc, 75010 Paris. M°: la Chapelle
Tel: 01 40 35 46 47

விசேட கொள்வனவுகளுக்கு
விசேட விலைக்கழிவுகள்

Pub



# உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்புச் சேவை

**(கிருஷ்ணபிள்ளை மாயவன்)**

உங்கள் சகல மொழிபெயர்ப்புத் தேவைகள், பிரெஞ்சு நிர்வாக – நீதிமன்றத் தேவைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவற்றுக்கான சட்ட ஆலோசனைகளுக்கு கடந்த 14 ஆண்டுகளாக அரசாங்க அங்கீகாரம் பெற்று பாரிஸ் நகரில் (பாரிஸ்-18 - மெத்ரோ மார்க்கடே புவசொனியேயில்) சேவையாற்றி வரும் நாம் எமது அலுவலகத்தை தற்போது புதிய முகவரிக்கு இடமாற்றம் செய்துள்ளோம்

எமது மொழிபெயர்ப்புத் தேவைகள் சகல நீதி – நிர்வாக அலுவலகங்களினாலும் வெளிநாட்டுத் தூதரகங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படும்

புதிய முகவரி:
39, Bld. de la Chapelle, 75010 Paris.
(Mo: La Chapelle / Gare du Nord)
Tel / Fax: 01 40 34 53 41 - Port: 06 14 89 68 07
(எம்.ஜி.ஆர். வீடியோ & ரெக்ரைல்ஸ் நிறுவனத்தினுள்ளே, ஈழநாடு, தமிழாலயம் நிறுவனங்களுக்கு அருகாமையில்)



சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

*(இதில் குறிப்பிட்டிருக்கும் நிமிடங்கள் உண்மையானவை)*




இந்தியா 42 நிமிடம்

பிரான்ஸ் 200 நிமிடங்கள்
(மாலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | 45 நிமிடம் | பிரித்தானியா | 120 நிமிடம் |
| கனடா | 120 நிமிடம் | அமெரிக்கா | 120 நிமிடம் |
| தாய்லாந்து | 28 நிமிடம் | ஜேர்மனி | 100 நிமிடம் |
| ஹொங்கொங் | 62 நிமிடம் | அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிரான்ஸ் | 200 நிமிடம் | பிலிப்பைன்ஸ் | 40 நிமிடம் |
| இலங்கை | 45 நிமிடம் | அல்ஜீரியா | 65 நிமிடம் |
| சுவிஸ் | 100 நிமிடம் | மொரோக் | 65 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் | பெல்ஜியம் | 100 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் | பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 80 நிமிடம் |
| துனிசியா | 65 நிமிடம் | | |

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்

**GNANAM Telecom Center**

195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.
Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14
M°: La Chapelle / Gare du Nord

சகல நாடுகளுக்குரிய தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

Pub

# கலைந்த சொற்கள் எண்: 15

கீழ் உள்ளவற்றில் சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர்கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச் சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத எழுத்துக்களை சேர்த்தால் ஓர் பழமொழி வரும்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | அ | ரி | த | ல் | ண் | உ | உ | வு | தி | ம் | ணா | மு |
| ய | வி | ரு | ப் | ப | ம் | த் | பா | ம் | ர | ல் | த் | மை |
| ல் | ய | தை | பு | ய | ப | த | ல் | ய | வ | த | ல | து |
| ல் | ல் | ப் | ச் | ன் | ம் | ம | உ | கா | ம் | பு | த் | மு |
| ய | ரு | தி | ரு | மு | க | ம் | பீ | ர | ம் | ம் | மா | உ |
| வி | ம் | ம் | த | க | ர | ம | த | ன் | ய | ரு | ட | து |
| கு | ங் | ட | ம | த | ந | ண் | பி | தி | கா | வி | ம் | ம் |
| த | ய | கு | ட் | ம் | ர | தி | த் | மு | ச | ர | ர | வு |
| ம் | த் | ம | பு | ப | சி | ச | ந் | ம் | வ | க | ப | ர |
| சொ | ந | த | ந | ம் | க | ல் | ம | ல | த | த் | ம் | வ |
| ம் | ல் | ல் | ம் | க | ர | த | க | ப | சி | த் | த | ல் |
| ள | லா | க | த | ல | ம் | த் | ன | ச | ம் | ரி | சி | ந |
| ள் | சி | ல | ந் | தி | நி | தி | ர | பி | ச | ப | ட | க |
| உ | ம் | ச | த | ங் | கை | ப | க் | ன | போ | ப் | ர | ர |
| கு | ப் | ம் | ம | ச | த | ண் | ம் | ணா | பு | ய் | ம | ம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சமுத்திரம் | சபலம் | பசித்தல் | சித்தம் | சம்மதம் | சிலந்தி | தகரம் | பயன் |
| மரகதம் | சிகரம் | சிம்பம் | நம்புதல் | பதித்தல் | திண்மம் | விரும்புதல் | சத்தியம் |
| தடயம் | திரவம் | நல்வரவு | முத்தம் | மடங்கு | சகாயம் | மதன் | உபாயம் |
| உத்தமம் | உயரம் | உத்தரவு | திருமுகம் | விருப்பு | சயம் | சிதம்பரம் | அவியல் |
| விருப்பம் | பிரதிநிதி | திலகம் | முதுமை | வயல் | கம்பீரம் | நரகம் | அரிதல் |
| குவியல் | கம்பம் | கலவரம் | புதையல் | பாடம் | தப்பு | மகுடம் | நம்பி |
| புலமை | கதம்பம் | காயம் | தத்தம் | நல்லாசி | உள்ளம் | சதங்கை | பட்டம் |
| தசமம் | பம்பரம் | கலசம் | கனரகம் | நல்லாள் | நட்பு | தரிசனம். | |

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

பிறந்த நாள்: ..............................

சந்தாதாரராயின் சந்தா இல: ..............................


கலைந்த சொற்கள் எண்–15 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 02.10.98

*(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)*

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

## கலைந்த சொற்கள் எண் - 14 விடைகள்



*ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு 270 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.*

*அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.*

1) சோமசுந்தரம் இளங்கோ
75017 Paris,
France.

2) கௌசல்யா பொன்னம்பலம்
8923 EJ Leeuwarden,
Nederland.

3) சி. சுதேந்திரன்
1018 Lausanne,
Switzerland.

4) திருமதி சிவஜோதி தெய்வஜோதி
9950 Vardo,
Norway.

5) திருமதி S. மோட்சநாதன்
3902 Glis,
Switzerland.

இவர்களுக்கு
**Lune International Paris**
நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-15 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்-16ம், 01 - 07 ஒக்டோபர் 98 ஈழமுரசில் வெளிவரும்.

தயாரிப்பு: சவேபூ சவுந்தரராஜா


10வது ஆண்டில் காலடிபதிக்கும்

**இமாலயாவின்**

தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்

**100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே**

உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....

**கடுகதி பார்சல் சேவை**

❀ பிரியாணி ❀ கொத்துறொட்டி ❀ இடியப்பப்பிரியாணி ❀ தண்டூரி வகைகள் ❀ நாண் ❀ சீஸ்நாண் ❀ சப்பாத்தி ❀ சமுசா ❀ றோல்ஸ் ❀ சோறு - கறி

இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51

**றெஸ்ரோறன் இமாலயா**

9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)

Pub

**சாந்தினி உணவகம்**

குதூகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது

14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
**Tel: 01 42 09 37 99**

காலை – 9.00 மணி முதல் இரவு – 11.30 மணிவரை

**உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு**

காலை: இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
மதியம்: சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
இரவு: நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு

மகிழ்ந்திட நாடவேண்டியது
சாந்தினி உணவகம்


Pub

# கி.பி 2000 ஆண்டிற்குப் பின்?

அல்வின் ரொவ்லர் - ஒரு அமெரிக்க சிந்தனையாளர் - அறிஞர் எதிர்காலம்பற்றிய கோட்பாடுகளை வெளியிடுபவர். அமெரிக்க குடியரசுக்கட்சியின் ஆலோசகர்களில் ஒருவர் என வர்ணிக்கப்படுபவர்.

இவர் உலகின் இன்றைய நாகரிகம் தீவிர மாற்றத்திற்கு உள்ளாகிவருகிறது எனக் கருதுகிறார். கைத்தொழில் கூடத்தை மையப்படுத்திய பொருளாதார - சமூக - கலாச்சார கோட்பாடுகளை உடைத்துக்கொண்டு புதிய நாகரிகம் உருவாகின்றது என்கிறார். இவரது 'The Third Wave' எனும் நூல் இதனை விரிவாக ஆராய்கிறது. புதியதொரு பொருளாதார - சமூக - அரசியல் - பண்பாட்டு கோட்பாடுகளை உலகை ஆளும் சக்திகள் பேசுவது பற்றி தமிழர்கள் அறிந்து வைத்திருப்பது அவசியமானது. இந்த நோக்கில் 'The Third Wave' நூலில் 'Super Struggle' எனத் தலைப்பிடப்பட்ட அவரது முதல் பார்வையைத் தழுவி மொழி பெயர்த்து இக் கட்டுரை தரப்படுகிறது.

- ஆ.கு.




## ஒரு அறிமுகம்

புதிய நாகரிகம் எங்கள் வாழ்வில் உருவாகுகின்றது. எங்கும் நிறைந்துள்ள குருட்டுத் தனமான மனிதர்கள் அதனை (அந்த உண்மையை) நசுக்கிவிட முனைகிறார்கள்.

இந்த புதிய நாகரிகம் புதிய குடும்ப நடைமுறையைக் கொண்டுவருகின்றது. வேலை செய்வதில் - நேசிப்பதில் - வாழ்வதில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றது. புதியதொரு பொருளாதாரம் உருவாகின்றது. புதிய அரசியல் முரண்பாடுகள் உருவாகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக இது ஒரு மாற்றப்பட்ட உள் உணர்வு தருகிறது. இந்தப் புதிய நாகரிகத்தின் துண்டுப்படிமானங்கள் தற்போது ஆங்காங்கே இயக்குகின்றன.

மில்லியன் கணக்கானோர் தமது வாழ்வை நாளைய ராகத்திற்கு ஏற்ப சுருதி சேர்த்து வருகின்றனர். மற்றவர்கள் எதிர்காலம் பற்றி விரக்தியடைந்து நம்பிக்கைகள் அற்ற தோல்விகரமான வழிகளில் கடந்த காலத்தை நோக்கி ஓடுகின்றனர். தமக்குப் பிறப்புத் தந்த 'இறந்துகொண்டிருக்கும்' உலகை மீள உருவாக்க முயல்கின்றனர்.

எங்கள் வாழ்நாளில் தனித்த மிகவும் பாரிய உண்மை என்னவெனில் ஒரு புதிய நாகரிகம் உருவாகின்றது என்பதேயாகும்.

இதுதான் மூலமான நிகழ்வாகும். நாம் உடனடியாக எதிர்கொள்ளும் வருடங்களைப் புரிந்து கொள்வதற்கான சாவியும் இதுவே.

பத்தாயிரம் வருடங்களுக்கு முன் விவசாயத்தை மனிதன் கண்டுபிடித்ததனால் கட்டவிழ்த்து விடப்பட்ட முதலாவது அலையைப் போன்று அல்லது கைத்தொழில் புரட்சி மூலம் தூண்டி விடப்பட்ட இரண்டாவது அலையைப் போன்றதே இம் மாற்றமுமாகும்.

நாங்கள் அடுத்த மாற்றத்திற்கான குழந்தைகள். இதனை மூன்றாவது அலை எனலாம்.

இந்த அசாதாரணமான மாற்றத்தின் முழுமையான வீச்சையும் சக்தியையும் விபரிப்பதற்கான வார்த்தைகளை நாம் இருட்டில் தடவுகின்றோம்.

சிலர் பிரமாண்டமாக விபரிக்கப்படும் விண்வெளியுகத்தைப் பற்றி (Space age) அல்லது தகவல் யுகத்தைப் பற்றி (Information age) அல்லது இலத்திரனியல் யுகத்தைப் பற்றி (Electronic age) அல்லது உலகக் கிராமம் (Global Village) பற்றிப் பேசுகிறார்கள். Zbigniew Brzezirski எனும் அறிஞர் 'தொழில்நுட்ப இலத்திரனியல் யுகம்' பற்றி எமக்குச் சொல்கிறார். சமூகவியலாளர் டானியல் பெல் 'கைத்தொழில் சமூகத்திற்கு பின் உருவான சமூகம்' பற்றி விபரிக்கின்றார். சோவியத் எதிர்காலம் பற்றிய நிபுணர் 'விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சி' பற்றி பேசுகிறார். நான் 'சுப்பர் கைத்தொழில் சமூகம்' பற்றி அதிகம் எழுதுகின்றேன். ஆனால் என்னுடையது உட்பட இத்தகைய எந்த விபரிப்புகளும் போதுமானதல்ல.

ஒரு தனித்த விடயத்தை பிரதானப்படுத்தும் இத்தகைய வார்த்தை பிரயோகங்கள் குறுகியது. மற்றய விளக்கங்கள் அசைவில்லாதது. புதிய சமூகம் எமது வாழ்வில் சுமுகமாக வந்து இறங்கும் என வெறுமனே நம்புவது. ஆனால் எத்தகைய இவ் விளக்கங்களும் நாங்கள் விரைந்துசெல்லும் மாற்றங்களின் முழு சக்தியை, பார்வையை, அடர்த்தியை ஆரம்ப கட்டத்திலேயாயினும் விளக்கும் வலுவற்றது. அல்லது இவ் விளக்கங்கள் மாற்றங்கள் தூண்டிவிடும் அழுத்தத்தை அல்லது முரண்பாடுகளை பிரதிபலிக்கவில்லை.

மனிதகுலம் பாரிய முன்னோக்கி பாச்சலை எதிர் நோக்குகின்றது. மனிதகுலம் ஆழமான சமூக கலகங்களையும் (எழுச்சிகளையும்) ஆக்கபூர்வமான மீளமைப்பையும் எதிர்நோக்குகின்றது. தெளிவாக இதனை இனம்காணாமல் நாம் மண்மேட்டிலிருந்து மகத்தான புதிய நாகரிகத்தை கட்டி எழுப்புகிறோம். இது தான் மூன்றாவது அலைக்கான கருத்தாகும்.

இதுவரைகாலமும் மனித இனம் இரு பிரதான மாற்ற அலைகளுக்கு இரையானது. ஒவ்வொன்றும் தமக்கு முன்னைய நாகரிகத்தையும், பண்பாட்டையும் பழையதாக்கியது. அதற்கு பதிலாக முன்னோரால் உணரமுடியாத (கற்பனை பண்ணி பார்க்க முடியாத) வாழ்க்கை முறையை உட்புகுத்தியது.

முதலாவது அலை எனப்படும் விவசாய புரட்சி முழுமையடைய ஆயிரக்கணக்கான ஆண்டுகளை எடுத்தது. இரண்டாவது அலையான கைத்தொழில் நாகரிகம் வெறும் 300 ஆண்டுகளில் இடம் பெற்றது. இன்று வரலாறு விரைவானது. வரலாற்றில் மூன்றாவது புரட்சி சில தசாப்தங்களிலேயே இடம்பெறக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. இந்தக் கணத்தில் இப் பூமி பந்தைப் பகிரும் நாம் மூன்றாவது அலையின் முழுமையான தாக்கத்தை எமது வாழ்நாளில் உணர்வோம். எங்கள் இன்றைய குடும்பம் பற்றிய கருத்தை உடைத்து, எமது பொருளாதாரத்தை மோதி உடைத்து, எமது அரசியல் முறையை இயக்கமற்றதாக்கி, எங்களது சமூக விழுமியங்கள் பற்றிய கருத்தைச் சிதைத்து, மூன்றாம் அலை அனைவரையும் பாதிக்கப் போகிறது. இது அதிகாரம் பற்றிய முன்னைய கோட்பாடுகளையும் சவாலுக்கு அழைக்கிறது. இதன் பின்னணியில் நாளைய அதிகாரப் போட்டிகள் இடம் பெற உள்ளன.

உருவாகும் புதிய நாகரிகத்தில் இடம் பெறும் பல அம்சங்கள் பழைய கைத்தொழில் நாகரிகத்துடன் முரண்படுகின்றன. இது உயர் தொழில் நுட்பமும் கைத்தொழில் எதிர் கருத்துக்களும் (Anti Industrial) கொண்டன.

3-ம் அலை, உண்மையில் புதிய வாழ்வு முறையைக் கொண்டுவருகிறது. மீள நிரப்பக்கூடிய சக்திவளங்கள் - ஏராளமான தொழிற்கூடங்களின் உற்பத்தி முறைகளை பழையன என ஒதுக்கக்கூடிய புதிய உற்பத்தி முறைகள்-புதிய குறுகிய தன்மையற்ற குடும்ப உறவுகள் - இலத்திரனியல் குடில் (Electronic Cottage) எனப்படும் உயரிய நிறுவன முறைகள் - தீவிரமாக மாற்றப்பட்ட பாடசாலைகளும், நிறுவனங்களும் உருவாக உள்ளன.


உருவாகும் நாகரிகம் எமது பழக்கவழக்கங்களைப் பற்றிய புதிய நடைமுறைகளைக் கொண்டுவரும். எங்களை தராதரப்படுத்தப்பட்ட, மையப்படுத்தப்பட்ட நிலைகளுக்கு அப்பால் கொண்டு செல்லும். பணம், சக்தி, அதிகாரம் என்பனவற்றை மட்டும் கவனிக்கும் சிந்தனைக்கு அப்பால் எம்மைக்கொண்டு செல்லும்.

இந்த புதிய நாகரிகம் பழையவற்றை சவாலுக்கு அழைப்பதுபோல் பழைய நிர்வாக வர்க்கத்தை (Bureaucracies) கவிழ்த்துவிடும். நாடு-தேசம் என்பவற்றின் பாத்திரத்தை குறைத்துவிடும். காலனித்துவம் முடிவடைந்துள்ள உலகில் ஓரளவு சுயாதிகாரம் உள்ள பொருளாதாரங்களை உருவாக்கும். இதற்கு இலகுவான - நன்றாக செயற்படக்கூடிய ஜனநாயக அரசு தேவைப்படும். இந் நாகரிகத்திற்கு தனக்கே உரிய பார்வை உண்டு.

நேரம் - இடைவெளி - தர்க்கம் என்பவற்றை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி சொந்த நடைமுறைகளை இது கொண்டிருக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக உற்பத்தியாளனுக்கும் பாவனையாளனுக்கும் இடையே உள்ள வரலாற்று பூர்வமான காயங்களை இப்புதிய நாகரிகம் மெதுவாக குணப்படுத்துவதை நாங்கள் பார்க்கப்போகிறோம். இதனூடாக எழுதப்பட்ட வரலாற்றின் மிக மனிதத்தன்மை நிரம்பிய நாகரிகத்தை நாம் காணப்போகின்றோம்.

புதிய நாகரிகம் புதிய குடும்ப நடைமுறையைக் கொண்டுவருகின்றது. வேலை செய்வதில் — நேசிப்பதில் — வாழ்வதில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றது. புதியதொரு பொருளாதாரம் உருவாகின்றது. புதிய அரசியல் முரண்பாடுகள் உருவாகின்றன.



# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

## லெப். கேணல் இளநிலா

### செல்வராசா அனுராஜினி

*(செட்டியகுறிச்சி, பூநகரி, மன்னார்)*



தமிழனைத் தலை நிமிர்ந்து நிற்க வைத்த தானைத் தலைவன் பிரபாகரனது இயக்கத்தில் தன்னையும் இணைத்து தாயகம் மீட்கப்புறப்பட்ட தாரகையே! தரணியில் இளநிலாவெனத் துலங்கி கடற்புலியாகி களம் பல கண்டு கடும் சமர் புரிந்து கொடிய சிங்களவனை குலை நடுங்க வைத்த காரிகையே— கடற்புலியே!! முல்லைச் சமரில் கடலில் கலந்து கடற்கன்னி ஆகிவிட்டாயோ! இளநிலாவே நீ மறையவில்லை. இளநிலா போல் தேய்ந்து விட்டாய்—தமிழ் ஈழம் மலரும் பொன் நாளை நாம் காணத்தான் போகின்றோம்.

இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா அம்மா சகோதரர்கள்

தாயின் மடியில்: 06.07.1976

மண்ணின் மடியில்: 02.10.1995

தகவல்: சகோதரன் செ. மூர்த்தி
தொலைபேசி: 0181-3850718

---

**'விழிநீர் துடைக்க எண்ணும் விரலும் அழுகின்றது'**



# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

## 28.09.98

### திரு. கணேசு சரவணபவா

*(புங்குடுதீவு – பிரான்ஸ்)*

தோற்றம்: 17.10.56

மறைவு: 20.09.96

ஆண்டுகள் இரண்டு ஓடியென்ன ஆறியதோ எம் துயரம்...
நீண்ட வழிப் பயணத்தில்
பாதி வழியில் பறித்தெடுத்த பாதகனை என்னென்று நாம் அழைக்க?
வேராகி நாம் வாழ விழுதாக நின்றவரே தீராது எங்கள் துயர்!
அனலாய் துடிக்கின்றோம். அப்பாவைக்காண ஆவலாய்த் துடிக்கின்றோம்.
அப்பாவைக் காண ஆவலாய்த் துடிக்கும் எம் அன்புச் செல்வங்களுக்கு
என்ன ஆறுதல் சொல்ல? பிரிவையைத் தாங்காது பெற்றவளும்
உறவுகளும் துவழ்வதை சொல்லிடவா! நாம் பூமியில் வாழும்வரை
நீங்கள் எங்களுடன் வாழ்வீர்கள் அப்பா!
உங்கள் நேர்மையான நெறி வாழ்வு நிழலாக எமை வழி நடத்த...
நாம் தொடர்கின்றோம் அவ் வழியில்

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!*

எதிர்வரும் 28.09.98 திங்கட்கிழமை மதியம் அவரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம ஈடேற்ற பூஜை வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி திருமதி சகுந்தலா சரவணபவா, தாயார், பிள்ளைகள், உறவுகள்
தொலைபேசி: 9143554237

# சிட்னியிலிருந்து வன்னிக்கு – 11

*அவுஸ்திரேலியாவில் தற்போது இருக்கும் திரு. பொன்னி வேந்தன் அவர்கள், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கொழும்புக்குச் சென்று அதன் பின் வன்னிக்கும் சென்றிருந்தார்.*

*அங்கு தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் ஒரு பயணக் கட்டுரையாக வடித்திருக்கிறார்.*

*இக் கட்டுரை தொடராக ஈழமுரசில் வெளிவந்து, இவ்வாரத்துடன் நிறைவுபெறுகின்றது.*

*— ஆர்.*

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

விடுதலைக்காகப் போராடும் வீரர்கள் உயிரை வெறுத்துப் போராடுகிறார்கள். அவர்கள் ஏன் அப்படிப் போராட வேண்டும்? சாக வேண்டும்? எம் விடிவிற்காகத்தானே என்று சிலர் உண்மையை அப்படியே பேசிக்கொள்கிறார்கள். சிலர் மூக்கைச் சுழித்துக்கொள்கிறார்கள். மனித இயல்பாயிற்றே. ஆனால் நான் சந்தித்துப்பேசிய கலந்துரையாடிய அனைவரினதும் உணர்வுகள் அவர்களின் சொந்த விருப்பு வெறுப்புக்களை எல்லாம் தாண்டி விடுதலை உணர்வு கொண்டு இருக்கின்றது என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. 'மலையே வரினும் தலையே சும' என்ற வீராப்பு 'தலைக்கு மேல் வெள்ளம் வந்தால் சாண் என்ன முழம் என்ன?' என்ற மனப்பாங்கு, விடுதலை வீரர்களுக்குக் காட்டும் அன்பும் அரவணைப்பும், தேச நலனுக்காக விடிவதற்காக எதையும் இழக்கத் தயாராகும் மனப் பக்குவம், விடுதலை வீரர்கள் நடாத்தும் தெருக் கூத்துக்களில் ஆண்கள், பெண்கள், பெரிசுகள் சிறிசுகள் அனைவரும் ஆர்வத்துடன் கூட்டம் கூட்டமாக வந்து பங்கெடுக்கும் உற்சாகம், ஆங்காங்கே அமைக்கப்பட்ட 'புதிய போராளிகள் சேரும் இடம்' என்று விளம்பரம்.

போடப்பட்ட அலுவலகங்களில் தாமாகச் சென்று தம்மை விடுதலை என்னும் புனிதப் பணியில் இணைத்துக் கொள்ளும் இளம் தலைமுறையினரின் விடுதலைத் தாகம். சுதந்திர உணர்வு வேண்டி நிற்கும் பத்திரிகைச் செய்திகளை வானொலிச் செய்திகளைப் பார்ப்பதில், கேட்பதில் காட்டும் அளவற்ற அக்கறை. தமக்கு விளங்காவிதல் அமைதியாக இருந்தது தடையில்லாமல் இருந்து, விடுதலைக்கு ஆதரவு புரியும் மனோபாவம் அரச படைகள் சிதைவுண்டு சிதறி ஓடும்போது காட்டும் ஆரவாரம் எல்லாவற்றிற்கும் மேலாக அளவிட முடியாத சகிப்புத் தன்மை, பொறுமை, எதனையும் தாங்கும் இதயம் மக்களின் விடுதலை உணர்வை வேட்கையை தெளிவாகக் காட்டி நிற்கிறது. இருந்தும் காட்டிக் கொடுப்பவர்களும், சுய நலப்போக்குக் கொண்டவர்களும் அற்ப சலுகைகளுக்காக விவாதித்துக் கொள்பவர்களும் இல்லாமல் இல்லை. துன்பங்களையும் வறுமைகளையும், பசியையும் பிணியையும் இழப்புக்களையும் தாங்கமுடியாதவர்கள். ஏன் இந்தப் பாவிகள் இப்படிச் சண்டை பிடித்து எம்மைக் கஷ்டப்படுத்துகிறார்கள். நாம் இவர்களுக்கு என்ன செய்தோம். என்று கண்ணீர்விட்டுக் கொள்வோரும் இல்லாமல் இல்லை. எப்போது தம்பி இந்தச் சண்டை முடியும். ஏன் தம்பி சண்டை பிடிக்கி

> **கொழும்பில் கொஞ்சப் பேர் அரசியல் நடத்துகினம். வவுனியாவில, மட்டக்களப்பில, திருகோணமலையில கொஞ்சப் பேர் அரசியல் நடத்துகினம். ஏன் இப்ப யாழ்ப்பாணத்திலும் நடத்துகினம் என்று கேள்வி'. சிங்களச்சாதி ஒன்றாய்த்தானே நின்று சண்டை பிடிக்கினம். அவர்களில் ஒருவரும் எங்களுடன் இல்லையே.**

றார்கள் என்று ஆதங்கத்தோடு கேட்டார்கள். அந்த அப்பாவிகளுக்கு எதைத்தான் என்னால் கூற முடியும். எவ்வாறு ஆறுதல் சொல்ல முடியும். மேலும் ஒருவர் 'தம்பி ஏன் எங்கடை தமிழ் சாதி ஒற்றுமை இல்லை. கொழும்பில் கொஞ்சப் பேர் அரசியல் நடத்துகினம். வவுனியாவில, மட்டக்களப்பில, திருகோணமலையில கொஞ்சப் பேர் அரசியல் நடத்துகினம். ஏன் இப்ப யாழ்ப்பாணத்திலும் நடத்துகினம் என்று கேள்வி. இங்க நாங்கள் வன்னியில் படாதபாடு படுகிறோம். சிங்களச்சாதி ஒன்றாய்த்தானே நின்று சண்டை பிடிக்கினம். அவர்களில் ஒருவரும் எங்களுடன் இல்லையே. ஏன் தம்பி இந்த சாபக்கேடு? இந்தத் தமிழ்ச் சாதிக்கு இதுகள் திருந்தாதே தம்பி. என்னத்த தம்பி திருந்த எல்லாம் தான் தப்ப்' என்றவாறு கூறிப் பெருமூச்சு விட்டதை நினைக்க வெட்கமாக இருந்தது. இன்னொருவர் ஆவேசத்துடன் கூறியது ஜீரணிக்கக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. 'யாழ்ப்பாண மக்கள் அகதிகளாக வன்னிக்கு வந்த போது இங்கேயும் வெளிநாட்டிலும் பேப்பர் பேப்பராகவும் ரெலிவிசனிலும் அடிக்கடி செய்தி போட்டுக் காட்டினார்கள். என்னைப் பார்த்து, 'வெளிநாட்டுக் காரர் நீங்கள் எத்தனை உண்ணாவிரதம் செய்தீர்கள் ஆர்ப்பாட்டமும் செய்தீர்கள் எம் மக்களைக் காப்பாற்றுங்கள் என்று' ஆனால் வன்னி மக்கள் அகதிகளாக்கப்பட்டபோது அப்படியொன்றும் பெரிதாகக் காணவில்லைத் தம்பி. ஏன் நாம் ஈழத் தமிழர்கள் இல்லையா? அல்லது வன்னித் தமிழ் ஈழத்திற்கு சேராத பகுதியா? அல்லது நாம் தமிழ் ஈழத்திற்கு எதிரானவர்களா? சொல்லு தம்பி' என்று கேள்வியும் கிண்டலுமாக ஆவேசத்துடன் அந்த மனிதன் கேட்ட கேள்விகளுக்கு என்னால் பதில்கூற முடியவில்லை. கள்ளம் கபடமற்ற அந்த மனிதர்கள் எவ்வாறு நொந்துபோயிருக்கிறார்கள் கடவுளே! சற்று பொறுமையாக இருந்துவிட்டு ஏதோ நினைத்தவாறு நீங்கள் என்ன தம்பி கூறமுடியும்? யார் யாரை நோவது? பெருமூச்சு விடுகிறார் என் மனம் வேதனையால் குற்ற உணர்வால் படபடக்கிறது.

இன்றும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு படித்த நல்ல இளைஞர் கூட்டம். நானும் இருக்கிறேன். எல்லாமாக ஏழு எட்டுப் பேர்கள் வரை அங்கு இருந்து பல விடயங்கள் பற்றிப் பேசினோம். அச் சந்தர்ப்பத்தில் ஒருவர் அவர் யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல்யமான கல்லூரி அதிபராக இருந்தவர். நல்ல படித்த அனுபவம் வாய்ந்த ஒரு அறிவாளி. யாழ்ப்பாணத்துப் பல சொத்துக்களுக்கும் சுகங்களிற்கும் சொந்தக்காரர். பல உள்ளங்களை குறிப்பாக ஆசிரியர்களையும், மாணவரினதும் உள்ளம் கவர்ந்த இவர் கள்வன். அன்பும் அதேவேளை கடுமையான போக்கும் கொண்டவர். சரியானவற்றிற்காக எதையும் தியாகம் செய்யும்கொள்கை கொண்ட ஒரு இலட்சியவாதி. எல்லாவற்றிற்கும் மேலாக என் மானசீகமான குருவும்கூட. பதவியை விட்டு சொத்து சுகங்களைவிட்டு பிள்ளைகள் அங்குமிங்குமாக சிதறிப்போக, தான் கொண்ட கொள்கைக்காக மனிதாபிமானத்திற்காக வன்னியில் வந்து ஒரு சிறிய வீட்டில் எதுவித வசதியும் இன்றி அல்லல் படும் மக்களிற்காக கல்வி இழந்து நிற்கும் தவிக்கும் மாணவருக்காக உழைக்கும் அந்தப்

> **எல்லோரும் தமிழர். தமிழினம், தமிழ் பேசும் மக்கள். ஒருகலாச்சார பாரம்பரிய பிரதேசத்தில் வாழுபவர்கள் என்ற தேசிய உணர்வு உள் தள்ளப்பட்டு நாம் ஈழத்தினர் என்ற உணர்வு உச்சக்கட்டம் அடையவேண்டும். அப்பொழுதுதான் எமது இலட்சியம் வெற்றியடையும்.**

புனிதமான ஜீவன் வாயிலிருந்து அந்தச் சாதி இந்தச்சாதி ஏழை பணக்காரன் யாழ்ப்பாணத்தான், வன்னியான், மட்டக்களப்பான் என்று எங்களிற்குள் இன்னும் எத்தனை பிரிவு பிழவுகள்; ஏற்றத்தாழ்வுகள் யாழ்ப்பாணம் பறிபோனவுடன் தமிழ் ஈழமே போச்சு என்றமாதிரி எல்லோரும் சேர்ந்து போனம். ஆனால் யாழ்ப்பாணம் பறிபோனதிலும் பார்க்க பல மடங்கு நிலப்பரப்பை கிழக்கில் விடுதலை வீரர்கள் கைப்பற்றி இருக்கிறார்கள். அது மட்டக்களப்புத்தானே. திருகோணமலைதானே அதைப் பிடித்து என்ன செய்யப்போகினம். யாழ்ப்பாணம் போச்சுது. இனி என்ன போகக்கிடக்கு. அவை தோற்றுப் போச்சினம். இவ்வாறான குறுகிய கொடூரமான மனப்பான்மை படித்தவர்கள் என்று சொல்லிச்சொல்லிக் கொள்பவர்களும் சரி மற்றவர்களும் சரி இந்த சுயநலப் போக்கு குறுகிய பிரதேச மனப்பான்மை பாகுபாடு இல்லாமல் முற்றாக அழிய வேண்டும் கொழும்பில் கொஞ்சப் பேர், வவுனியாவில் கொஞ்சப் பேர், வன்னியில் கொஞ்சப் பேர், வடக்கில் கொஞ்சப் பேர் என்ற நிலை மாறவேண்டும். இந்த வேறுபாடுகள் அடியோடு ஒழிய வேண்டும். எல்லோரும் தமிழர். தமிழினம், தமிழ் பேசும் மக்கள். ஒரு கலாச்சார பாரம்பரிய பிரதேசத்தில் வாழுபவர்கள் என்ற தேசிய உணர்வு உள் தள்ளப்பட்டு நாம் ஈழத்தினர் என்ற உணர்வு உச்சக்கட்டம் அடைய வேண்டும். அப்பொழுதுதான் எமது இலட்சியம் வெற்றியடையும்.

விடுதலைக்காக தம் சுய நலன்களையெல்லாம் விட்டு போராடும் விடுதலைப் போராளிகளுக்கும், மற்றவர்களுக்கும் இவ்வாறான ஒரு களத்தை ஏற்படுத்திக்கொடுப்பதில் ஒவ்வொரு ஈழத் தமிழனும் பங்கெடுத்து அதில் வெற்றி காணும் போதுதான் சுதந்திரமும் மலரும். நாங்கள் அதை இப்ப இந்த நிமிடமே செய்யவில்லை என்றால் .....' என்றுவிட்டு கனிந்த குரலில் அழுகை கலந்த சிரிப்புடன் அவரின் இரண்டு கண்களாலும் கண்ணீர் சொரிகிறது. தளதளத்த குரலில் இந்நிலையிலும் உணராதவர்கள் இனி எப்ப உணரப்போகிறார்கள். எல்லாம் அழிந்த பிறகா? மூக்கில் விரலை வைத்தபடி இருந்துவிட்டு தம்பிமார் சாப்பிட்டீர்களா? என்றார். மனம் வேதனையில் நிரம்பி கனத்துப்போயிருந்த நான் வெட்கித் தலை கனிந்தவாறு நாகூச 'நான் அவசரமாகப் போக வேண்டும்' என்று கூறினேன். அவருக்கு முன் கோழைத்தனமாக அழுவதற்கு முன் அவ்விடத்தில் இருந்து ஓடவேண்டும் என்பதற்காக.

இதன் பின்பு நான் எங்கும் செல்லவில்லை. சோகமே வடிவமாய் உணர்வு அற்ற சடலம் போல் சிலதினம் தூங்கி வீட்டில் செய்யவேண்டிய சில முக்கிய கடமைகளை சுருக்கமாகவும், எளிமையாகவும் செய்துவிட்டு என்னை சுற்றிச் சுற்றித் திரிந்த என் உடன் பிறப்புக்கள், உறவுகள், நண்பர்களுக்குப் பயணம் கூறிவிட்டு மனதில் பாரங்களையும், கவலைகளையும் சுமந்த வண்ணம் சில கடமைகளையும், பொறுப்புக்களையும் தலையில் போட்டுக்கொண்டு அழுகைக் குரலுக்கூடாக ஒருவாறு சமாளித்து விலத்தி விடைபெற்றுக்கொண்டு என் பயணத்தை நடு நிசியில் தொடர்ந்தேன். மீண்டும் நீண்ட அந்தப் பயணம் 18 நாட்கள் வன்னியில் ஏற்பட்ட அனுபவங்களை இரைமீட்ட வண்ணம் தொடர்ந்தது.

*இப்படிக்கு*
*பொன்னி வேந்தன்.*

*(பயணம் நிறைவுற்றது)*


அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

(மக்கள் கடை முன்பாக)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணிவரை

60, Rue Louis Blanc, 75010 Paris

Tel & Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்.

தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம் Marcadet Poissonniers இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

20 Rue Labat, 75018 Paris

M°: Marcadet Poissonniers

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு! திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

Pub

# புரட்சியைப் புதுமையாய் இணைத்த பரதநாட்டிய அரங்கேற்றம்

பிரான்ஸ் செவ்ரோன் தமிழ்ச் சோலை நடன ஆசிரியை செல்வி தனுஷா இராசரத்தினம் அவர்களின் மாணவிகளும், பெறாமக்களுமாகிய செல்விகள் பிரியந்தி (மதுமி) நகுலராஜா, நியோனி தயாநிதி ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த சனிக்கிழமை 05.09.98 மாலை பாரிஸில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

அமைதி வணக்கம் செலு -த்தப்பட்டதைத் தொடர்ந்து, பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயக் குருக்கள் ஈஸ்வர ஐயர் சலங்கை பூஜை செய்து அரங்கேற்ற விழாவைத் தொடக்கி வைத்தார்.

செவ்ரோன் தமிழ் மன்ற நிர்வாகி திரு. தவகுணசீலனின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. இணைந்தும், தனித்தனியாகவும் புஸ்பாஞ்சலி தொடக்கம், தில்லானாவரை பத்து உருப்படிகளையும் கடைசியாக 'தாயக நினைவு' எனும் நிகழ்வையும் மிகச்சிறப்பாகத் தமது அபிநயங்கள் மூலம் வெளிப்படுத்தியிருந்தனர், பிரியந்தியும் நியோனியும்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கலைவேள், கலைமாமணி திரு.எஸ்.ஜேசுரட்ணம் அவர்கள் கலை கலைக்காக'வென இருந்த காலம் பல வழிகளில் பரிணாமம் அடைந்து இன்று 'கலை விடுதலைக்காக' எனும் நிலை தோன்றியுள்ளது. வாழ்விழந்து, வளமிழந்து, நிலமிழந்து அகதியாக வாழும் நிலையில் நம் தமிழினம் தம்மை அடையாளம் காட்ட இப்படியான நிகழ்வுகள் கட்டாயம் தேவை' எனக் கூறி வாழ்த்தினார்.

இசைவேளையில் பக்கவாத்தியக் கலைஞர்களும், பாடகியும் அழகான அசைவுகளுடன் அரங்கை நிறைத்தனர்.

பிரான்ஸ் தமிழ்சோலை கல்விப்பணிப் பொறுப்பாளரும் ஆசிரியருமான திரு.அருளம்பலம் அவர்கள் 6 வருடங்களாக நடனம் பயின்று இன்று அரங்கேற்றம் காணும் செல்விகளை வாழ்த்தி சான்றிதழ்களை அளித்து கௌரவித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப்பணியகப் பொறுப்பாளர், 'எமது சமூகத்திலிருந்து புலம் பெயர்ந்து இயந்திரமயமான சூழ்நிலையில் வாழும்பொழுதும் நேரத்தை ஒதுக்கி கடுமையான பயிற்சி முயற்சி, தீராத உழைப்பு என்பவற்றின் மூலம் மைல் கல்லைத் தாண்டிய இச்சிறுமிகள் பாராட்டுக்குரியவர்கள். மரபுக் கலையான பரதத்தை மக்களிடம் அழைத்துவரும் காரியத்தை பாரிஸின் முன்னணி நடன ஆசிரியர்களில் ஒருவரான செல்வி தனுஷா இராசரத்தினம் செவ்வனே செய்கின்றார். நேற்றும் இன்றும் கடுமையான நாட்கள்; நாளை சிறப்பாயிருக்கும். நாளை அமைக்கப்படவிருக்கும் நாட்டில் தமது எதிர்காலத்தை இவ் அனைத்துக் கலைஞர்களும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்' எனக் கூறியதுடன் சமகால நிகழ்வுகளைப் பற்றியும் தெரிவித்தார்.

'தாயக நினைவு' எனும் உருப்படிக்கு நவரசங்களையும் உள்ளடக்கி எமது நேற்றைய, இன்றைய, நாளைய வாழ்வைப் பிரதிபலித்து புரட்சிச் சிந்தனை



யோடும் கலைரசனையோடும் நெறிப்படுத்தியிருந்த செல்வி தனுஷாவும் அவரது சிந்தனையை தமது அபிநயங்களின் மூலம் அழகுற உணர்வோடு வெளிப்படுத்திய மதுமி, நியோனியும் பாராட்டுக்குரியவர்கள். தற்போது பரதநாட்டிய அரங்கேற்றங்களில் புதுமைகள் புகுத்தப்பட்டு வருகின்றது. புரட்சிப் பாடல்களையும் இணைத்து வருகின்றனர். எனினும் இந்நிகழ்வு நாட்டிய நாடகப் பணியில் இதற்காகவே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட பாடலுடன் இருந்தது தனிச்சிறப்பு. பார்வையாளர்கள் அனைவரையும் கவர்ந்த நிகழ்வாக இது இருந்ததை கரகோஷம் வெளிப்படுத்தியது. இதற்கான பாடலை திருமதி அம்பிகை பாலகுமாருவுடன் இணைந்து திரு. இந்திரன் அவர்கள் பாடியிருந்தார். ஆயினும் அரங்கேற்ற நிகழ்வில் இறுதி நிகழ்வாக 'தாயக நிகழ்வு' பின்தள்ளப்பட்டிருந்தது ஒரு குறையாகவே இருந்தது.

முகபாவம், நளினமானமுறையிலான அசைவுகள், ஒவ்வொரு நிகழ்வின் முடிவிலும் மேடையிலிருந்து நீங்கிச் செல்லும் முறை என்பவற்றுடன் உடைகளுக்கான நிறத்தேர்வும் மிகவும் நேர்த்தியாயிருந்தது.

நிறைவாகவும், எழுச்சியுணர்வுகளையும் தூவியிருந்த இவ்வரங்கேற்றமே செல்வி தனுஷாவின் மாணவிகளது முதல் அரங்கேற்றம் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.

நடன ஆசிரியை செல்வி தனுஷா இராசரத்தினத்தின் நட்டுவாங்கத்துடன், யாழ். இந்து மகளிர் கல்லூரியின் சங்கீத ஆசிரியை திருமதி அம்பிகை பாலகுமாருவுடன் இணை -ந்து அவரது புதல்வி செல்வி சங்கீதா பாலகுமாருவும் குரலிசை வழங்கினார். திரு. ரவிதர்மராஜா- மிருதங்கம்; திருமதி கோமளா கந்தையா - வயலின்; திரு. நமசிவாயம் சத்தியன் - புல்லாங்குழல் ஆகியோர் தமது இசைக் கருவிகளின் மூலம் அளித்த இன்னிசை அரங்கேற்றத்தைச் சிறப்புற நடாத்தியது. விழாவின் இடையில் இவர்கள் அனைவரையும் செல்விகள் கௌரவித்துப் பரிசில்கள் வழங்கினர்.

நிகழ்ச்சிகளை திரு. புனிதனும், செல்வி லோஜினி கந்தையாவும் தொகுத்தளித்தனர். இறுதியில் மதுமியும், நியோனியும் முறையே தமிழிலும், பிரெஞ்சிலும் நன்றியுரை வழங்கினர்.

பல எழுச்சிமேடைகளில் தமது பங்களிப்பை செலுத்தியுள்ள இவர்களும், செல்வி தனுஷாவும் அவரது மற்றைய அனைத்து மாணவிகளும் தொடர்ந்தும் போராட்டத்திற்கான தமது பங்களிப்பைச் செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

- கரிகாலன்

# புனர்வாழ்வுக் கலை மாலை

டென்மார்க் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட புனர்வாழ்வுக் கலைமாலை கடந்த 12.09.98 சனிக்கிழமை கோசன்ஸ் நகரில் வெகு சிறப்பாக நடந்தேறியது. கோசன்ஸ் நகர மக்களால் ஒழு -ங்கு செய்யப்பட்ட கலைமாலையில் சிறுவர்கள் பங்குபற்றி தாயக உணர்வுகளை மீட்டும் பேச்சுக்களை வழங்கினார்கள். திருக்கோணேஸ்வர நிருத்திய கலாலயத்தின் ஆசிரியை திருமதி கௌரி வசந்தி தயாராஜனின் பின்னணிப் பாடலுக்கு செல்வி சுஜாதா விஜயமோகனின் அபிநயம் இடம்பெற்றது.

செல்வி சுபாஷினி ரவிச்சந்திரன், சுரேஸ்குமார் ரவிச்சந்திரன் வழங்கிய பாடலுக்கான அபிநயத்துடன், செல்வி டயானா அன்ரனி குழுவினரின் நடனமும் இடம்பெற்றது. ஈழத் தமிழர் கலையரங்கம் வழங்கிய 'பக்கங்கள் புதிது' நாடகமும் சிறப்பாக இருந்தது. 'யாழ் முரி 98' போட்டியில் வெற்றிபெற்ற ராகமாலிகா இசைக்குழுவினர் எழுச்சி கானங்களையும் வழங்கினர்.

கோசன்ஸ் நகரில் முதல் முறையாக இந்நிகழ்ச்சி நடைபெற்றாலும் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு பங்களிப்புச் செய்தமை மிகவும் பாராட்டும் வகையில் அமைந்திருந்தது.

– கி.செ.

# புகலிட நிகழ்வுகள்

## தமிழீழ மணம்கமழ்ந்த நடந்த ஹையின்பேக் தமிழாலயவிழா

29.08.98 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஹையின்பேக் தமிழாலய விழா Konig Str 1ல் உள்ள மண்டபத்தில் அமைதி வணக்கத்துடன் ஆரம்பமானது. உ.த. இயக்கக் கல்விப் பணியின் பொறுப்பாளரும், ஆசிரியருமான திரு.இரா. நாகலிங்கம் அவர்களும் தமிழாலய நிர்வாகி திரு. மா. சுரேஸ்குமார் அவர்களும் மங்கல விளக்கேற்றி விழா நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தனர். மாணவர்கள் தமிழாலய கீதம் இசைத்த பின் திரு.சி. சிறிகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார். மக்களை விழிப்புணர்வு கொள்ளச்செய்த பேச்சுக்கள், கவிதைகள், நடிப்பும் கதையும், நடனங்கள், நாட்டியங்கள், வில்லுப்பாட்டு நாடகம் என்பன மிகவும் சிறப்பாக அவையோரைக் குதூகலம் அடையச் செய்தன.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நகர பிதா Bechesten அவர்கள் தமது உரையிலே எல்லாரும் ஒற்றுமையாக இருந்து இவ் விழாவைச் செய்வது மகிழ்ச்சியானது என்றார். திரு.மு.க. கங்கேஸ்வரன் அவர்கள் தலைமையுரையில் அனைத்துப் பெற்றோரும் தமிழ் மொழி கற்க தமது பிள்ளைகளை அனுப்பவேண்டும் என வேண்டிக்கொண்டார்.

உ.த. இயக்கக் கல்விப் பணியின் பொறுப்பாளர் இரா. நாகலிங்கம் அவர்கள் உரையாற்றுகையில், மேலை நாடுகளுள் ஜேர்மனியிலேயே தமிழ்மொழி கலை, கலாச்சாரங்களில் பிள்ளைகள் சிறந்து விளங்குகின்றனர். இதற்கு தமிழாலயங்களே வழிகாட்டுகின்றன. இப்பிள்ளைகள் உயர் கல்வி கற்கும் காலத்திலே அறிவியல், தொழில் நுட்பங்களைப் புரிந்து உணர்ந்து எமது மலரப்போகும் தாயகத்துக்கு உதவ வல்லவர்களாக தாய்மொழி அறிவையும் கற்றுக் கொள்ள வேண்டும் என வேண்டினார்.

தமிழாலயப் பணியிலே ஆர்வம்காட்டிப் பணியாற்றுகின்ற நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையும் உ.த. இயக்கக் கல்விப்பணி வாழ்த்தி நன்றியையும் கூறுகின்றது. அவர்களின் பணி தொடரவும் ஆலயம் சிறந்து வளரவும் விழாச்சிறப்புறவும் வேண்டுமென வேண்டிக் கொண்டதுடன் அவர்கள் நிர்வாகிகளை பரிசளித்து கௌரவித்தார். Frau Przybilla;. Frau Blozmers மற்றும் ஆசிரியைகள் திருமதி நிரேமினி ரஞ்சித், ரசனி சத்தியகுமார், நடன ஆசிரியர் எஸ். ஆனந்தராசா ஆகியோர் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கினர். திரு. மு. கங்கேஸ்வரன் அனைவருக்கும் நன்றியுரை வழங்க விழா இனிது நிறைவுற்றது.

## உலகத் தமிழர் இயக்கம்-ஜேர்மனி நடாத்தும் பொதுத்தேர்வு 1998-ல் வெளிவாரி மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

உலகத்தமிழர் இயக்கம் நடாத்தும் அனைத்துக் கல்வியாண்டுகளுக்குமான பொதுத் தேர்வு, இந்த வருடம் 14.11.1998 அன்று நடைபெறவுள்ளது.

தமிழ், சமூகக் கல்வி ஆகிய பாடங்களுக்கான தேர்விற் தோற்ற விரும்பும் வெளிவாரி மாணவர்கள், அருகாமையில் உள்ள தமிழாலயங்களை அணுகி விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 30.09.1998 இற்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தமிழாலயங்கள் அருகாமையில் இல்லாத பட்சத்தில், தாங்கள் 07021—81737 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

## நிகழ்ச்சிக் குறிப்புக்கள் (ஜேர்மனி)

26.09.98-ம் திகதி லண்டோவ் நகரில் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் நடாத்தும் புனர்வாழ்வுக் கலைத்தென்றல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

★ ★ ★

03.10.98-ம் திகதி செல்வி பவித்திரா செல்வகாந்தனின் மாணவியின் அரங்கேற்ற நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

★ ★ ★

10.10.98-ம் திகதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வருடாவருடம் நடாத்தப்படும் கானம்பாடி நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

ரவி வாகனசேவை

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது



தொலைபேசி: 0148765190 அல்லது 0607622689

Pub

# சூரிச்சில் மாதர் கலைமாலை

தமிழீழ போராட்ட வரலாற்றில் பெண்களின் பங்கு மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டு சமூக காரணிகளால் ஒடுக்கப்பட்டுவந்த பெண்ணினம், இன்று விடுதலையின் விளிம்




பில் வெற்றியின் சிகரத்தில், உலகைத்தொட்டு நிற்கும் புதிய தேசமான தமிழீழத்தின் பிரசவத்திற்கு ஆண்களோடு சரிநிகராய் நிற்கிறார்கள் என்றால் மிகையாகாது. சிங்கள பேரினவாதத்தின் கொடிய காட்டுமிராண்டித்தனமான மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மலர்ச்சியை நோக்காகக்கொண்டு, அதற்கு உதவு முகமாக சுவிஸ் பணியக மகளிர் அமைப்பால் 06.09.98 'மாதர் கலைமாலை' நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

ஜேர்மன் கலைபண்பாட்டுக் கழகத்தின் பல்வேறு நிகழ்வுகள் மேடையை அலங்கரித்து பாராட்டு பெற்ற இம் மாதர் கலைமாலை நிகழ்வுகள், ஜேர்மன் கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் சிவநாதன் அவர்களின் மங்கல விளக்கேற்றுதலுடனும் அமைதி வணக்கத்துடனும் ஆரம்பமாகின. விடுதலை கானங்கள் மக்களை விடுதலையின் பால் ஈர்த்து தாயக நினைவுகளை மீட்டெடுத்தாலும், அதனை விழிகளுக்கு விருந்தாக்கி அபிநயத்தோடு நடனங்களாக தவழ விட்டார் நடன ஆசிரியை சாவித்திரி இமானுவல். சிறப்பான நடனங்களை ஒழுங்குபடுத்தி செயல்படுத்திய இவ்வாசிரியைக்கு அவரின் மாணவமாணவிகள் ஆற்றிய பங்களிப்பும் சிறப்பாக அமைந்தது.




'அம்மம்மா அடைந்துவிடுவோம் விடுதலை....' என்னும் பாடலுக்கும் பிஞ்சுக்கால்களால் பிறந்ததுதான் எத்தனை எத்தனை வியூகங்கள். தன்னை உருக்கி தமிழினம் ஒளிர தியாகித்த அன்னை பூபதித்தாயை நினைவு கூரத்தக்க 'நீதியை தட்டிய அகிம்சைத்தாயே பூபதித்தாயே...' என்னும் பாடலுக்கும் நடனமூலம் உயிர் கொடுத்ததையும், கலை என்பது மொழியைத் தாண்டி எவ்வாறு பிரகாசிக்கிறது என்பதை பறவைக் கூட்டத்தை அழிக்கச்சென்ற ஒரு வேடனை, தம் ஒற்றுமையால் முறியடித்த பறவைகளின் நிலையை தக்க முறையில் சித்தரித்த நாட்டியநாடகத்தையும், ஒரு தமிழ் மண்ணை உலகிலே நிறுவ வென்று நீதியின்பால் துணிந்து நியாயமாகப் போராடும் புலிகளை, அழிப்பதாகக் கூறி ஆரம்பித்த 'வெற்றிநிச்சயம்' இன்று ஆரம்பித்தவர்களையே அழிக்கும் நிலையையும், புலிகளின் பிரமிக்கத்தக்க போராட்ட வெற்றியையும் எடுத்துக்காட்டி, புத்த பெருமான் போதித்த 'புனிதமும் நீதியும்' புலிகள் காப்பாற்றி நிற்பதால் இந்த வெற்றி நிச்சயம் புலிகளுக்கே என்பதை நாட்டிய நாடகமூலமாகவும் வெளிப்படுத்திய நடன ஆசிரியைக்கும் மாணவ மாணவிகளுக்கும் பாராட்டுக் கொடுத்தார்கள் பார்வையாளர்கள்.

சுவிஸ் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் ஆற்றிய உரையில், பலத்தைக்கண்டு பயப்படாது அதன் பலவீனத்தை பார்க்கவேண்டும் எனவும், சவால்களையும், இடர்களையும் முறியடித்து தன்னம்பிக்கையோடு வெற்றியை நோக்கி நகர்த்தப்படும் செயற்பாடுகளை விஸ்தரிக்கவேண்டும் எனவும் கேட்டு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் அடிமையாக வாழ்ந்த தமிழினத்திற்குக் கிடைத்த ஒப்பற்ற தலைவன் வழியில் அனைவரும் ஒன்றுதிரளுமாறு அறைகூவி தனது உரையை முடித்தார்.

காலம் காலமாக தூங்கிக் கிடந்த பெண்ணினம் இன்று தமிழீழ விடுதலையில் ஆற்றி வரும் அளப்பரிய வீரசாதனைகளை எடுத்துக் கூறி அன்னியரின் கொடுமைகளால் தாய்க்குலம் படும் அவஸ்தைகளையும் அவற்றுக்கான மக்களின் பங்களிப்பையும் மையமாகக்கொண்டு உரையாற்றினார் மகளிர் அமைப்பின் பணியாளர் ஒருவர்.

ஒரு கலைஞன் பல வடிவங்களில் மக்கள் மத்தியில் இடம் பிடித்துக்கொள்ள முடியும். ஆனாலும், கவலை, மகிழ்ச்சி என்னும் இருபெரும் உணர்வுகளால் மக்கள் மனங்களைத் தொட்டவர்கள் பலர் இருக்கும்போது சிரிப்புடன் சிந்திக்க வைக்கவும் முடியுமென காட்டினார் விகடவிற்பன்னர், லூஸ்மாஸ்டர் புகழ் ஐசாக் இன்பராசா. இவரின் சிரிப்பூட்டிய சிந்தனை நிகழ்வினால் குதூகலித்த மக்களுக்காக 'பாச இசை' பொழிந்தார்கள் ஜேர்மன் தமிழீழ இசைக் குழுவினர். ஜேர்மன் கலைபண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் கண்ணன் அவர்களின் வழிநடத்தலில் பிரமிக்கத்தக்க முறையில் விடுதலைக்கான மழை பொழியப்பட்டது. பாடகர்கள், பாடகிகள் அறிவிப்பாளர்களின் திறமைக்கு மேடையில் கிடைத்தவரவேற்பு சான்றாகும்.

இறுதியில் ஜேர்மன் கலை பண்பாட்டுக்கழகத்தின் சார்பில் பங்குபற்றிய அனைவருக்கும் பூச் செண்டு கொடுத்து கௌரவித்தனர் மகளிர் அமைப்பினர். தங்களுக்கு கிடைக்கப்பெற்ற பூச் செண்டுகளை அனைவரும் ஒன்றாக்கி தமது கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் சிவநாதனிடம் பூக்கொத்தாக கொடுத்து மகிழ்வு கொண்டதுடன், நிகழ்ச்சிகள் யாவும் இனிதே முடிவை எட்டியது.

– சங்கையூர் குமார்

# பலரும் பாராட்டிய பரதநாட்டிய அரங்கேற்றம்!

செல்வி சுஜீவா கருணாகராவின் பரதநாட்டிய அரங்கேற்றம் டென்மார்க்கிலுள்ள கினரப் நகரில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீமதி சிவசக்தி சிவனேசன் குழுவினர் இனிய இசை வழங்க, அரங்கு நிறைந்த மக்கள் கூட்டத்துடன் ஆரம்பமுதல் இறுதிவரை விறுவிறுப்பாக நடந்தேறியது இவ் அரங்கேற்றம். திருமதி சுமித்திரா சுகேந்திராவின் மாணவியாகிய சுஜீவா ஆறு ஆண்டு காலமாகத் தொடர்ந்து நடனக் கலையைப் பயின்று அரங்கேற்ற நிகழ்வினை நிகழ்த்தினார். ஒவ்வொரு பாடலிலும் பொதிந்திருந்த கருத்துக்களை உள்ளபடி புரிந்துகொண்டு, அதற்கேற்ப பாவனைகளைக்காட்டியது அவரின் நடனத்தின் சிறப்பம்சமாக இருந்தது. மீரா பஜனுக்கு அவரது பாவனை சபையின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றது. சிறந்த முறையில் அவருடைய கலை வெளிப்பாடு அமைந்திருந்ததென சங்கீத பூஷணம் அளவையூர் திலகேஸ்வரன் பாராட்டுரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பன்ஹாகன் பல்கலைக்கழக விரிவுரையாளர் அனெமெற்றா, பரதக் கலை பற்றி நுட்பமான விளக்கங்களை வழங்கினார். இவர் பரதக்கலையை இந்தியாவில் பலரிடம் பயின்றவரும், வட இந்திய, தென் இந்தியப் பல்கலைக்கழகங்களில் நடனத்திற்காக பல சிறப்புப் பட்டங்கள் பெற்றவருமாவார்.



நிகழ்ச்சிகளை செல்வி பிரவீணா தனபாலன், கிருஷ்ணா செல்லச்சாமி ஆகியோர் டெனிஷ் மொழியில் மொழிபெயர்த்தனர்.

– கி.செ.

# பேர்லின் புறூல் நகரில் தமிழாலயம் உதயம்

05.09.98 சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புறூல் நகரிலே புதிய தமிழாலய ஆரம்ப வைபவம் ஆசிரியை திருமதி கலாவதி சிறிரஞ்சன் தலைமையில் ஆரம்பமானது. இவ் வைபவத்தை உத.இ. கல்விப் பணிப்



பொறுப்பாளரும் ஆசிரியருமான திரு. இரா. நாகலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்தினார். அவர் பேசுகையில், 'இன்று ஜேர்மனியிலே 100-க்கு மேற்பட்ட தமிழாலயங்கள் நடைபெற்றுவருவதால் தமிழ்ப்பிள்ளைகள் பிறமொழியோடு தாய்மொழி ஆற்றலையும் பெற்றுத் திகழ்வதைக் காண்கின்றோம். இப்போது இவ்விடத்தில் ஓர் தமிழாலயத்தை ஆரம்பிக்க முன்வந்தமை, உங்கள் பிள்ளைகளின் எதிர்காலச்சிறப்புக்கு பெற்றோர் செய்யும் பணியாக அமைகின்றது. இத்தூய பணிக்கு முயற்சியை மேற்கொண்ட ஆசிரியை பாராட்டுக்குரியவர்.

ஜேர்மனியில் தமிழ்ப்பிள்ளைகள் தமிழர் கலாச்சாரத்துடனேயே இருப்பதற்கு தமிழாலயங்கள் வழி காட்டி நிற்கின்றன. தமிழாலய நிர்வாகியாக திருமதி கலாவதி சிறிரஞ்சன் அவர்களும், பெற்றோர் சார்பிலே திருமதி மோகனா புண்ணியமூர்த்தி அவர்களும், ஆசிரியர்களாக செல்வி சுசர்வேஸ்வரி, திருமதி பரிமளாகாந்தி. பரமதாஸ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# கம்போர்க் நகரில் புனர்வாழ்வுக்கலைத்தென்றல்

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஜேர்மனிக்கிளை நகரங்கள் தோறும் நடாத்திவரும் 'புனர் வாழ்வுக்கலைத்தென்றல்' கலை நிகழ்ச்சித் தொடரின், இந்த ஆண்டுக்கான கம்போர்க்நகர நிகழ்ச்சி, சென்ற 05.09.1998 சனிக் கிழமையன்று 'வானெக்' மண்டபத்தில் 17.00 மணிக்கு ஆரம்பித்து நடாத்தப்பட்டது. அறுநூறுக்கும் அதிகமான மக்கள் வருகைதந்து, துயருறும் தமிழீழ மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி, கலைநிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர்.


அமைதிவணக்கத்தை அடுத்து தமிழாலய ஆசிரியை திருமதி சுபத்திரா யோகேந்திரன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். 'தியாகி வானில்...' என்ற தா.சிவநாதன் பாடலை கண்ணன் இசையமைக்க சாவித்திரி இமானுவேல் நடன வடிவமைத்து மேடையில் தந்திருந்தார். விடுதலைக்கனல் நடனங்கள், பரதத்தின் மரபுக்குள் வெளிப்படுத்தப்படக்கூடியதாகச் சில புதிய பாடல்கள் கண்ணனால் இசையமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. விகட விற்பனர் ஐசாக் இன்பராசா அவர்களது நகைச்சுவைக்கதம்பம் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது. தமிழீழம் இசைக் குழுவின் பாச இசை மழை விடுதலைக்கானங்களை இசைத்துப் பலரது பாராட்டையும் பெற்றுக்கொண்டது. இறுதியாக அமுதநதி சுதர்சன் எழுதி, கண்ணன் இசையமைத்த 'வெற்றி நிச்சயம்' என்னும் நாட்டிய நாடகத்தை சாவித்திரி இம்மானுவேல் நடன வடிவமைத்துத் தந்திருந்தார்.

புனர்வாழ்வுக் கழக நகரப் பிரதிநிதி சிவரெத்தினம் அவர்கள் நன்றியுரை வழங்கினார். கலைபண்பாட்டுக்கழக அறிவிப்பாளர் வலன்ரைன், பிறேமினி ரஞ்சித் ஆகியோர் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினர்.

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்மீது நாம் குடியிருக்கும் இக் கூடாரம் தகர்ந்து விழுந்தாலும்
கடவுளிடமிருந்து கிடைத்த வீடு நமக்கு விண்ணில் உள்ளது'

தோற்றம்:
28 – 02 – 1938



மறைவு:
23 – 08 – 1998

## திருமதி மேரிநீற்றா சந்தியாப்பிள்ளை (ராசமலர்)

(ஊர்காவற்துறை)

'சுவாம்பிள்ளை எலிசபேத் (மாணிக்கம்) தம்பதியினருக்கு
28.02.38 அன்று செல்வப் புதல்வி
மேரி நீற்றா ஆனவரே
15 வயதினிலே சந்தியாப்பிள்ளை
மேரி நீற்றா ஆகி நின்று
16 வயதினில் பாதி உலகைத் தாண்டி
தாய்மை அடைந்தீரே
பருவமது முடியுமுன்னே
பத்துப் பிள்ளைகள் எமைப் பெற்றீர்

பத்துப்பேரை வளர்ப்பதற்கு
பல கஷ்ரம் நீங்கள்பட்டு
படிப்படியாய் வளர்த்துவிட்டீர் பருவம் வரை
பாதகரின் பாதிப்பினால் பிரிந்திருந்தோம் வெளியுலகில்
பிரிவிதுவோ நித்திரையென நாமிருந்தோம்
நீங்களோ 23.08.98 அன்று
நித்திரையில் நீங்கி விட்டீர் எம்மை விட்டு
உம் உடலோ இவ் உலகின் மண்ணில்
உம் உயிரோ இறை யேசுவின் இல்லத்தில்'

எம் அன்னையின் நல்லடக்கத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது துக்கத்தில் தொடர்பு கொண்டு கலந்தவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

உங்கள் ஆன்ம இளைப்பாற்றிற்காக வேண்டிக்கொள்ளும்
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# எதிரொலிகள்

## தென்தமிழீழச் செய்திகள் எங்கே?

என் இனிய முரசே!

உனக்கு எனது மனமார்ந்த வணக்கம். உன்னை நான் வாரந்தோறும் என் வீட்டில் வரவேற்பதில் பெருமையடைகின்றேன்.

பல பத்திரிகைகள் படிப்பவன் நான். ஆனால் அவற்றுடன் ஒப்பிடும்போது உன்னில் பலகுறைகள் உண்டு என்பதை நான் அறிந்தாலும் உன்னை வெறுக்க எனக்கு மனம் வரவில்லை. ஏனெனில் உன்னை என் தாயக உணர்வுடன் பார்க்கிறேன்.

உன்னுடைய அரசியல் ஆய்வுத்தொடர் நன்று. ஆனால் குறை என்பதற்கில்லை.

நான் இக்கடிதத்தை எழுதுவதற்கு முக்கிய விடயம் என்னவெனில் உன்னில் வாசகர் கருத்துக்கணிப்பு இரு படிவங்கள் வெளியாகின. அவை இரண்டையும் பார்த்தேன். தொடர்ந்து வெளிவருமா என பார்த்தேன். இரண்டுடன் இடைநிறுத்திவிட்டாய். இப்படி தொடர்ந்து வரும் என எதிர்பார்த்ததினால்தான், நான் இதனுடன் இணைந்த படிவத்தை அனுப்ப தாமதம். மன்னிக்கவும்.

விடயம் என்னவெனில் இங்கு உள்ளவர் தமிழர்கள். தமிழ் ஈழத்தவர். அதில் வட தமிழீழம் - தென்தமிழீழம் என இரண்டு உள்ளது. அதை நீயே சிறுவர் முற்றத்திலும் சொல்லியுள்ளாய். தமிழீழச் செய்தியின் தரம் அறிய ஆசைப்பட்டாய் நன்று. யாழ். செய்தி பற்றி அறிய ஆசைப்பட்டாய். சந்தோஷம். ஏன் தென்தமிழீழச் செய்தி படிக்கும் விருப்பம்பற்றி அறிய உமக்கு எண்ணம் வரவில்லை. ஈழமுரசே நான் வேற்றுமை பார்க்கிறேன் என்று எண்ணிவிடாதே.

நீங்கள் தமிழீழச் செய்தி (பக்கம் 5) என்றும் அதில் யாழ் செய்தி என்றும் அறிய ஆசைப்பட்ட மாதிரி, மட்டக்களப்புச் செய்தி, வன்னிச்செய்தி அல்லது மொத்தமாக தென் தமிழீழச் செய்தி என்று அறிய ஏன் ஆசைப்படவில்லை?

யாழில் பிரச்சினை அதிகம். அதனால் அதைப் படிக்கும் மக்கள் விருப்பம் அறிய என்று சாட்டுப்போக்குச் சொல்ல வேண்டாம். இப்போ மட்டக்களப்பில் நடக்கும் பிரச்சினையை முரசே நீ அறிவாய்!

இதனால் தென் தமிழீழச் செய்தியை படிக்கும் மக்கள் தொகையும் உண்டு என எண்ணி தென் தமிழீழச் செய்தியையும் வெளியிடவும்.

தயவுசெய்து நான் வேற்றுமை பார்க்க விரும்பவில்லை. ஈழமுரசு வேற்றுமை காட்டுகின்றது என்று மற்றவர் கதைக்கக் கூடாது.

ஒற்றுமையை வளர்க்கும் நீயே ஒரக்கண்ணால் பார்க்கலாமா? தென்தமிழீழச் செய்தியை ஈழமுரசில் விரும்பிப்படிக்கும் ஒரு வாசகர், ஈழமுரசு வாசகர் கருத்துக் கணிப்பில் எப்படிக் காட்டுவது. ஏனெனில் நான் தென் தமிழீழச்செய்திகளை விரும்பிப்படிக்கின்றேன்.

எனவே இதை உம்மில் உள்ள அக்கறையில் தான் எழுதுகின்றேன்.

இப்படிக்கு
க. கிருஸ்ணராஜன்.
8262 Ramsen, Swiss.

* * *

## பத்திரிகைகள் பிழையாக எழுதமாட்டாது என்ற நம்பிக்கையை வீணடிக்காதீர்கள்

கனம் ஈழமுரசு ஆசிரியர் அவர்கட்கு!

வாசகர் கருத்துக் கணிப்புப் பற்றி நான் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

பத்திரிகையில் ஒருசில எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள் இருப்பது வழக்கம். ஆனால் வெளிநாடுகளில் இருந்து வெளியாகும் பத்திரிகைகள் இவ் விடயத்தில் சற்று அதிக கவனம் செலுத்த வேண்டும். காரணம் இந் நாடுகளில் வசிக்கும் பிள்ளைகள் தமிழ் கற்றுக்கொள்ள உதவுவது ஒருசில பாடப்புத்தகங்களும், பத்திரிகைகளும்.

சில சொற்கள் பிழை என்று நாம் எடுத்துக் கூறினால் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. பத்திரிகைகளில் பிழையாக எழுதமாட்டார்கள் என்று வாதாடுகிறார்கள். இதனால் தங்கள் பத்திரிகை இந்த விடயத்தில் சற்றுக் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

'சிறுவர் பக்கம்' இன்னும் ஒரு பக்கத்தால் அதிகரிக்கப்பட்டு பத்திரிகையின் நடுப்பக்கமாகவும், இப் பக்கத்தின் பின்பக்கம் விளம்பரப் பகுதியாகவும் இருந்தால், சிறுவர்கள் இப் பகுதியைச் சேகரிக்க உதவியாக உருக்கும். சிறுவர் பக்கத்தில் எமது கலாச்சாரச் சுவடுகளான கும்மி, கோலாட்டம், கூத்து, நாட்டுப்பாடல் போன்றவற்றை வெளியிட்டால் எமது சந்ததியும் இவற்றை அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டும்.

எமது நாட்டுக் கலைகள், வரலாறு, பெரியார்கள், சமயத்தலங்கள் என்பன பற்றி சிறு தொடர்களாக எழுதலாம். பிள்ளைகளுக்கு உலக அறிவைப் பெறுவதற்கு இங்கு பல வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் தாய்மொழி, தாய்நாடு, கலை, கலாச்சாரம் என்பன பற்றி அறியும் வாய்ப்புக்கள் மிகக் குறைவு. இக் குறையைக் கவனத்தில் எடுத்து நிவர்த்தி செய்ய வேண்டியது இங்கு வாழும் ஒவ்வொரு தமிழரதும் கடமையாகும்.

– திசவீரசிங்கம்
ஒஸ்னாபுறூக், ஜேர்மனி

* * *

## கதைதான் குறை

கனம் பத்திரிகை ஆசிரியர் அவர்கட்கு, பணிவுடன் எழுதுவது.

தங்களின் ஈழமுரசு அங்கத்தவன் என்றவகையில் இக் கடிதம் எழுதுகின்றேன்.

இது தங்களுக்கு மேலதிகமாக எழுதுகிறேன். ஒரு நண்பர் கூறினார் ஈழமுரசு வாரம் தவறாமல் வரும் என்று. எனவேதான் தங்களின் அங்கத்தவன் ஆனேன். அதன்படியே ஈழமுரசும் வாரம் தவறாது வந்துகொண்டிருக்கிறது. அதற்கு முதற்கண் நன்றி. தாங்கள் பாரிசிலிருந்து அனுப்புவதால் ஒவ்வொரு வியாழக்கிழமை நம்பிக்கையுடன் பத்திரிகை வரும் என்று நம்பியிருக்கலாம். இதுவே ஈழமுரசின் தனிச்சிறப்பு.

அடுத்து தங்களின் சிறப்பு எமக்கு முன்பு தெரியாத நிகழ்வுகளை, தொடர் கதையாகவும் தரலாம். 'விடியலைத் தேடி' குடத்தனையூர் உதயன் இவரின் தொடர் கதை ஈழப்போராட்டத்திற்கு உந்து துணையாக இருக்கும்.

தங்களின் ஈழமுரசில் தொடர் கதைதான் ஒரு குறை, மற்றது எல்லாம் மிக மிக நன்று. நான் என்றும் தங்களின் அங்கத்தவனாக இருப்பேன். இதற்கு தங்களின் வாரம் தவறாது வீடு வந்துசேரும் ஈழமுரசு.

மீண்டும் சந்திக்கும்வரை வணக்கம் கூறி விடைபெறுகிறேன்.

இப்படிக்கு
வரணியூரான் கி.அருமைத்துரை.
69168 Wies Lods, Germany.

# சித்திரகுப்தனார் பதில்கள்!

க.சிவா
செங்காலன், சுவிஸ்.

என்ன குப்தனாரே நீண்ட நாட்களாக சரத்முனசிங்காவை பத்திரிகைகளில் காணவில்லை?

ஆனையிறவுக்கை புலிகள் எப்ப பாய்வார்கள்? தான் எங்காலை பாயலாம் என்டெல்லோ மனிசன் பாத்துக்கொண்டிருக்குது. இதுக்கை பத்திரிகைகளுக்கு பேட்டிகொடுக்க எங்கை நேரம்?

கி. ரமணன்
பொபினி, பிரான்ஸ்.

சிறீலங்கா அரசு புதிதாகக் கொள்வனவு செய்துள்ள MI—35 உலங்கு வானூர்தி ஜெயசிக்குறுய் படையணிக்கு வெற்றியைத் தேடித்தருமா?

ஜெயசிக்குறுய் வெற்றி பெறுகுதோ இல்லையோ இதைக் கொள்வனவு செய்யப்போன தரகர்கள் கொமிஷன் பெறுவதில் பெரும் வெற்றி அடைந்திருப்பார்கள்.

T. நாதன்
லண்டன்

வன்னியில் உள்ள மக்களுக்கு முற்றாக உணவுத்தடை விதிக்கப்பட்டுள்ளதே? இதற்கு வழி என்ன குப்தா?

புகலிடங்களில் உள்ள மக்கள் தங்கள் உறவுகளுக்காக அதி உச்ச பங்களிப்பை வழங்குவதுதான்.

சிவநாதன்
எசன், ஜேர்மனி.

புகலிடத்தில் பல சிறந்த கலைஞர்கள் இருந்தும், தரமான படைப்புக்கள் ஏன் வருவதில்லை?

அவர்களிடத்தே ஒற்றுமையான பார்வை இல்லாமையே.

ம. தயாளன்
சூரிச், சுவிஸ்.

புகலிடப் புதினமொன்று சொல்லுமன் குப்தனாரே?

ஒன்றா... இரண்டா.. ஏராளமுண்டு. ஒன்று கேட்டபடியால் ஒன்று சொல்கிறேன். தொலைபேசி அட்டைகள் மலிவு விலையில் வந்ததால பொது தொலைபேசியில் எம்மவர்கள் மணிக்கணக்காக நின்று கதைக்கிறார்கள். இதால வேறு நாட்டுக்காரர் பொறுமை இழந்து காலணியைக் கழற்றி காட்டுமளவிற்கு நிலைமை இருக்கிறது.

S. அருண்
லியோன், பிரான்ஸ்.

சித்திரகுப்தனாரே, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் சிறீலங்கா அரசுடன் முரண்படுவதுபோல் தோன்றுகின்றதே?

அவர்கள் எங்கே முரண்படுகின்றார்கள். அரசுடன் இணைந்து வன்னி மக்களுக்கு 'விடுதலை' அல்லவா கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கே. மலர்விழி
பாரிஸ்-18, பிரான்ஸ்.

இங்கு விவாகரத்துக்கள் அதிகரித்துச் செல்கின்றனவே. இதற்குக் காரணம் என்ன?

புகலிட வாழ்வில் பல்வேறு பொருளாதார - மனோவியல் உடலியல் காரணங்களால் விவாகரத்து தூண்டப்படுகின்றது. ஆனாலும், இரு சமனான மனிதர்களுக்கு இடையேயான உறவுதான் திருமணம் என்பதை சம்பந்தப்பட்ட ஆணும் பெண்ணும் நிராகரிக்கும் போது திருமண உறவின் அடித்தளம் உடையத் தொடங்குகின்றது. புகலிட பின்னணி மட்டும் விவாகரத்துக்கான ஒரே காரணியாக இருக்க முடியாது.

த. ராணி
பிராங்பேட், ஜேர்மனி.

எமது இளம் தலைமுறைகள் எங்கள் கலாச்சாரங்களை விட்டு விலகிச் செல்கின்றனரே. அவர்களை இப்படியே விட்டுவிடுவதா குப்தா?

எமது கலாச்சார விழுமியங்களை அவர்களுக்குப் புகட்டுவதன் மூலம் அவர்களை விலகாமல் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு நாங்கள் வழங்க முன்வர வேண்டுமே.

கி. சங்கர்
பாரிஸ்-10, பிரான்ஸ்.

புதிதாகக் கொள்வனவு செய்யப்படும் MI—35 தாக்குதல் உலங்குவானூர்தி, புலிகளின் தாக்குதலில் இருந்து தப்புமா?

அது பறக்கும் திசையைப் பொறுத்தது.


# Radio Asia Canada

24 மணிநேர தமிழ் ஒலிபரப்பு

**ஐரோப்பிய நாடுகளில்:**

Astra Satellite Video Channel 7 இல்
Audio Frequencey : 7.38 mhz
Video Carrier: 11.303 Ghz

**சிற்றலை வரிசை ஒலிபரப்பு:**

Gmt 20:00 -22:00 -15,245 Mhz
GMT 22:00 -24:00-11.960 Mhz
GMT 24:00 -02:00 -9.560 Mhz
GMT 02:00 -04:00 -9:855 Mhz

**அவுஸ்திரேலியா:** 24 மணிநேரம்

Stereo -173.6 Mhz

**தலைமையகத் தொடர்புகளுக்கு:**

**Radio Asia Canada**
680 Progress Avenue. Unit 1
Scarborough, Ontario, M 1H 3A5, Canada.
Tel: 416-289-1522 / Fax: 416-289-1840

மீண்டும் 01.09.98 முதல் உங்கள் திருப்திக்காக


# வூட்லன்ஸ் கோல்

நிமிடங்கள் அதிகரித்துவிட்டன

## தொலைபேசி அட்டை வெளியாகிவிட்டது


60 UN

50 Frs TTC




120 UN

100 Frs TTC




| | |
|---|---|
| இந்தியா.................. | 50 நிமிடங்கள் |
| இலங்கை ............... | 50 நிமிடங்கள் |
| ஐரோப்பா.................. | 70 நிமிடங்கள் |
| பிரித்தானியா........... | 102 நிமிடங்கள் |
| அமெரிக்கா............ | 100 நிமிடங்கள் |
| கனடா...................... | 100 நிமிடங்கள் |

இன்னும் பல நாடுகள் அதிகரிக்கப்படவுள்ளது. நீங்கள் எங்கள் தொலைபேசி அட்டை மூலமாக எவ்வளவு கூடிய நேரம் உரையாடுகின்றீர்களோ அவ்வளவிற்கு ஒவ்வொரு மாதமும் நிமிடங்கள் அதிகரிக்க வாய்ப்புண்டு.

**நிமிடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது**

வர்த்தக ஸ்தாபனங்களுக்கு 15% கழிவுடன் வழங்கப்படும்

| 60un | Local | Vert |
|---|---|---|
| இந்தியா | 26 | 16 |
| இலங்கை | 30 | 16 |
| UK | 50 | 30 |

நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!!

## இலங்கை 50mn இந்தியா 50mn

தொடர்புகளுக்கு: அனைத்து தமிழர் வர்த்தக நிலையங்கள்

**Tel: 0140370820 0680626095/ Fax: 0140372820**

25.09.98 முதல் லண்டன், ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், இத்தாலி, இலங்கை, இந்தியா இன்னும் பல நாடுகளில் இருந்து உரையாடுவதற்கான தொலைபேசி அட்டை வெளியாகிறது.

**விநியோகத்தர்கள் தேவை**
**அரிய சந்தர்ப்பங்களை நழுவவிடாதீர்கள்**

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 1.73 | 0.60 | 5.82 | 1.42 |
| பிராங்பேட் | 0.58 | – | 0.34 | 3.35 | 0.82 |
| லண்டன் | 1.67 | 2.89 | – | 9.70 | 2.38 |
| பாரிஸ் | 0.17 | 0.30 | 0.10 | – | 0.24 |
| சூரிச் | 0.70 | 1.22 | 0.42 | 4.08 | – |
| பம்பாய் | 42.65 | 24.66 | 71.30 | 7.33 | 30.01 |
| கொழும்பு | 66.28 | 38.32 | 110.80 | 11.39 | 46.64 |

# அவுஸ்திரேலிய தமிழ் வேட்பாளர் மீது சிறீலங்கா பொய்ப் பிரசாரம்

அவுஸ்திரேலிய பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் தொழிற் கட்சி வேட்பாளரான நடேசு கைலைநாதனுக்கு எதிராக சிறீலங்கா பிரசார சாதனங்கள் பொய்ப்பிரச்சாரங்களை நடத்தி வருகின்றன. இவரை புலிகள் சார்பு வேட்பாளர் என அவுஸ்திரேலிய பத்திரிகையூடாக குற்றம்சாட்டும் சிறீலங்கா இவர் மீது தொடர்ந்து குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறது.

இவற்றை மறுத்துள்ள கைலைநாதன் சிறீலங்கா அரசை பயங்கரவாதிகள் எனவும் தமிழர்களை விடுதலைப் போராளிகள் எனவும் பகிரங்கமாக கருத்துத் தெரிவித்துள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### வன்னிக்கு....

அண்மையில் கொழும்புப் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியொன்றில், தான் அடுத்தமுறை வன்னிக்குச் செல்லும்போது புலிகளுடன், குறிப்பாக தமிழ்ச் செல்வனுடன் பேச்சுக்களை நடாத்தப்போவதாக தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் தான் பேசாத போது பேசியதாக கதைகளைக் கட்டியுள்ளனர். அடுத்த தடவை செல்லும்போது உண்மையிலேயே அவர்களுடன் பேச்சுக்களை நடாத்திவிட்டுத்தான் வருவேன் என மேலும் தெரிவித்துள்ளார். அடுத்தமாதம் 5-ம் திகதி வன்னிக்கு மீண்டும் செல்ல இருப்பதாகத் தெரிவித்துள்ள ஜயலத் தன்னை கண்காணிப்புச் செய்ய தன்னுடன் இரகசியப் பொலிசாரை அனுப்பலாம் என தான் அரசிற்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.


நவராத்தி தினத்தை முன்னிட்டு

மாபெரும்

மலிவு விற்பனை

20.09.98 முதல் 29.09.98 வரை

அமெரிக்கன் மஞ்சள் அரிசி
உடைத்த பசுமதி அரிசி
மைசூர் பருப்பு
கொண்டல் கடலை (கறுப்பு)
கொண்டல் கடலை (வெள்ளை
சர்க்கரை
வெள்ளை அவல்

சிவப்பு அவல்
மொட்டைக் கறுப்பன் அரிசி
கித்துள் பனங்கட்டி
கஜு
பிளம்ஸ்
கற்கண்டு

மற்றும் மளிகைப் பொருட்களையும் கழிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

மக்கள் கடை

59, Rue Louis Blank, 75010 Paris
M°: La Chaoelle ou Gare du Nord
Tel et Fax: 01 42 05 99 02


(32ம் பக்கத் தொடர்ச்சி)

### விமான....

'ஈழம் நிர்வாகம்' என்ற தலைப்பில் குறிப்பிட்ட தனியார் விமான சேவை நிறுவனம் ஒன்றிற்கு எச்சரிக்கையொன்று அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து அந்நிறுவனத்தின் விமான சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. அவ் எச்சரிக்கையில், தொடர்ந்தும் விமான சேவை யாழ்ப்பாணத்திற்கு இடம்பெற்றால், விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை மேற்கொண்ட சிறீலங்கா பொலிசார், இத் தனியார் விமான நிறுவனத்தால் அண்மையில் சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஒரு யாழ். வர்த்தகரே இக் கடிதத்தை அனுப்பினார் என அறிவித்துள்ளனர்.

## சிறீலங்கா தமிழ் பொலிசார் கைது

மட்டக்களப்பு கருவேப்பம் கேணி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு தமிழ் பொலிசார், சிறீலங்கா உளவுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளுக்காக இவர்கள் உளவு பார்த்தார்கள் என்று குற்றம் சாட்டியே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மிக நீண்ட காலமாக விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக தெரிவித்துள்ள பொலிசார் இவர்கள் மக்களிடம் இலஞ்சம் வாங்கியதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை சர்வதேச அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கந்தையா கனகரட்ணம் கொழும்பில் இருந்து வந்த விசேட புலனாய்வு துறையினரால் கல்முனையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இவர் விடுதலைப் புலிகளுக்கு கைதொலைபேசி வாங்கிக் கொடுத்தார் என கூறியே கைது செய்துள்ளனர்.

### பிரான்ஸ்

### மாவீரரின் பெற்றோர் கவனத்திற்கு!

இவ்வருடம் நடைபெறவிருக்கும் மாவீரர் நாள் நிகழ்வில் எம் தாயக விடுதலையை உயிர்மூச்சாகக் கொண்டு உயிர்நீத்த மாவீரர்களின் பெற்றோர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், பிரான்சில் வாழும் மாவீரர்களின் பெற்றோர்கள் தயவுசெய்து எம் அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அன்றில் உங்கள் பிரதேசங்களிற்கு வரும் எம் காரியாலயப் பிரதிநிகளூடாகவோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
தொலைபேசி: 01 43 58 11 42

CENTRE TAMOUL POUR LES DROITS DE L'HOMME-(CTDH)
TAMIL CENTRE FOR HUMAN RIGHTS-(TCHR)
(Established in 1990)

## அறிவித்தல்

உங்கள் 'அரசியற் தஞ்சத்திற்கான விண்ணப்பம்' ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் நிராகரிக்கப்பட்டு, நீங்கள் நாடு கடத்தப்படும் நிலைக்கு தள்ளப்படுவீர்களானால், தயவுசெய்து உடன் கீழ்க் காணும் முகவரிக்கு, உங்கள் பெயர், விலாசம், அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட காரணம், பிறந்த திகதி, வதிவிட விலாசம், அகதி அந்தஸ்து கோரிய திகதி, நிராகரிக்கப்பட்ட திகதி போன்றவற்றுடன் எழுத்தில் அறிவிக்கவும்.

**குறிப்பு:** இவர்கள் யாருக்கும் ஐரோப்பாவில் வதிவிட விசா வழங்குபவர்கள் அல்ல. ஐரோப்பாவில் உள்ள அரசாங்கங்களின் நியாயமற்ற செயற்பாடுகளை விசாரிக்கும் ஓர் கமிஷன்.

இவர்கள் உங்களுக்கு ஓர் விண்ணப்பப் படிவம் அனுப்புவார்கள்.

தொடர்புகட்கு:
The Secretary
Europan Commission of Human Rights
Council of Europe
67075 Strasbourg Cedex
France
Tel: 33-3-88 41 20 18
Fax: 33-3-88 41 27 92 / 33-3-88 41 27 30

## கண்ணீர் அஞ்சலி



**கனகலிங்கம் மணிவண்ணன்**
(தமிழர் புனர்வாழ்வுக் கழக Hammerfest தொடர்பாளர்)
தோற்றம்: 08.08.1968
மறைவு: 15.09.1998

அன்பு நண்பா !
தாய் நிலம் பிரிந்தாய்
தனக்கென்று வாழ்ந்தாயில்லை
உறவுகளைப் பிரிந்தாய்
ஊர் நினைவு மறந்தாயில்லை

மேலைச் சீமை வந்தபோதும்
கனவு வாழ்வில் கரைந்தாயில்லை
முகமிழந்த ஒப்பனை வாழ்வில்
தமிழ் நினைவை தவிர்த்தாயில்லை

பூவும் பிஞ்சும் வேரும் விழுதுமாய்
வாழிடம் அறியா வாடிய உறவுக்காய்
உன்னால் முடிந்ததை ஒன்றாய் நின்று
செய்தபணி எம் சிந்தையிலாடும்

நினைவுகளை நிறைத்த நேரிய சீலனே
தோழர்கள் சோகம் என்னும் தீரவில்லை
மணமாலைப் பூக்கள் இன்னும் வாடவில்லை
மனையாளின் கண்ணீரோ வற்றவில்லை

*உன் ஆத்மா சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்.*

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நோர்வே.*


AMV
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

# ஈழமுரசு

Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64




மீண்டும்

நல்லூர் படம் பதித்த 'வூட்லண்ட்ஸ் கோல்' தொலைபேசி அட்டைகள் வெளியாகிவிட்டன. மேலதிக விபரங்களுக்கு 30-ம் பக்கம் பார்க்க

N°: Local N°: Vert
இந்தியா - 50 16

N°: Local N°: Vert
இலங்கை - 50 16

100Frs TTC




தொடர்புகளுக்கு:
வூட்லண்ட்ஸ் உணவகம்
207 Rue de Fg. St. Denis, 75010 Paris. Tel: 0140370820


# தமிழர்களை கொழும்பு பத்திரிகைகள் கிரிமினல்களாக்குகின்றது

## - சி.பி.ஏ ஆய்வில் குற்றச்சாட்டு

(21.09.98)

தமிழர்களை கிருமினல்களாகக் காட்டுவதற்கும் அவர்களைச் சந்தேகிப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குமாக தமது பத்திரிகை தர்மத்தை கொழும்புப் பத்திரிகைகள் கைவிட்டுவிட்டன என கொழும்பை மையமாகக் கொண்ட பிரதியீட்டுக்கொள்கை மையம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1997-ம் ஆண்டு 3 மாதர்களைத் தேர்வுசெய்து கொழும்பிலிருந்து வெளிவந்த சிங்கள - ஆங்கில - தமிழ் பத்திரிகைகளை ஆய்வுசெய்த மையம், தமிழ் - சிங்கள மக்களை இன அடிப்படையில் பிரித்து வைப்பதற்கு பத்திரிகைகள் அரசுக்குத் துணை போகின்றன எனக் கூறியுள்ளது.

தமிழர்கள் கைது செய்யப்படும் போது 'பயங்கரவாதிகள்' அல்லது 'புலிகள்' கைது என செய்தி வெளியிடும் பத்திரிகைகள், அத் தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டால் அதுபற்றிச் செய்தி வெளியிடுவதில்லை என சுட்டிக்காட்டிய மையம், சிங்கள மொழிப் பத்திரிகையான திவ்யனவில் வெளிவந்த சில செய்திகளை இதற்கு ஆதாரமாக குறிப்பிட்டுள்ளது.

# நல்லூர் குண்டுவெடிப்புப் பற்றி ஆனந்தசங்கரி குத்துக்கரணம்

தனது வாழ்நாளில் முதல் தடவையாக குண்டு வெடிப்பால் சிதைவுண்ட உடலைப்பார்க்க வேண்டிய துரதிர்ஷ்டம் தனக்கு ஏற்பட்டதாகவும் தனது எதிரிக்குக்கூட இத்தகைய நிலைமை ஏற்படக்கூடாது எனவும் த.வி. கூட்டணியின் உதவித் தலைவர் ஆனந்தசங்கரி இன்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த 15 வருடகாலமாக கடும் குண்டு வீச்சுக்களாலும், எறிகணை வீச்சுக்களாலும் சிதறுண்ட யாழ். நகரின் மேயர் சிவபாலனின் மரணம் தொடர்பாக கூட்டணி சார்பில் அறிக்கைகளையும், பேட்டிகளையும் விடுத்துவரும் ஆனந்தசங்கரி தான் முன்னர் உள்நாட்டு—வெளிநாட்டு பத்திரிகைகளுக்குக் கொடுத்த பேட்டி திரிபுபடுத்தப்பட்டுவிட்டதாக 'கவலை' தெரிவித்துள்ளார்.

தான் யாழ். மேயர் பதவியை ஏற்க தயாராக உள்ளதாக குறிப்பிட்டது உண்மைக்கு புறம்பானது என தற்போது கூறும் ஆனந்தசங்கரி, ஒருவரும் இம் மேயர் பதவியை எடுக்க தயாரில்லாத பட்சத்தில் தான் இப் பதவியை ஏற்க தயார் என்று மட்டுமே கூறினேன். ஆனால் தான் கூட்டணியில் மிக பொறுப்பான பதவி வகிப்பவன், தன்னை அப்பதவியிலிருந்து இழக்க கூட்டணி தயாரில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

# வன்னிக்கு சென்று புலிகளுடன் பேசுவேன் - ஜயலத் ஜயவர்த்தன

வன்னிக்காட்டிற்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு தம்மை கவிழ்க்க சதி செய்வதாக சிறிலங்கா ஜனாதிபதி எமது கட்சியின் மீது பழி சுமத்தியிருந்தார். ஆனால் நான் விடுதலைப் புலிகளைச் சந்திக்கவும் இல்லை, பேச்சுக்களை நடாத்தவும் இல்லை என ஜலத் ஜயவர்த்தன முற்றாக மறுத்திருந்தார்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# கொழும்பில் 'ரம்போ'

கொழும்பில் நவீன ரக துப்பாக்கி போன்று வடிவமைக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றுடன் 'ரம்போ' போன்று தன்னை அலங்கரித்த ஒரு முன்னாள் இராணுவ சிப்பாய் நடமாடி வருகிறார். புலிகளை பழிவாங்கப் போவதாகக் கூறித் திரியும் இவர், பூநகரித் தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட போது, படுகாயப் படுத்தப்பட்ட கோப்ரல் ஈ.லயஸ் என இனம் காணப்பட்டுள்ளார்.

காலியைச் சேர்ந்த இவர் ஒரு மனநோயாளி எனவும் 'ரம்போ' போன்று வேடமணிந்து பொது இடங்களில் சுத்தமிட்டு பாதசாரிகளின் அவதானிப்பையும், ஆர்வத்தையும் தூண்டி வருகிறார் என்வும் கூறப்படுகின்றது.

# உலக வர்த்தக மையத்தில் குண்டு பொலிசார் சதி - வர்த்தக மையம் குற்றச்சாட்டு

கடந்த வியாழக்கிழமை (17.09.98) அன்று கொழும்பு உலக வர்த்தக மையத்தில் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டதாகப் பரப்பப்பட்ட செய்தி தொடர்பாக நடுநிலையான ஆணைக்குழு ஒன்று விசாரணை மேற்கொள்ள வேண்டும் என கொழும்பு உலக வர்த்தக மையம் கோரியுள்ளது.

உலக வர்த்தக மையத்தின் அடித்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப்பில் கிரேனேட்டுகள் நிரப்பப்பட்ட பெட்டிகள் வைக்கப்பட்டிருந்ததாக கொழும்புப் பத்திரிகைக்கு சிறிலங்காப் பொலிசார் அறிவித்திருந்தனர். இச் செய்தி தொடர்பாக உலக வர்த்தக மையம் சந்தேகம் தெரிவித்துள்ளது.

தன்னை இனம்காட்ட விரும்பாத மையத்தின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்த தகவலின்படி, உலக வர்த்தக மையத்திற்கு எதிரேயுள்ள பொலிஸ் நிலையத்தில் இருந்து வந்த நான்கு பேரே குண்டுகளை கட்டடத்தின் அடியில் வைத்தாக குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த வருடம் இக் கட்டடம் பாரிய குண்டுவெடிப்புக்கு உள்ளானது தெரிந்ததே.

# விமான நிறுவனத்துக்கு யாழ். வர்த்தகர் எச்சரிக்கை!

(21.09.98)

கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கு இடையேயான தனியார் விமான சேவை நிறுவனத்திற்கு அண்மையில் விடுக்கப்பட்ட எச்சரிக்கை, பாதிக்கப்பட்ட ஒரு யாழ். வர்த்தகரினால் விடுக்கப்பட்டதாக கொழும்புப் பொலிசார் அறிவித்துள்ளனர்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)


பாரிஸ் லாசப்பலில்

# தர்ஷனா உணவகம்



நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்

23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41